ஆனால் மரணம் ஒவ்வொருவரும் சந்தித்தாக வேண்டிய ஒரு நிகழ்வு. மரண காலத்தைத் தீர்மானிக்கும் சக்தி நம்மிடம் இல்லை என்கிற போது அதை ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும். உடனே தோன்றுகிற இயல்பான துக்கத்தில் இருந்து விரைவாக நாம் மீண்டு எழத்தான் வேண்டும். நடக்க வேண்டிய காரியங்களை சரியாக கவனித்து செயல்பட்டே தீரவேண்டும். இறந்தவர்களுக்காக இருக்கிறவர்களை புறக்கணித்து விடக் கூடாது. அது நியாயமும் அல்ல, விவேகமும் அல்ல. ஆனால் பலர் இந்த துக்கத்தில் இருந்து மீள்வதில்லை. "இந்த மரணம் நியாயமா? சரியான காலத்தில் தான் வந்திருக்கிறதா? " என்பது போன்ற கேள்விகளிலேயே தங்கி விடுகிறார்கள். இந்தக் கேள்விகளுக்கு உலகம் பதிலளிப்பதில்லை.

மரணம் போன்ற இன்னும் எத்தனையோ பெரிய விஷயங்கள் இருக்கின்றன. விபத்துகள், நோய்கள், பெரும் நஷ்டங்கள், மோசமான மாற்றங்கள் எல்லாம் நம் சீரான வாழ்க்கையை சீர்குலைக்கக் கூடும். வந்ததை மறுப்பதால் பிரச்சினைகள் கூடுமே ஒழிய குறையாது. உண்மை நிலையை உணர்ந்து ஏற்றுக் கொண்டால் மட்டுமே தெளிவாக சிந்திக்கவும், செயல்படவும் முடியும். அந்த வகையில் மட்டுமே ஓரளவாவது பாதிப்புகளைக் குறைத்துக் கொள்ள முடியும். யார் காரணம் என்று ஆராய்வதிலும், குற்றப்பத்திரிக்கை தயார் செய்வதிலும், எனக்குப் போய் இப்படி ஆகிவிட்டதே என்று சுயபச்சாதபத்தில் மூழ்குவதிலும் எந்த விதத்திலும் ஒருவருக்கு பயன் கிடைக்காது.

பெரிய விஷயங்களைப் பார்த்தோம். இனி சின்ன விஷயங்களைப் பார்ப்போம். முக்கிய வேலையாகப் போகிறோம். வழியில் ட்ராஃபிக் ஜாம் ஆகிவிடுகிறது. வாகனங்கள் ஆமை வேகத்தில் ஊர்ந்து செல்கின்றன. இது சந்தோஷப்பட வேண்டிய சூழ்நிலை அல்ல தான். ஆனால் சிலர் அந்த நேரத்தில் படும் அவசரமும், அவஸ்தையும் கொஞ்ச நஞ்சமல்ல. புலம்பித் தீர்ப்பதும், குடியே மூழ்கிப் போய் விட்டது போல மன அமைதி இழப்பதும் பலரிடம் நாம் பார்க்க முடிந்த தன்மைகள்.

அந்தப் புலம்பலாலும், அவசரத்தாலும் அந்த நிலைமையை மாற்றி விட முடியுமா? சில நிமிட தாமதங்களால் வாழ்க்கையையே புரட்டிப் போடுகிற நிகழ்வுகள் நிகழ்ந்து விடுமா? சரி செய்யவே முடியாத பேரிழப்பா அது? சில நிமிட சில்லறை அசௌகரியத்திற்கு பலரும் அமைதியிழந்து தவிப்பதும், முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிப்பதும் என்னவொரு அறியாமை? இதைப்பற்றி அதிகம் நினைத்து, இதைப் பற்றியே அதிகம் புலம்பி தானும் வருந்தி சுற்றியுள்ளவர்களுக்கு அந்த மனநிலையை பரப்பி அமைதியை அந்த வட்டாரத்திலேயே இல்லாமல் செய்கிறவர்கள் நிறைய இருக்கிறார்கள். இந்தக் கூட்டத்தில் நீங்களும் இருக்கிறீர்களா என்று பாருங்கள். வாழ்க்கையில் சகிக்க முடியாதவற்றில் மாற்றக் கூடியவை நிறைய உண்டு. அதை மாற்றும் முயற்சியில் மனிதன் ஈடுபட்டதால் மட்டுமே உலகம் இந்த அளவு முன்னேறி இருக்கிறது. மனித சமுதாயம் வளர்ந்துள்ளதற்கும் காரணம் அதுவே. ஆனால் அதே போல மாற்ற முடியாத விஷயங்களும் நிறைய உண்டு. இப்படி மாற்ற முடியாததை ஏற்றுக் கொள்ளும் போது உலகத்துடன் போராடுவதை விட்டு விட்டு, உலகத்துடன் ஒத்துப் போய் சமாளித்து வெற்றி பெறுகிறோம்.

*- என்.கணேசன்*

# கூட்டமைப்பின் சமஷ்டிக் கோரிக்கை உண்மையானதா ?




**கோபி**
*ஒரு பேப்பர்*

இம்மாதம் 17ம் திகதி நடைபெறவிருக்கிற சிறிலங்காவின் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்ற நான்கு கட்சிகளின் கூட்டான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் தமது தேர்தல் விஞ்ஞாபனங்களை வெளியிட்டுள்ளன. தமிழ்த் தேசிய அரசியலில் உள்ள இரண்டு முக்கிய அணிகளான இவையிரண்டும் வடக்கு கிழக்கிலுள்ள எல்லாத் தேர்தல் மாவட்டங்களிலும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ள நிலையில், அவற்றின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் கவனத்திற்குரியவையாக அமைந்துள்ளன.

யூலை 25ம் திகதி மருதனாமடத்தில் நடைபெற்ற கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக்கூட்டத்தில் வெளியிடப்பட்ட அவர்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் 'ஒன்றுபட்ட வடக்கு-கிழக்கு மாகாணங்களின் ஒரு அலகைக்கொண்ட சமஷ்டிக் கட்டமைப்பிற்குள்ளே அதிகாரப்பகிர்வு ஏற்பாடுகள் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்'. எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. 'சமஸ்டிக்கட்சி' (Federal Party) என ஆங்கிலத்தில் அழைக்கப்பட்ட தமிழரசுக்கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சமஷ்டி பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளமை ஆச்சரியப்படக் கூடிய ஒரு விடயமல்ல. இருப்பினும், சமஷ்டி பற்றி குறிப்பிடுவதைத் தவிர்த்து வெறுமனே அதிகாரப் பரவலாக்கம் பற்றிப் பேசிவந்த வந்த கூட்டமைப்பினர் இப்போது அதுபற்றி வெளிப்படையாகப்பேச முற்பட்டிருப்பது 'ஆட்சி மாற்ற' விவகாரத்தில் கூட்டமைப்புடன் அணிசேர்ந்திருந்த தென்னிலங்கை அரசியல் கட்சிகளுக்கு நெருடலைக் கொடுத்துள்ளது. அதேசமயம் இதனை வாய்ப்பாகப் பயன்படுத்தி இராஜபக்சவின் ஆதரவாளர்கள் இனவாத அரசியலை முன்னெடுத்து வருகிறார்கள்.

இவ்விடயம் தொடர்பாக கருத்து வெளியிட்ட பொதுசன ஐக்கிய சுதந்திர முன்னணியின் பிரமுகர் தினேஸ் குணவர்தன, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களது கொள்கைகளுடன் தான் உடன்படாதபோதிலும், அவர் தனது கொள்கைகளில் உறுதியாக இருக்கிறார் எனவும், தேர்தலில் தனித்து ஒரே கொள்கையுடன் களமிறங்கியுள்ள கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை தோற்கடிக்கவே சம்பந்தன் இந்த சமஷ்டி என்ற கடும்போக்கு நிலைப்பாட்டை எடுத்துள்ளார் எனக் குறிப்பிட்டுள்ளார். சிங்களத் தொலைக்காட்சியொன்றில் நடைபெற்றதொரு அரசியல் விவாதத்தில் கலந்து கொண்ட சிறிலங்காவின் உதவி வெளிவிவகார அமைச்சர் அஜித் பெரேராவும் இது போன்ற கருத்தினையே வெளியிட்டுள்ளார். "நல்லாட்சி ஏற்பட்டதன் பின்னர் அரசாங்கத்துடன் உத்தியோகபூர்வமற்ற முறையில் பேச்சுக்களை நடத்தி வந்த சம்பந்தன் உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள் ஒரு நியாயமான அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வு தொடர்பில் காத்திரமான முறையில் கருத்துப் பகிர்வுகளைச் செய்திருந்தனர். ஆனால் தேர்தல் வந்ததும் இம்முறை வழமைக்கு மாறாக ஏனைய தரப்புகளிடமிருந்து போட்டியை எதிர்நோக்குவதால் சமஷ்டி என்ற கோசத்தை முன்வைத்து இனவாத அரசியலை முன்னெடுக்கின்றனர்." என்று குறிப்பிட்டிருந்தார்.

மேற்குறித்த சிங்கள அரசியல்வாதிகள் சரியாக விளங்கி வைத்திருப்பதுபோன்றே, தமிழ்த் தேசிய அரசியலில் கூட்டமைப்புக்கு மாற்றாக உருவாகி வரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினை எதிர்கொள்வதற்கு 'சமஷ்டி' என்ற அஸ்திரத்தை ஏவி விடுவதனைத் தவிர கூட்டமைப்பினருக்கு வேறுவழிவகைகள் தெரியவில்லை போலிருக்கிறது. கூட்டமைப்பினரின் தேர்தல் பரப்புரைகளில் முதன்மையாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் அதன் தலைவர் திரு. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களும் விமர்சிக்கப்பட்டு வருவதிலிருந்து தமிழ்த் தேசிய அரசியலில் முன்னணி ஏற்படுத்திவரும் தாக்கத்தினை கூட்டமைப்பு நன்கு உணர்ந்துள்ளமை தெரிகிறது.

கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பாக மேற்கத்தைய தரப்புகளிலிருந்து கருத்து எதுவும் வெளிவந்ததாகத் தெரியவில்லை. ஆனால் சிங்களத்தரப்பினர் போன்ற விமர்சனங்கள் அவர்களிடமிருந்து வருமாயின் அதனை எதிர்கொள்வதற்காக கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில், 2002ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது இரண்டுதரப்புகளும் கவனத்தில் எடுப்பதாக இணங்கிக்கொண்ட ஒஸ்லோ அறிக்கை (Oslo Communiqué) பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. 'ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்விடப் பகுதிகளில் உள்ளக சுயநிர்ணய உரிமைக் கொள்கையின் பிரகாரம் சமஷ்டிக் கட்டமைப்பின் அடிப்படையிலமைந்த தீர்வொன்றை ஆராய்தல்' என்ற விடயத்தில் சிறிலங்கா அரசதரப்பும் விடுதலைப்புலிகளும் இணங்கியிருந்தனர். இவ்விடயத்தில் இணைத்தலைமை நாடுகளும் வேறும் பல நாடுகளும் உடன்பட்டன எனக் கூறப்படுகிறது. இருப்பினும், கடந்த ஆறு வருடங்களில் எந்தவொரு சர்வதேசத் தரப்பும் இலங்கைத் தீவு விடயத்தில் சமஸ்டித் தீர்வு பற்றி வாய்திறக்கவில்லை என்பது கவனத்திற்குரியது. ஒஸ்லோ அறிக்கை வெளிவந்த காலத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த திரு. கஜேந்திரகுமார் உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான சமஸ்டித் தீர்வினை நிராகரித்திருந்தார். அதுபோன்று தேசியத்தலைவர் அவர்களும் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை என்ற விடயத்தையும் தகவலுக்காக இங்கு குறிப்பிடவிரும்புகிறேன்.

தமிழ்மக்களுக்கான இறுதித் தீர்வாக சமஸ்டித் தீர்வைப்பற்றி கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் குறிப்பிடுகிற நிலையில், இறுதித்தீர்வினை 2016 ம் ஆண்டில் பெற்றுவிடுவோம் என கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அண்மையில் திருகோணமலையில் நடைபெற்ற கூட்டமொன்றில் அறிவித்திருக்கிறார். கூட்டமைப்பின் தீவிர விசுவாசிகளே நம்ப மறுக்கிற இவ்விடயம் சாத்தியமானதுதானா? கூட்டமைப்பு உண்மையிலேயே சமஸ்டித் தீர்வினை நோக்கி நகர்கிறதா? என்ற கேள்விகளுக்கு விடைகாணுதல் அவசியமாகிறது. கடந்தகாலப் பட்டறிவிலிருந்து, கூட்டமைப்பினர் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஒன்றைக் குறிப்பிட்டுவிட்டு, அதிலிருந்து விலகி வேறொரு நிலைப்பாட்டிற்குச் செல்லமாட்டார்கள் எனக் கூற முடியாதுள்ளது. அவ்வாறு செய்தாலும் தாம் சாத்தியமானதை ஏற்றுக்கொள்ளும் நடைமுறையைக் (prgamatic approach) கடைப்பிடிப்பதாகக் கூறி எழும் விமர்சனங்களை அவர்கள் இலகுவில் கடந்து சென்றுவிடுவார்கள். இருப்பினும் இன்னும் 16 மாத காலத்தில் சமஷ்டித் தீர்வு ஏற்படுவதற்கான சாத்தியப்பாடுகள் காணப்படுகிறதா என்பதனைப் பார்ப்போம்.

கடந்த மே மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற திரு. கஜேந்திரகுமாருடனான பகிரங்க விவாதத்தில் மைத்திரி-ரணில் அரசாங்கம் பொதுத் தேர்தலின் பின்னர் புதிய அரசியலமைப்பைக் கொண்டுவரவிருப்பதாகவும் அது ஒற்றையாட்சி முறையாக அமையாது என்ற கருத்தினை திரு. சுமந்திரன் வெளியிட்டிருந்தார். இதுவிடயமாக தமக்கிடையே எழுதப்படாத 'இதயங்களுக்கிடையிலான உடன்பாடு' எட்டப்பட்டுள்ளதாகவும் அதன் விபரங்களை பொதுத் தேர்தலுக்கு முன்னர் மக்களுக்கு அறிவிக்கவிருப்பதாகவும் அவர் தெரிவித்திருந்தார். இன்னும் பத்து நாட்களில் தேர்தல் பரப்புரை முடிவுக்குவரவுள்ள நிலையில், இதுவரை அவ்வாறான தகவல்கள் எதனையும் கூட்டமைப்பினர் வெளியிடவில்லை. ஆனால் சமஸ்டித் தீர்வினை சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஜக்கியதேசியக் கட்சி, ஜாதிக ஹெல உருமய, ஜே.வி.பி. என அனைத்து சிங்களக் கட்சிகளும் நிராகரித்துள்ளன. இந்நிலையில், நேற்றைய தினம் (ஓகஸ்ட் 6ம் திகதி) யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் திரு.சுமந்திரன் புதிய விளக்கத்தினை அளித்துள்ளார். சிங்கள அரசியல்வாதிகளின் சமஷ்டிக்கு எதிரான கருத்து தேர்தலில் சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்ளவதற்கானது என்று குறிப்பிட்ட அவர், இவர்களது ஆதரவின்றி சர்வேதேசத்தின் ஆதரவுடன் தாம் சமஷ்டித் தீர்வினைப் பெற்றுக் கொள்ளவிருப்பதாகக் கூறியிருக்கிறார். இச்சந்திப்பில், பத்திரிகையாளர் ஒருவர் கேட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில், கூட்டமைப்பில் இருபது உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால் தங்களுடைய கோரிக்கையை அரசாங்கம் நிராகரிக்க முடியாது என்று வேறு கூறியிருக்கிறார் சுமந்திரன். (ஈசா, இந்த மாயமான எண்ணிக்கையான 20 இல் உள்ள தர்க்க நியாயம் உனக்குத் தெரிந்தால் சொல்)

அரசியல் அமைப்பை மாற்றுவது பற்றி மைத்திரிபால தரப்பு மட்டுமல்ல மகிந்த தரப்பும் பேச ஆரம்பித்திருக்கிறது. மைத்திரிபாலவின் ஜனவரி 8 ஆட்சிமாற்றத்தில் கூட்டுச் சேர்நத தரப்புகள் அரசியலமைப்பு மாற்றம் பற்றி ஏற்கனவே பேச ஆரம்பித்துள்ளன. மைத்திரியின் ஆலோசகர்களான கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்தன, சட்டத்தரணி வெலியமுன்ன போன்றவர்களும் தமிழர் தரப்பும் கலந்துகொண்ட சிங்கப்பூர் பேச்சுவார்த்தைகளிலும் புதிய அரசியலமைப்புபற்றி பேசப்பட்டதாகத் தெரிகிறது.

ஊடகங்களில் வெளியாகிய சிங்கப்பூர் பிரகடனம் (Singapore Principles) தொடர்பான தகவல்களிலிருந்து இப்பேச்சுவார்த்தைகளில் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் காணப்படும் சமஸ்டி, சுயநிர்ணய உரிமை, பகிரப்பட்ட இறைமை போன்ற விடயங்கள் காணப்படவில்லை. அங்கு பேசப்பட்ட புதிய அரசியல் அமைப்பு தொடர்பான யோசனைகளிலும் இவை உள்ளடக்கப்படவில்லை என இப்பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்ட தமிழ் அமைப்பின் பிரதிநிதி ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளார். மாறாக 'சிறிலங்கா சமூகத்தின் பன்முக குணாதிசயங்களும் அவற்றைப் போலவே அதில் அடங்கியுள்ள மக்கள் குழுமங்களினதும் அடையாளங்கள் மட்டுமல்லாது அவர்களுடைய அபிலாசைகளும் அரசியலமைப்பு ரீதியாக அங்கீகரிக்கப்பட வேண்டும்' என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. நல்லாட்சி, ஜனநாயக முறையினைப் பேணுதல், அரசியல் தலையீடின்றி செயற்படும் சுயாதீனமான கட்டமைப்புகளை உருவாக்குதல் போன்ற விடயங்கள் புதிய அரசியல் அமைப்புப் பற்றிய பரிந்துரைகளில் காணப்படுகின்ற போதிலும், ஒற்றையாட்சி முறையினை மாற்றுவது தொடர்பான எந்தக் குறிப்பினையும் காண முடியவில்லை.

இவற்றை வைத்துப் பார்க்கையில் கூட்டமைப்பின் சமஸ்டிக் கோரிக்கை என்பது வெறுமனே தமிழ்மக்களின் வாக்குகளை பொறுக்குவதற்கான தேர்தல்கால வெற்றுக்கோசமே தவிர வேறொன்றுமில்லை என்பது தெளிவாகிறது.

கருத்துக்களுக்கு -
facebook.com/orupaper @orupaper

ஒரு பேப்பர்
கிடைக்குமிடங்கள்

**New Malden**
Ayngaran ............... 020 8949 6734
Megaa Superstore .. 020 8336 0061
Vaaniyan ............... 020 8605 0434
Murugan Kovil ....... 020 8942 4475
Vaishna Superfoods 020 8399 4488
Stoneleigh Amman . 020 8393 8147

**Tooting**
Yhaal House ........... 020 8767 8585
Selvarajah Gold house 020 8767 3795
Niru Con.Store ........ 020 8672 3200
Ayngaran ............... 020 8540 1500
Suvai Aruvi............. 020 8543 6266
Adchaya ................ 020 8540 8192

**Croydon**
Best Foods.............. 020 8684 6269
Haran Bros.............. 020 8686 2552
Chennai dosa ......... 020 8665 9192
Eelam Video............ 020 8664 8351
Spice Land.............. 020 8667 1700

**Lewisham**
Chandra .................. 020 8333 8680
Eelam Shop ............ 020 8690 6545
Katpagam .............. 020 8694 8810
AJ Video ................. 020 8691 8888
Sivan Kovil ............ 020 8318 9844
KRS Supermarket... 020 8297 9432
Best Food .............. 020 8692 9811

**Eastham**
Seelans................... 020 8471 5733
Sakthi Cash & Carry 020 8394 4560
Murugan Temple..... 020 8478 8433
Station Super Store 020 8503 4711
Best Food .............. 020 8552 9578
Saiva Munneta Sangam 02085144732
Akilan Enterprise .... 020 8548 0033
Anjappar ................. 020 8552 1155

**Ilford**
Vinnayagar Kovil..... 020 8911 8934
Nathan.................... 020 8514 1744
Angels .................... 020 8553 0490
Sri store ltd ........... 020 8553 7737

**Edmonton**
New Kannan Stores 020 8884 4979
Sayas...................... 020 8805 9529
Nagapoosani Temple020 8884 3333

**Walthamstow**
Vinayagar Kovil....... 020 8527 3819
Kumarans ............... 020 7609 1912
Prabas ................... 020 8509 3322

**Harrow**
Tsk food & Wine ..... 020 7622 4258
North Harrow C&C .. 020 8863 6160
Prabhas ................. 020 8866 0977
South Harrow F&W. 020 8423 6321
Best foods.............. 020 8423 9933
Sambal Express...... 020 8799 7171

**Wembley**
Malar Super Market 020 8795 5797
Ganapathy C & C.... 020 8795 4627
Best foods.............. 020 8900 0100
Vahizan Disc.......... 020 8795 0648

**Ealing**
Amman kovil........... 020 8810 0835

**Greenford**
Ambiha ................... 020 8813 0967

**Coventry**
Eellakanthan Temple...02476663554

**South hall**
Thamilini C & C....... 020 8606 9900
Abi Fast Food ......... 0208 813 9494
Palm Palace Restaurant 020 8574 9209
Spicy Palace Restaurant 020 8574 4087
Luxmys C & C......... 020 8571 4599
Tamilan C & C......... 020 8561 8174
Lady Margret.......... 020 8571 4434

உ

சர்வம் சிவமயம் ஜகத்



# இலண்டன் திருவருள் மிகுஸ்ரீசிவன் திருக்கோயில்

## மஹோற்சவ விழா விஞ்ஞாபனம்

*சிவனடியார்களே! அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகராக விளங்குகின்ற எம்பிரானாகிய சிவபெருமான் ஆன்மாக்கள் மீதுள்ள அளப்பெரும் கருணை காரணமாக திருவுருவம் தாங்கி திருக்கோயில்களில் வீற்றிருந்து பஞ்ச கிர்த்தியங்கள் மூலம் இன்னருள் பாலித்து அருளாட்சி புரிந்து வருகிறார். இவ்வகையில் நீர்வளம், நிலவளம், மலைவளம் என்னும் சகல வளங்களும் நிரம்பப் பெற்ற சுவர்ணபூமியாகிய இங்கிலாந்து தேசத்திலே சைவமும், தமிழும் வளர்ச்சி பெற்று திருமகளின் திருவருட் பார்வையுடன் சிறப்பாக விளங்கும் லூயிஷம் பகுதியில் மூர்த்தி தலம் தீர்த்தம் என்னும் பெருமைகளுடன் சிவபுரம் என்னும் தமிழ் நாமமுடைய புண்ணிய ஷேத்திரமாகிய சிவராஜதானியில் எம்பிரானாகிய இறைவன் ஸ்ரீஅபீதகுஜாம்பாள் சமேத ஸ்ரீஅருணாசலேஸ்வரப் பெருமான் கருங்கல்கோயில் கொண்டருளி ஆன்மாக்களைக் காப்பாற்றி வருகிறார். கருணாமூர்த்தியாகிய எம்பெருமானது வருடாந்தரப் பெருவிழாவாகிய பிரம்மோற்சவம் எனப்படும் மஹோற்சவ விழாவானது இவ்வருடம் ஐந்தாவது ஆண்டுப் பெருவிழாவாக நடைபெறுவதற்கு இறைவனது பேரருள் கைகூடியுள்ளது. எனவே இவ்விழா நிகழும் சர்வ மங்களகரமான மன்மதவருஷம், தஷிணாயணம், வர்ஷருது, ஆவணிமாதம் 12ம் நாள் (28.08.2015) வெள்ளிக்கிழமை துவஜாரோகணம் என்னும் கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகி ஆவணிமாதம் 29ம் நாள் (14.09.2015) திங்கட்கிழமை தீர்த்தோற்சவத்துடன் பூரணத்துவம் பெறவுள்ளது. எனவே அடியார்கள் யாவரும் ஆசார சீலர்களாக ஆலயம் வந்து மகா உற்சவமாகிய இப் பெருவிழாவையும் அதற்கு முன்பின் நிகழவிருக்கும் அனைத்துப் பூஜா கைங்கர்யங்களையும் தரிசித்து அஞ்ஞானம் அகன்று மெய்ஞ்ஞானம் பெற்று பரம்பொருளாகிய ஸ்ரீஅருணாசலேஸ்வரப் பெருமானது கிருபையோடு பெருவாழ்வு வாழ்வீர்களாக!*

### நிகழும் மன்மதவருஷம் ஆவணி 11ம் நாள்

**27.08.15 வியாழன்: "பிள்ளையார் திருவிழா"**

மாலை 5.00 மணி விநாயகப் பெருமானுக்கு விசேட அபிஷேகம் ஆரம்பம் – ஸ்ரீமஹாகணபதிஹோமம்.
மாலை 6.00 மணி – தீபாராதனை
இரவு 6.00 மணி – மஹோற்சவ பூர்வாங்கக் கிரிகைகள் ஆரம்பம்
இரவு 6.45 மணி – வசந்தமண்டப விசேஃ சோடசோபசார தீபாராதனை
இரவு 7.15 மணி – விநாயகப் பெருமான் திருவீதி எழுந்தருளல்
இரவு 8.15 மணி – சுவாமி இருப்பிடம் அமர்தல்
இரவு 9.00 மணி – அர்த்தஜாமப் பூஜை

**28.08.15 வெள்ளி: துவஜாரோகணவிழா(கொடியேற்றம்)**

காலை 6.00மணி – சுவாமிகளுக்கு விசேட அபிஷேகம் ஆரம்பம்;
காலை 8.00மணி – தீபாராதனை
காலை 8.30மணி – வசந்த மண்டப விசேட சோடசோசார தீபாராதனை
வேத ஸ்தோத்திர திருமுறை பாராயணங்கள்
காலை 10.00மணி – கொடியேற்றம் சுவாமி திருவீதி எழுந்தருளல் சந்திஆவாஹணம்
பகல் 12.30மணி – அன்னதானம்
மாலை 5.30மணி – நித்திய பூஜை
மாலை 6.00மணி – ஸ்தம்ப பூஜை
இரவு 6.30மணி – வசந்த மண்டப விசேட தீபாராதனை
இரவு 7.15மணி – சுவாமி திருவீதி எழுந்தருளல்
இரவு 8.15மணி – சுவாமி இருப்பிடம் அமர்தல்
இரவு 9.00மணி – அர்த்த ஜாமப் பூஜை – திருக்காப்பு

**29.08.2015 சனிக்கிழமை தொடக்கம் 12.09.2015 சனிக்கிழமை வரையும்**

காலை 8.00மணி – சுவாமிகளுக்கு விசேட அபிஷேகம் சங்கல்ப்பம்
பகல் 9.30மணி – தீபாராதனை
பகல் 10.00மணி – ஸ்தம்ப பூஜை
பகல் 11.00மணி – வசந்த மண்டப விசேட தீபாராதனை,பாராயணங்கள்
பகல் 11.30மணி– சுவாமி திருவீதி எழுந்தருளல்
பகல் 1.00மணி – அன்னதானம்
மாலை 5.00மணி – நித்திய பூஜை
மாலை 5.30மணி – ஸ்தம்ப பூஜை
இரவு 6.30மணி – வசந்த மண்டப விசேட தீபாராதனை
இரவு 7.15மணி – சுவாமி திருவீதி எழுந்தருளல்
இரவு 8.15மணி – சுவாமி இருப்பிடம் அமர்தல்
இரவு 9.00மணி – அர்த்த ஜாமப் பூஜை – திருக்காப்பு

**13.09.15 ஞாயிற்றுக்கிழமை ரதோற்சவம் (தேர்த்திருவிழா)**

காலை 5.00மணி – சுவாமிகளுக்கு அபிசேகம்; ஆரம்பம்
காலை 6.30மணி – தீபாராதனை
காலை 7.00மணி – ஸ்தம்ப பூஜை
காலை 8.00மணி – வசந்த மண்டப விசேட தீபாராதனை, பாராயணங்கள்
காலை 9.00மணி – சுவாமி திருவீதிஎழுந்தருளல்
பகல் 10.00மணி – தேர்த்திருவுலா ஆரம்பம்
பகல் 12.00மணி – தேர் சிவசந்நிதானம் வந்தடைதல் – அர்ச்சனைகள், அன்னதானம்
பகல் 2.00மணி – பச்சை அலங்காரம் – சுவாமி ஆலயம் வந்தடைதல். அபிசேகம், பஞ்சமுகார்ச்சனை
இரவுத்திருவிழா வழமையான நேரத்தின்படி நடைபெறும்.

**14.09.15 திங்கட்கிழமை தீர்த்தோற்சவம் (தீர்த்தத்திருவிழா)**

காலை 6.00மணி – சுவாமிகளுக்கு அபிசேகம் ஆரம்பம்
காலை 8.00மணி – தீபாராதனை
காலை 8.30மணி – ஸ்தம்ப பூஜை
பகல் 9.00மணி – சூர்ணோற்சவம்
பகல் 9.30மணி – வசந்த மண்டப விசேட தீபாராதனை – பாராயணங்கள்
பகல் 10.30மணி – தீர்த்தோற்சவத்திற்கு சுவாமி எழுந்தருளல்
தொடர்ந்து யாககும்ப அபிசேகம் – திருவருட்பிரசாதம்
பகல் 1.00மணி – அன்னதானம்
மாலை 5.00மணி – நித்திய பூஜை
இரவு 5.30மணி – வசந்த மண்டப விசேட தீபாராதனை, பாராயணங்கள் – திருவூஞ்சல்
இரவு 7.00மணி – துவஜஅவரோகணம் (கொடிஇறக்கம்)
தொடர்ந்து சந்திவிஸர்சனம், மௌனோற்சவம், சண்டேஸ்வரர் உற்சவம், ஆச்சார்ய உற்சவம், திருவருட்பிரசாதம்
இரவு 9.00மணி – அர்த்த ஜாமப் பூஜை – விழா பூரணத்துவம்

**15.09.15 செவ்வாய்க்கிழமை – பிராயச்சித்த அபிஷேகம்**

காலை 10.00மணி – அபிசேகம் ஆரம்பம்
பகல் 12.00மணி – தீபாராதனை
பகல் 1.00மணி – அன்னதானம
இரவு 6.00மணி – நித்திய பூஜை
இரவு 7.15மணி – வசந்த மண்டப விசேட தீபாராதனை, சுவாமி; திருவீதி எழுந்தருளல்
இரவு 9.00மணி – அர்த்த ஜாமப் பூஜை – திருக்காப்பு

**16.09.2015 புதன்கிழமை – பூங்காவனத்திருவிழா**

மாலை 5.00மணி – அபிசேகம் ஆரம்பம்
மாலை 6.00மணி – நித்திய பூஜை
இரவு 6.30மணி –ஸ்ரீசந்திரசேகரப்பெருமானுக்குதிருக்கல்யாணம் ஆரம்பம். சுவாமி பூங்காவனத்தில் எழுந்தருளல், திருவீதியுலா.
இரவு 9.00மணி – அர்த்த ஜாமப் பூஜை – திருக்காப்பு

**17.09.2015 வியாழக்கிழமை மாலை 4.00 மணி – நவோத்தரசதகலசசங்காபிசேகம் (109கலச சங்குகள்)ஆரம்பம்**

இரவு 6.00மணி – நித்தியதீபாராதனை
இரவு 7.15மணி – வசந்தமண்டபவிசேஃதீபாராதனை – சுவாமி; திருவீதி எழுந்தருளல்
இரவு 9.00மணி – அர்த்த ஜாமப் பூஜை – திருக்காப்பு

**18.09.15 வெள்ளிக்கிழமை ஸ்ரீபைரவர் பொங்கல் விழா**

மாலை 5.00மணி – ஸ்ரீபைரவப் பெருமானுக்கு விசேட அபிசேகம் ஆரம்பம்
மாலை 6..30மணி –தீபாராதனை
இரவு 7.15மணி – வசந்த மண்டப விசேட தீபாராதனை பாராயணங்கள்
ஸ்ரீபைரவப் பெருமான் திருவீதி எழுந்தருளல்
இரவு 9.00மணி – அர்த்த ஜாமப் பூஜை, திருக்காப்பு

---

27.08.15 வியாழன் – பிள்ளையார் திருவிழா
(சர்வாஞ்சலி உற்சவம்) திரு. ஞ. ராஜேஸ்வரன் குடும்பம்)
28.08.15 வெள்ளி – கொடியேற்று விழா நாகவாகனத் திருவிழா
(நர்த்தனாஞ்சலி உற்சவம்) திரு. ஞ. யோகானந்தன் குடும்பம்
(பகல், இரவுத்திருவிழா)
29.08.15 சனி – 2வது நாள் திருவிழா (புஷ்பாஞ்சலி உற்சவம்)
திரு. Dr. S. சோமசேகரம் குடும்பம் (பகல்திருவிழா),
திரு. V. ஸ்ரீபாஸ்கரன் குடும்பம் (இரவுத் திருவிழா)
30.08.15 ஞாயிறு – 3வது நாள் திருவிழா (கீதவாத்திய உற்சவம்)
திரு. S. மயில்வாகனம் குடும்பம் (பகல் திருவிழா)
திரு. S. மகீதன் குடும்பம் (இரவுத் திருவிழா)
31.08.15 திங்கள் – 4வது நாள் திருவிழா (பிரணவமந்திர உபதேச உற்சவம்)
திரு. A. செல்வராஜா குடும்பம் (பகல் திருவிழா)
திரு. A. சந்திரகுமார் குடும்பம் (இரவுத் திருவிழா)
01.09.15 செவ்வாய் – 5வது நாள் திருவிழா (நந்திவாத்திய உற்சவம்)
திரு. S. பேரானந்தாஈஸ்வரன்; குடும்பம், திரு. S. புஸ்பராசா குடும்பம்,
திரு. A. செல்வராசா குடும்பம், திரு. ஞ. கோணேஸ்வரன் குடும்பம் (பகல்)
திரு. K. நாகேஸ்வரன் குடும்பம் (இரவுத் திருவிழா)
02.09.2லி புதன் – 6வது நாள் திருவிழா (வேங்குழல் உற்சவம்)
திரு. Dr. S. ராஜசுந்தரம் குடும்பம் (பகல் திருவிழா)
திரு. S. தேவதாஸ் குடும்பம் (இரவுத் திருவிழா)
03.09.15 வியாழன் – 7வது நாள் திருவிழா (சப்தசுர உற்சவம்)
திரு. S. விக்னேஸ்வரன் குடும்பம் (பகல் திருவிழா) ஸ்ரீபாலா குடும்பம்
திரு. S. ஜெகதீஸ்வரன் குடும்பம் (இரவுத் திருவிழா)
04.09.15 வெள்ளி – 8வது நாள் திருவிழா (கிருஷ்ணகெந்தோற்சவம்)
திரு. S. தீலிபன் குடும்பம் (பகல் திருவிழா)
திரு. S. சுகுமார் குடும்பம் (இரவுத் திருவிழா)
05.09.15 சனி – 9வது நாள் திருவிழா (வேதபாராயண உற்சவம்)
திரு. Dr. S. சிவதாசன் குடும்பம் (பகல் திருவிழா)
திரு. Dr. S. நவரத்தினம் குடும்பம் (இரவுத் திருவிழா)
06.09.15 ஞாயிறு – 10வது நாள் திருவிழா (திருமுறைபாராயண உற்சவம்)
திரு. Dr. T. ஸ்ரீஸ்கந்தராஜா குடும்பம் (பகல் திருவிழா)
திரு. K. நிர்மலன் குடும்பம் (இரவுத் திருவிழா)
07.09.2லி திங்கள் – 11வது நாள் திருவிழா (வசந்தோற்சவம்)
திரு. ரதீஷ்குமார் குடும்பம் (பகல் திருவிழா)
திரு. K. சிவஞானம் குடும்பம் (இரவுத் திருவிழா)
08.09.15 செவ்வாய் – 12வது நாள் திருவிழா (பக்தி முக்திபாவனோற்சவம்)
திரு. A. பூபாலசிங்கம் குடும்பம் (பகல் திருவிழா)
திரு. திலீப்காந் கணேசமூர்த்தி, ஜெயகாந் கணேசமூர்த்தி குடும்பம் (இரவு)
09.09.15 புதன் – 13வது நாள் திருவிழா (கைலாசவாகன உற்சவம்)
திரு. R. குமாரதாஸ் குடும்பம் (பகல் திருவிழா) திரு. P. தங்கராஜா குடும்பம் (இரவுத் திருவிழா)
10.09.15 வியாழன் – 14வது நாள் திருவிழா (மாம்பழ உற்சவம்)
யாழ்/ வட்டுக்கோட்டை மக்கள் (பகல், இரவுத் திருவிழா)
11.09.15 வெள்ளி – 15வது நாள் திருவிழா (வேட்டை உற்சவம்)
குதிரைவாகனத் திருவிழா
திரு. N. சிவதாசன் குடும்பம் (பகல் திருவிழா)
திரு.P. தர்மரூபன் குடும்பம் (இரவுத் திருவிழா)
12.09.15 சனி – 16வது நாள் திருவிழா (சப்பற உற்சவம்)
முல்/புதுக்குடியிருப்பு மக்கள் (பகல் திருவிழா)
முல்/ புதுக்குடியிருப்பு மக்கள் (இரவுத் திருவிழா)
13.09.15 ஞாயிறு – 17வது நாள் திருவிழா ரதோற்சவம் (தேர்)
சிவனடியார்கள் (பொது உபயம்) பகல், இரவுத் திருவிழா)
14.09.15 திங்கள் – 18வது நாள் திருவிழா தீர்த்தோற்சவம் (தீர்த்தத்திருவிழா)
திரு. G. மனோகரன் குடும்பம் (பகல் திருவிழா)
திரு. S. தங்கத்துரை குடும்பம் (இரவுத் திருவிழா)
15.09.15 செவ்வாய் – பிராயச்சித்த அபிசேக திருவிழா
திரு. மோகனராஜன் குடும்பம் (பகல், இரவுத் திருவிழா)
16.09.15 புதன் – பூங்காவனத் திருவிழா
(ஸ்ரீசந்திரசேகரப் பெருமான் திருக்கல்யாணம்)
திரு. S. பரமேஸ்வரன் குடும்பம் (இரவுத் திருவிழா)
17.09.15 வியாழன்–நவோத்தரசதகலச சங்காபிஃகம்
திரு. S. பகீரதன் குடும்பம் (இரவுத் திருவிழா)
18.09.15 வெள்ளி – ஸ்ரீ பைரவர் பொங்கல்விழா – (இரவுத் திருவிழா)
திரு. T. உதயகுமார் குடும்பம், திரு. சு. உதயணன் குடும்பம்,
திரு. N. விஜயகுமார் குடும்பம்

**குறிப்பு: மஹோற்சவ காலங்களில் விசேட தீபாராதனை, கிரியாவிளக்கம், கலைநிகழ்ச்சி என்பன நடைபெறும். தேர்உற்சவம் பொது உபயமாகும். எனவே அடியார்கள் இதில் பங்குபற்ற விரும்பினால் உங்கள் நட்சத்திரம் பெயர் என்பனவற்றை முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும். சிவாலயம் வருக! சிவனருள் பெறுக!**

**'சிவபுரம் மேவும் அருணாசல சிவன்தாள் சரணம் சரணம்.' இங்ஙனம் - ஆலய அறங்காவலர் சபை-இலண்டன் சிவன் கோயில்**

**LONDON SIVAN KOVIL TRUST 4A, Clarendon Rise, Lewisham, London SE13 5ES Tel: 020 8318 9844 Fax: 020 8318 2108**

# நாடாளுமன்றத் தேர்தலின் பின்: ஏமாறப் போகிறோமா ? தற்காக்கப் போகிறோமா ?





**கலாநிதி சர்வேந்திரா தர்மலிங்கம்**
*(ஒரு பேப்பருக்காக)*

இம்மாதம் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களிக்கும் போது தேர்தல் காலத்தில் முன்வைக்கப்படும் கருத்துகள், வாதங்கள், பரப்புரைகளைக் கடந்து தேர்தலின் பின் நடைபெறக்கூடிய விடயங்களையும் கவனத்திற் கொள்ள வேண்டியது மிகவும் முக்கியமானதாகும். அவ்வாறு பின்னர் நடைபெறக்கூடியவற்றையும் முன்னுணர்ந்து வாக்களிக்க எமது மக்கள் தவறுவார்களாயின் அதற்கான விலையினை ஈழத் தமிழ் மக்கள் ஒரு சமூகமாக அடுத்த ஐந்து வருடங்களில் செலுத்த வேண்டி வரும் என்பதனையும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களின் தெரிவுக்குரிய கட்சிகளாக இருக்கக் கூடியவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுமே. ஏனைய கட்சிகளைத் தமிழ் மக்கள் தமது தெரிவின் முதற் சுற்றிலேயே நிராகரித்து விட வேண்டும். இதற்கான காரணங்களையும் எமது மக்கள் நன்கறிவர். ஒரு சிலர் பின்னர் கிடைக்கும் சலுகைகளுக்காக ஏனைய கட்சிகளுக்கும் வாக்களிக்க முற்படக்கூடும். தேர்தல் காலத்தில் கிடைக்கும் சலுகைகளைப் பெற்றுக் கொண்டாலும் வாக்களிக்கும்போது சரியான தெரிவை மக்கள் மேற்கொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய முன்னணி ஆகிய இரு கட்சிகளில் எக் கட்சிக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும்? இதற்கு முதல் எனது நிலைப்பாடு தொடர்பாக சில விடயங்களைத் தெளிவுபடுத்த வேண்டும். நான் எந்த அரசியற் கட்சியையும் சார்ந்தவன் அல்ல. தமிழ் மக்கள் இலங்கைத் தீவில் சமத்துவமாக, பாதுகாப்பாக, இனஅழிப்புக்கு உட்படாது தமது அரசியல் தலைவிதியைத் தாமே தீர்மானித்தவாறு வாழ வேண்டும் என்பதுதான் எனது அரசியற்கனவு. இதுவேதான் பெரும்பான்மையான தமிழ் மக்களின் அரசியற்கனவு என்பது எனது நம்பிக்கை. இங்கு கனவு என்பதனை கற்பனை என்ற அர்த்தத்தில் நான் பயன் படுத்தவில்லை. பெருவிருப்பு என்ற அர்த்தத்திலேயே பயன் படுத்துகிறேன். தமிழ் மக்கள் மத்தியில் உள்ள அரசியற்கட்சிகள், அரசியல் அமைப்புக்கள் ஊடாக இக் கனவை நனவாக்க என்னால் முடிந்தவற்றைச் செய்ய வேண்டும் என்பதே எனது விருப்பு. இக் கட்டுரையும் இதன்பாற்பட்டுத்தான் எழுதப்படுகிறது. நான் எழுதுவது எந்தக் கட்சியனதும் அரசியல் நலன் சார்ந்துமல்ல. தமிழ் மக்களின் தேசிய உரிமைப்போராட்டத்தின் நலன் சார்ந்தேதான் என்பதனையும் தெளிவு படுத்த விரும்புகிறேன்.

எக் கட்சிக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும் எனத் தீர்மானிக்கும்போது தேர்தலின் பின் நடைபெறக்கூடியவற்றை இப்போது மனக் கண்ணில் கொண்டு வருதல் பயன் தரும். இப்போது கிடைக்கும் தரவுகளின்படி சிங்களக் கட்சிகளின் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அணிக்கோ அல்லது மகிந்த இராஜாபக்ச அணிக்கோ சாதாரண பெரும்பான்மைக்கான 113 ஆசனங்கள் கிடைக்கப் போவதில்லை. ரணில் அணிக்கு கிடைக்கக்கூடிய 100 வரையிலான ஆசனங்களுடன் மகிந்த தலைமையிலான அணியில் போட்டியிட்டு வெற்றியீட்டும் மைத்ரி விசுவாசிகள் 15 பேர் வரையானோர் ரணிலுடன் இணைய ஜே.வி.பி யிலோ அல்லது தமிழ் தேசியக் கூட்டமைப்பிலோ தங்கி நிற்காது அடுத்த அரசாங்கத்தை அமைக்கவே மைத்ரி-ரணில் திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது. இத் திட்டத்துக்குப் போதிய ஆசனங்கள் கிடைக்காவிடின் அவர்கள் ஜே.வி.பி, தமிழத் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவைக் கோரும் நிலை வரும். மகிந்த தலைமையிலான அணி பெரும்பான்மையினைப் பெறப்போவதில்லை என்பதே பொதுவான கணிப்பாக உள்ளது. இதனால் மகிந்த பிரதமராக வந்து விடுவார் அதனைத் தடுக்க வேண்டும் என்பதனைத் தமிழ் மக்கள் வாக்களிக்கும்போது இத் தேர்தலில் கவனத்திற் கொள்ள வேண்டிய அவசியமில்லை.

தேர்தலின் பின்பு ஜே.வி.பி. யிலோ அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலோ தங்கி நிற்காத வகையில் தமது அரசாங்கத்தை அமைத்துக் கொள்ள முற்படும் மைத்திரி - ரணில் அணியினர் இவ் இரு கட்சிகளையும் சமாந்திரமாகக் கையாளவே செய்வர். ஏந்தவொரு கட்சியிலும் முழுமையாகத் தங்கி நிற்பதனைத் தவிர்க்க முனைவர். இதனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அமையப்போகும் அரசாங்கம் தங்கி நிற்கும், இதன் ஊடாகப் பேரம் பேசித் தமிழ் மக்கள் தமது உரிமைகளை வென்று விடலாம் என்ற எதிர்பார்ப்போடு தமிழ் மக்கள் வாக்களிப்பதில் அர்த்தம் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. சிங்கள பௌத்த பேரினவாதம் இதற்கு இடம் அளிக்கப் போவதில்லை.

இத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களுக்கு வெளிப்படுத்தாத இரு முக்கிய விடயங்களை மக்கள் வாக்களிப்பின்போது கவனத்திற் கொள்ள வேண்டும். தமிழ் மக்களின் தேசிய உரிமைகள் சார்ந்த இந்த இரு முக்கிய விடயங்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு மூடுண்டதாகத் தெரிகிறது. சொல்லுக்கும் செயலுக்கும் இடைவெளிகள் கொண்டதாகப்படுகிறது:

முதலாவது, ஈழத் தமிழ் மக்களின் தேசியப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு தொடர்பான விடயம். தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் விஞ்ஞாபனத்தில் சமஸ்டி பற்றிக் கூறினாலும் அது எத்தகைய சமஸ்டி என்பது பற்றிக் கூறவில்லை. சமஸ்டி அடிப்பிடையிலான தீர்வுத் திட்டம் எது என்பது பற்றியும் பேசவில்லை. முன்வைக்கவும் இல்லை. இதனால் கூட்டமைப்பினர் கருதும் சமஸ்டி எது என்பது எவருக்கும் தெரியாது.

கிடைக்கப்பெறும் நம்பகமான தகவல்களின் அடிப்படையில் 2013, 2015 ஆம் ஆண்டுகளில் சிங்கப்பூரில் நடைபெற்ற சந்திப்புகளின் பெறுபேறாக எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் ‘சமஸ்டி போலத் தோன்றும்’ ஒற்யையாட்சி முறைக்குட்பட்ட தீர்வுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை குறிப்பாகச் சம்பந்தர் ஐயா, சுமந்திரன் போன்றோர் பச்சைக் கொடி காட்டி விட்டனர் என்றே தெரிகிறது. தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வாக சமஸ்டி போலத் தோன்றும் ஒற்றையாட்சிக்குட்பட்ட தீர்வை நோக்கியே கூட்டமைப்பின் தலைமை தேர்தலின் பின்னர் நகரும். தேர்தலின் போது சமஸ்டி பற்றிப் பேசுவோர் தேர்தலின் பின்னர் பெயர்களில் (labels) என்ன இருக்கிறது? உள்ளடக்கம் தான் முக்கியம் எனக் கூறுவார்கள். இதுவும் சமஸ்டிதான் என்பார்கள். இந்தியாவைப் பாருங்கள். அரசியலமைப்பு சமஸ்டி பற்றி எதுவும் குறிப்பிடவில்லையே. இந்தியாவில் உள்ளது சமஸ்டி இல்லையா என்பார்கள். இந்திய அரசியற் சூழலும் இலங்கை அரசியிற்சூழலும் முற்றிலும் வேறுபட்டது. இந்திய மாதிரி இலங்கைக்குப் பொருந்தாது என்பது பற்றி தெரிந்திருந்தாலும் அது பற்றிப் பேசமாட்டார்கள்.

இதனால், இத் தேர்தலில் வாக்களார்கள் கவனத்திற் கொள்ள வேண்டியதொரு முக்கியமான விடயம் ஈழத் தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு ஒற்றையாட்சி முறைக்குட்பட்டு அரசியற்தீர்வு காண முற்படும் முயற்சிகளை எவ்வாறு முறியடிப்பது என்பது.

இரண்டாவது முக்கியமான விடயம், தமிழின அழிப்புத் தொடர்பாக அனைத்துலக விசாரணைகளை உள்நாட்டு விசாரணையாகச் சுருக்கும் முயற்சி தொடர்பானது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழின அழிப்புத் தொடர்பான அனைத்துலக விசாரணையை தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வலியுறுத்தவில்லை. மேலும் அனைத்துலக விசாரணை குறித்து சுமந்திரன் தெரிவித்து வரும் கருத்துக்களை நன்கு உற்று நோக்கும்போது சிறிலங்கா அரசாங்கம் மற்றும் விடுதலைப்புலிகள் அமைப்பு ஆகிய இரு தரப்பினர்மீதான யுத்த மீறல்கள் குறித்து அனைத்துலக நிபுணர்களை உள்ளடக்கிய உள்நாட்டு விசாரணைப்பொறிமுறைக்கு தமிழத் தேசியக் கூட்டமைப்புத் தலைமை சம்மதம் வழங்கி விட்டதாகவே தெரிகிறது. இதுவே ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையிலும் பரிந்துரை செய்யப்படும். அனைத்துலக நிபுணர்களை இந்த விசாரணைப்பொறிமுறை உள்ளடக்கி இருப்பதானால் அது நம்பத்தகுந்ததாக இருக்கும் என்ற காரணத்தையும் தேர்தலின்பின் கூறுவார்கள். சிறலங்காவின் சட்டவரம்புக்குள் தமிழ் மக்களுக்கு நீதி வழங்கக்கூடிய நிலைமையோ அல்லது அரசியல் விருப்போ சிறிலங்கா அரசாங்கத்திடம் உண்டா என்பது பற்றி அதிகம் பேச மாட்டார்கள்.

**தமிழ் தேசிய மக்கள் முன்னணியில் இருந்து இத்தேர்தலில் பிரதிநிதிகள் தெரிவாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தடம் மாறிப் போகாமல் இருப்பதற்கான அழுத்த சக்தியாக இருக்கும்.**

இதனால், தேர்தலின் போது தமிழ் மக்கள் கவனத்திற் கொள்ள வேண்டிய இரண்டாவது விடயம் தமிழின அழிப்புக் எதிராக நீதி கோரும் போராட்டம் தமிழ்த் தலைமைகளின் செயற்பாடுகளால் நீர்த்துப்போகாமல் எவ்வாறு பாதுகாக்கலாம் என்பது.

இதேவேளை, தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் ஏனைய தலைவர்கள் சமஸ்டியிலும் அனைத்துலுக விசாரணையிலும் உறுதியான கருத்தை வெளிப்படுத்துகிறார்களே அவர்கள் இந்த இரு விடயத்திலும் உறுதியான நிலைப்பாட்டை எடுத்து கூட்டமைப்பை சரியான திசையில் நகர்த்த மாட்டார்களா? ஏன்ற கேள்விக்கும் இங்கு இடமுண்டு. கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தர் ஐயா இதுவரை பல முடிவுகளை முன்னரே எடுத்து விட்டு அதனை கூட்டமைப்பின் முடிவாக ஆக்குவதில் வெற்றி கண்டிருக்கிறார். கூட்டமைப்பின் ஏனைய கட்சித் தவைர்களின் பலவீனத்தை அவர் நன்கு அறிவார். ஆரம்பத்தில் சிறிது முரண்டு பிடித்தாலும் பின்னர் ஏனைய கட்சித் தலைவர்கள் தன்வழிக்கு வருவார்கள் என்பதே அவரது கணிப்பு. தேவையேற்படின் வெளிநாட்டுத்துாதரங்களில் இருந்து ஏனைய கட்சித் தலைவர்களுக்கு..

(தொடர்ச்சி 22ம் பக்கம்)



# அரசியலில் பெண்கள்



**சுகி**

*(ஒரு பேப்பருக்காக)*

பொது வாழ்வில், பெண்கள் பலதுறைகளில் பங்குகொள்கிறார்கள். அன்றைய காலம் தொட்டு இன்று வரை பொது வாழ்வுக்கு என விரும்பியோ, சந்தர்ப்பவசத்தாலோ, வரும் பெண்கள் சில வேளை அவர்கள் எதிர்பார்த்திராத வகையில் பொது வாழ்வில் பிரபல்யம் அடைந்துவிடுகிறார்கள்.

இதை அவர்கள் எதிர்பார்த்து தானாக கொஞ்சம் கொஞ்சமாக புகழ் அல்லது பிரபல்யம் அடைபவர்கள், அதை அவர்கள் வளரும் போது கொஞ்சம் கொஞ்சமாக ஜீரணித்து அதற்கேற்றது போல தமது வாழ்க்கை முறை, நடை, உடை பாவனை என்பவற்றைக் கூட மாற்றிக் கொள்கிறார்கள்.

சில சந்தர்ப்பங்களில் அதற்கு இடம் இல்லாத வகையில், ஒரு பாட்டிலோ அல்லது நடிப்பிலோ திடீரென உலகம் அறியும் வண்ணம் அவர்கள் எதிர்பாத்திராக வகையில் புகழின் உச்சியை அடையும் போது, அந்த மாற்றத்திற்கும், திடீர் புகழுக்கும், பணபுழக்கத்திற்கும் ஈடு கொடுக்க முடியாது, ஏறக்குயை அதுவே அவர்களின் நிம்மதியாக வாழ்வுவின் அழிவுக்கு முதற் படியாகிறது, அவர்களில் அன்பும் பரிவும் கொண்டு வருபவர்களைக் கூட, அவர்களுக்கு இவர்கள் தன்னிடம் உள்ள செல்வத்திற்காக வருகிறாரா? இல்லையா என்று புரியாது மனஅழுத்தத்திற்கு உள்ளாகின்றனர்.

**தமிழ் அரசியல் என்று பார்த்தாலும், தமிழ் அமைப்புக்கள் என்று பார்த்தாலும் பல சந்தர்பங்களில் அவர்கள் பெண்களை தம் அமைப்பில் சேர்ப்பதன் உண்மையான நோக்கம் ஒரு பெண்ணாவது அமைப்பில் இருக்கவேண்டும், அப்போது தான் தமது அமைப்பு அல்லது கட்சி நடுநிலையானது என்ற தோற்றத்தை வெளிஉலகிற்கு அளிக்கும் என்ற ரீதியில் உள்வாங்குகிறார்கள்.**

அடுத்து என்னதான் அவர்கள் தனிப்பட்ட ரீதியில் புகழின் உச்சியைத்தொட்டாலும், சுற்றியிருக்கும் அம்மா, அப்பா, சகோதர சகோதரிகள் சாதாரணமானவர்களே, என்னதான் கம்பத்தில் ஏறி வித்தை காட்டினாலும், இறுதியில் காசு வேண்ட கம்பத்தை விட்டு கீழே இறங்கித் தான் வரவேண்டும் என்பது போல, என்னதான் உலகத்திற்கே பேர் சொல்லும் அளவிற்கு நண்பர்கள், வசதிகள் இருந்தாலும், சொந்தபந்தங்கள், தாய் தகப்பன், சகோரதரங்கள் எல்லாம் புதிதாக வருவதில்லை. அவர்கள் என்ன இருந்தாலும் அந்த வட்டத்திற்குள்ளும் வலம் வரவேண்டியவர்களாகவும், அவர்களின் விருப்பு வெறுப்புக்களும் விமர்சனங்களும், அவர்களை அதிகம் பாதிப்பதாகவும் அமைகிறது. சிலர் புதிய நண்பர்களின் சேர்க்கைகளாலோ, அல்லதுமனஅழுத்தத்தை மறப்பதற்காகவோ குடி, போதை போன்றவற்றிற்கும் அடிமையாகின்றனர்.

எமது தமிழ் பெண்களை எடுத்துக்கொண்டால், கவிதை, நாடகம், திரை உலகம், கதை, ஒளிபரப்பு, அரசியல் என பல துறைகளிலும், சமூக சேவைகளிலும் கணிசமான பெண்கள் பங்கேற்கிறார்கள். அவர்களில் தனிப்பட்ட ரீதியில் புகழ்பெற்றவர்கள் உண்டு, அதை விட அவர்கள் சார்ந்த நிறுவனங்கள், கட்சிகள், அமைப்புகள் ஊடாக மக்களுக்கு தெரிய வந்து, பின் அவர்களிடம் இருக்கும் தனிப்பட்ட திறமைகளையும், சமூகத்தில் மேல் உள்ள அக்கறையாலும் மக்கள் மனதில் இடம் பிடிப்பவர்களும் உண்டு.

இதில் தமிழ் அரசியல் என்று பார்த்தாலும், தமிழ் அமைப்புக்கள் என்று பார்த்தாலும் பல சந்தர்ப்பங்களில் அவர்கள் பெண்களை தம் அமைப்பில் சேர்ப்பதன் உண்மையான நோக்கம் ஒரு பெண்ணாவது அமைப்பில் இருக்கவேண்டும், அப்போது தான் தமது அமைப்பு அல்லது கட்சி நடுநிலையானது என்ற தோற்றத்தை வெளிஉலகிற்கு அளிக்கும் என்ற ரீதியில் உள்வாங்குகிறார்கள். இதனால் அவர்கள் உள்வாங்கப்பட்டாலும், அவர்களுக்குரிய இடமும், அவர்களின் கருந்துக்களையும், நோக்கங்களையும் பகிர்ந்து கொள்வதற்கு சரியாக சந்தர்பம் ஒதுக்கப்படுவதில்லை.

ஏறக்குறைய கட்சி, அல்லது அமைப்பில் உள்ள ஆண் அங்கத்துபவர்களின் கருத்திற்கு உடன்படும் படியும், அவர்கள் விருப்பியது போல நடக்கும் படியும், பேசும் படியும் மறைமுகமான அழுத்தம் சுமந்தப்படுவதோடு பல சந்தர்பங்களின் அவர்களை அலங்கார அங்கத்துவராகவே பார்க்கப்படுகிறது.

இதற்கு சரியான நடைமுறை உதாரணமாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு, அனந்தி எழிலனை கையாளும் முறையை இங்கு கூறிக் கொள்ளலாம். மக்களின் அதிகப்படியான விருப்பினால் தெரியப்பட்டிருந்தும், அவரின் அரசியல் எதிர்காலம் கட்சியின் அலட்சியப்போக்கினால், கட்சிக்குள் கேள்விக்குறியாக மாறிவருகின்றது. அவர்களின் கருந்து சுகந்திரம் என்பன பறிக்கப்படுவது மட்டும் அல்லாது, அவரின் அரசியல் நடவடிக்கைகளும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு பெண் வேண்டும், அதுவும் இப்படிப்பட்ட பின்னனியில் இருந்து வந்தால் தமது கட்சியை அலங்காரப்படுத்தும், மக்களின் அமோக ஆதரவு கிடைக்கும் என்பதற்காகவா எடுத்தார்கள் என்ற கேள்வி எழுகின்றது.

எந்த தலைமைப் பகுதியிலும் அப்பதவியில் உள்ளவர், அதில் அங்கத்துவராக உள்ளவர்களின் திமைகளை அடையாளம் கண்டு அதை வெளிக்கொண்டு வருவதற்கு முயலவேண்டும். அதைவிடுத்து தங்கள் தலைமைப் பகுதியை தக்கவைத்துக் கொள்வதற்கும், தாம் ஒரு நடுநிலையானவர்கள் உலகிற்கு பறைசாற்றுவதற்கும் பெண்களை ஒரு கருவி போல பாவிப்பது கண்டிக்கப்படவேண்டியதொன்று. இந்த முறை நடக்கவிருக்கும பாராளுமன்றத் தேர்தலில் என்றும் இல்லாத அளவிற்கு நிறையப் பெண்கள் பல்வேறு கட்சியின் கீழ் போட்டியிடுகின்றனர்.

அவர்களின் திறமைகளையும், மக்களுக்கு ஆற்றவிருக்கும் சேவைகளின் தரவுகளையும் சீர் தூக்கி பார்ப்பதோடு மட்டும் நின்று விடாது, அவர்கள் நிற்கும் தலைமைகளின் ஆளுமையையும், உண்மையான நோக்கத்தையும் அறிந்து கொள்வது அவசியமாகிறது, தலைமை சரியில்லாவிட்டால், திறமையிருந்தும் குடத்திற்குள் இருக்கும் குத்து விளக்குப் போல, அதன் வெளிச்சம் பொதுவாழ்வில் மற்றவர்களுக்கு தரவேண்டிய பலனை தராது போய்விடக்கூடும். சரியான அரசியல் தலைமையின் கீழ் பொது வாழ்விற்கென வரும் பெண்களை அடையாளம் கண்டு வரவேற்போம்.

கருத்துக்களுக்கு - facebook.com/orupaper @orupaper







# போதைப்பொருள் சுமக்கும் சிறுவர்கள் !



**தீபச்செல்வன்**

இன அழிப்பு என்பது 2009ஆம் ஆண்டில் முள்ளிவாய்க்காலில் இடம்பெற்றதைப்போன்று கொத்துக்கொத்தாக கொல்லப்படுவது மாத்திரமல்ல. பெண்கள் வன்புணர்வுக் குள்ளாக்கி படுகொலை செய்யப்படுவதும், சரணடைந்தவர்களை சுட்டுக் கொன்றழிப்பதும் காணாமல் போகச் செய்தல்களும் மாத்திரம் இன அழிப்பல்ல. இன அழிப்பை கத்தியின்றி, துப்பாக்கியின்றியும் முன்னெடுக்க முடியும். இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச முள்ளிவாய்க்கால் வரை தமிழ் மக்களை யுத்தத்தின் மூலம் இன அழிப்புச் செய்தார். அதன் பின்னர் தமிழ் இனத்தை அழிக்க பல்வேறு நுட்பமான நடவடிக்கைகளை முன்னெடுத்தார். ஆட்சி மாறியபோதும் தமிழ் இனத்தை அழிக்கும் அந்தக் கட்டமைப்பில் மாற்றம் ஏற்படவில்லை. அது நுட்பமாக தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகிறது. இந்த நடவடிக்கையில் வடக்கு கிழக்குச் சிறுவர்களும் இலக்கு வைக்கப்பட்டுள்ளனர்.

ஒரு சமூகத்தை அழிவை நோக்கி தள்ளுவதும் அழிவின் பாதையை நோக்கிச் செல்வதற்கான சூழலை உருவாக்கிவிடுவதும் திட்டமிட்ட இன அழிப்பின் அரங்கமே. நேரடியாகவும் மறைமுகமாகவும் மிகவும் நுட்பமாக இந்த சூழலை நோக்கி தமிழர் சமூகம் தள்ளப்படுகின்றது. நிகழ்காலத்தின் மனிதர்கள் அழிக்கப்படுவது போல எதிர்காலத்தின் மனிதர்களும் திட்டமிட்டு அழிக்கப்படுமொரு நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது. போருக்குப் பின்னர் வடக்கில் சிறுமிகள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படும் சம்பவங்கள் அதிகரித்திருப்பதுபோலவே சிறுவர்கள் போதைக்கு அடிமையாக்கப்பட்டு அதனால் வன்முறைகளில் ஈடுபடுகின்ற சம்பவங்களும் அதிகரித்திருக்கின்றன. புத்தகம் சுமக்க வேண்டிய ஏதுமறியாத சிறுவர்களின் கையில் வாழ்க்கையை எதிர்காலத்தை சமூகத்தை அழிக்கும் போதைப் பொருட்கள் சுமக்கும் சூழல் உருவாக்கப்படுவது மிகவும் தந்திரமான திட்டமிட்ட நடவடிக்கையாகும்.

வடக்கு கிழக்கில் மாத்திரமே காடுகள் பாதுகாக்கப்பட்டுள்ளதாக இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் கூறினார். தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளின் காடுகள் மாத்திரமே பாதுகாக்கப்பட்டுள்ளன. இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இராணுவத்திற்காகவும் சிங்களக் குடியேற்றத்திற்காகவும் காடுகள் அழிக்கப்பட்டன. புலிகள் காடுகளை பாதுகாத்தார்கள் என்பதை ஜனாதிபதி ஒப்புக்கொள்கிறார். உண்மையில் வடக்கு கிழக்கில் காடுகளுக்கு மாத்திரமல்ல மனிதர்களுக்கும் மனிதர்களின் வாழ்வுக்கும் பாதுகாப்பு இருந்தது என்பதை இதன் ஊடாய் மைத்திரிபால சிறிசேன ஏற்றுக்கொள்கிறார். அன்றைக்கு வடக்கு கிழக்குச் சிறுவர்களுக்கு இந்தக் கதி ஏற்பட்டிருக்கவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சிறுவர்களை படைக்குச் சேர்க்கிறது என்ற குற்றச்சாட்டை இலங்கை அரசு உலகம் முழுவதிலும் பெரும் பிரசாரமாக முன்னெடுத்தது. தனது இனப்படுகொலையை, இன ஒடுக்குமுறையை அதற்கு எதிராக எழுந்த போராட்டத்தை ஒடுக்க என புலிகளை பயங்கரவாதிகள் எனச் சித்திரிக்க விடுதலைப் புலிகள் சிறுவர் போராளிகளை வைத்திருப்பாக இலங்கை அரசு கூறியது. ஆனால் இன்றைக்கு வட கிழக்குச் சிறுவர்கள் திட்டமிட்ட ரீதியில் போதைப் பொருட்களுக்கு அடிமையாக்கப்பட்டு போதைப் பொருள் விநியோகத்தில் ஈடுபடுத்தப்படுகின்ற வேளையில் ஈழச் சிறுவர்கள் குறித்தும் அவர்களின் எதிர்காலம் குறித்தும் அவர்களின் உரிமை குறித்தும் பேச எவருமில்லை.

அண்மையில் கிளிநொச்சியில் ஒரு சிறுவனைச் சந்தித்தேன். அவனுக்கு வயது 15. அவன் போதைப் பொருட்களுக்கு அடிமையாகியுள்ளான். அவனுக்கு போதைப் பொருட்கள் எங்கிருந்தோ கிடைக்கின்றன. ஆனால் எதற்காக அவன் போதைப் பொருட்களை நாடுகிறான் என்பதையே அறிய விரும்பினேன். அவனது தயார் யுத்தத்தில் இறந்துவிட்டார். தாயின் அரவணைப்பு இல்லாமல் போன பிறகு அவனது வாழ்க்கையே தடம் புரண்டு விட்டது. அவனது தயாரை எனக்குத் தெரியும். அவர் மிகவும் கண்டிப்பானவர். குறிப்பாக பிள்ளைகளின் படிப்பில் மிகவும் அக்கறை கொண்டவர். அவர் கொல்லப்பட்ட பிறகு கணவரும் அதிகமாக குடிக்கத் தொடங்கினார். ஆரம்பத்தில் குடிக்கத் தொடங்கிய இந்தச் சிறுவன் இப்போது ஆபத்தான போதைப் பொருட்களுக்கு அடிமையாகிவிட்டான். தன் பிள்ளை படித்து பெரிய ஆளாக வரவேண்டும் என்று கனவுகண்ட அந்தச் சிறுவனின் தாயின் கனவு சிதறுண்டு விட்டது.

கிளிநொச்சியில் உள்ள ஒரு கிராமத்தில் உள்ள தற்காலிக வீடு ஒன்றைக் கடந்து செல்லும்போது சிறுவர்கள் கூடியிருந்து போதைப் பொருட்களை பாவித்துக் கொண்டிருப்பதை பார்க்க நேரிட்டது. அவர்களில் பலரும் யுத்தத்தில் தாய் தந்தையர்களை இழந்தவர்கள். பாடசாலையை விட்டு இடைவிலகியவர்கள். அவர்களுக்கு என்ன செய்வதென்று தெரியாத நிலையில் போதைப் பொருட்களுக்கு அடிமையாகி விட்டனர். பல சிறுவர்கள் பொக்கற்றுக்களில் கஞ்சாவுடன் அலைகின்றனர். இதுபோல பல சிறுவர்களை நான் சந்தித்துவிட்டேன். அவர்கள் இன்று வாழ நேர்ந்துள்ள சமூகச் சூழலே இவ்வாறான நிலமைக்கு தள்ளியுள்ளது. பெற்றோர்களின்றி, தனிமையில், அவ நம்பிக்கைகளின் மத்தியில் எதிர்காலம் குறித்து எந்த திட்டமுமின்றி மன உளைச்சல்களை தீர்க்க போதைப் பொருட்களை நாடுகின்றனர்.

## தன் பிள்ளை படித்து பெரிய ஆளாக வரவேண்டும் என்று கனவுகண்ட அந்தச் சிறுவனின் தாயின் கனவு சிதறுண்டு விட்டது.

கிளிநொச்சியில் பாரதிபுரத்தில் அண்மையில் கஞ்சா போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட சிறுவன் இராணுவ அதிகாரி ஒருவருக்காகவே தான் கஞ்சா கொண்டு சென்றதாக கூறினான். அந்த இராணுவ அதிகாரி முறிகண்டியில் உள்ள முகாம் ஒன்றில் இருப்பதாகவும் அவர் தனது நண்பர் என்றும் அந்தச் சிறுவன் குறிப்பிட்டான். அவருக்காக வாரம் தோறும் கஞ்சாவை எடுத்துச் செல்வதாகவும் அதற்காக அவர் தனக்கு இறைச்சி வழங்குவார் என்றும் அந்தக் கஞ்சாவை கிளிநொச்சி நகரத்தில் இருநூற்றைம்பது ரூபாவிற்குப் பெற்றதாகவும் அச் சிறுவன் ஊடகங்களுக்குக் குறிப்பிட்டிருந்தான். சுமார் 14 வயது மதிக்கத் தக்க அந்தச் சிறுவன் போதைப் பொருளுக்கு அடிமையாகும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளான்.

வடக்கில் தாய் தந்தையரை இழந்த சிறுவர்கள் இராணுவத்திற்கான போதைப் பொருள் விநியோகத்தில் ஈடுபடுத்தப்படுகின்றனர். கல்வி, வருமானம் எதுவுமற்ற நிலையில் மிக இலகுவாக பணம் சம்பாதிக்கவும் தமக்குத் தேவையான போதைப் பொருளை நுகரவும் போதைப் பொருள் விநியோகத்தில் சிறுவர்கள் ஈடுபடுகின்றனர். இவர்களுக்கு இராணுவத்தினர் முழுமையான பாதுகாப்பையும் ஆதரவையும் வழங்குகின்றனர். ஏனெனில் இராணுவத்திற்குத் தேவையான போதைப் பொருட்களை இந்த சிறுவர்களே பெற்றுக்கொடுக்கின்றனர். வீதிகளில் ரோந்து செல்லும் இராணுவம் சிறுவர்களிடமிருந்து போதைப் பொருட்களை எடுத்துச் செல்கின்றனர். வடக்கில் இராணுவத் தலைமையகங்களில் போதைப் பொருள் பாவிக்கும் இராணுவ அதிகாரிகள் மற்றும் சிப்பாய்களுக்கு சிறுவர்கள் ஊடாகவே கஞ்சா போன்ற போதைப் பொருட்களின் விநியோகம் இடம் பெறுகின்றது.

கிளிநொச்சி நகரத்தை அண்டிய கிராமம் ஒன்றில் அண்மையில் நடந்த வாள்வெட்டில் ஈடுபட்டவர்களில் நான்குபேர் 15 வயதிற்குட்பட்ட சிறுவர்கள். சம்பவம் நடக்கும்போது அவர்கள் போதையில் இருந்துள்ளனர். சிறுவர்கள் வன்முறைகளில் ஈடுபடுகின்ற சம்பவங்கள் பலவும் போருக்குப் பின்னர் பதிவாகியுள்ளது. வடக்கிலிருந்து பல சிறுவர்கள் வன்முறைகளில் ஈடுபட்டமையால் அநுராதபுரம் சிறைக்குச் செல்கின்றனர். இவர்களில் பலர் போதைப் பொருள் பாவித்து மற்றும் மது அருந்திய நிலையிலேயே வன்முறையில் ஈடுபட்டுள்ளனர். கடந்த வருடம் வடக்கில் பொலிஸ் உறுப்பினர் ஒருவரை கிளிநொச்சி சிறுவர் ஒருவர் கத்தியால் குத்தியிருந்தார். தன் இனத்தை பழித்தமையால் கத்தியால் குத்தியதாக சிறுவன் கூறினான்.

யுத்தம் செய்து ஒரு தேசத்தை ஆக்கிரமிக்கும் இராணுவம் தொடர்ந்தும் அங்கொரு யுத்த நடவடிக்கையை தொடரும். அந்த தேசத்தின் வாழ்வை வரலாற்றை அழிக்கும் ஒரு நடவடிக்கையை சத்தமின்றி மேற்கொள்ளும். இன்றைக்கு வடக்கின் சிறுவர்களை, யுத்தத்தில் தாய் தந்தையரை இழந்த சிறுவர்களை போதைப் பொருள் விநியோகத்திலும் போதைப் பொருள் பாவனையிலும் ஈடுபடுத்தி அதன் ஊடாக அவர்களது எதிர்காலத்தை பழாக்கிக்கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டிருப்பதும் இதன்பாற்பட்டதே.

இது தொடர்பில் தமிழ் சமூகமும் அரசில் தலைமையும் அரச அதிகாரிகளும் விழித்து செயற்படுவது அவசியமானது. போரால் தாய் தந்தையரை இழந்த பிள்ளைகளை, படிக்க வேண்டிய வயதில் பாடசாலைகளைவிட்டு இடைவிலகியவர்களை மீள கல்வியில் இணைப்பதும் இடைவிலகல் காரணங்களை கண்டறிய வேண்டும். வடகிழக்கு மாகாணங்களில் கிராம மட்டத்தில் இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்து தடம்மாறிய சிறுவர்களின் எதிர்காலத்தை வளம்படுத்த சமூக அக்கறை மிக்க செயற்பாடு இன்று தேவை.

இன அழிப்பு இராணுவம் ஒடுக்கப்பட்ட மக்களின் நிலத்தை ஆக்கிரமித்து விட்டு அங்கு காவல் செய்கிறது என விபரிப்பது ஒடுக்குமுறையாளர்களின் அரசியல் யுக்தி. அந்த இராணுவம் அந்த நிலத்தின் அதிகாரத்தை கைப்பற்றும் விதமாக அந்த மக்களை மேலும் ஒடுக்கி அழிக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளும். ஈழ நிலத்தின் சிறுவர்களை வளரும் தலைமுறையை நம்பிக்கையை முளையிலேயே அழிப்பதும் அழிவுக்குரிய அடிப்படைகளை ஏற்படுத்துவதும் இலங்கை அரசின் நெடுங்காலத் திட்டமான தமிழ் சமூகத்தை சமூகத்தை அழிப்பதற்கான மிக எளிய வழிமுறையாக முன்னெடுக்கப்படுகிறது.




✓ Accountancy & Auditing
✓ Business Start up Advice
✓ Business Plans & Cash Flow Forecasts
✓ Personal tax Affairs & Self Assesment
✓ Company Tax Affairs & Company Tax Return (CT 600)
✓ Preparing VAT, Payroll for the Sole Trader, Patrnership & Limited Companies
✓ Company Formation
✓ Attending VAT & PAYE visits
✓ Tax Investigations
✓ Solicitors Accounts & Accounts Reports

TAMSONS
Accounting & Tax Consultancy Ltd.
65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR
Tel: 020 8313 0800

# ஐ.நா மனித உரிமைக் கழகம்: கசிந்த திட்டமும் குழம்பிய குட்டையும்



**வேல் தர்மா**

*(ஒரு பேப்பருக்காக)*

2015 செப்டம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக்கழகத்தில் இலங்கையின் மனித உரிமை மீறல் பற்றிச் சமர்ப்பிக்கப் படவிருக்கும் அறிக்கையையும் அது தொடர்பான கலந்துரையாடல்களையும் முடக்கும் வகையில் இலங்கை அரசும் ஐக்கிய நாடுகள் சபையும் இணைந்து செயற்படுவது தொடர்பான ஆவணங்கள் சிலவற்றை சனல் - 4 தொலைக்காட்சி அம்பலப்படுத்தி மீண்டும் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டுள்ளது. சனல் -4 தொலைக்காட்சி அம்பலப்படுத்தியதில் முக்கியமானது:

***இலங்கையில் நடந்த மனித உரிமைகள் தொடர்பாக ஐக்கியநாடுகள் சபையின் தொழில் நுட்ப உதவியுடன் இலங்கையில் ஒரு உள்ளக விசாரணை செய்யப்படவிருக்கின்றது.***

### ◆ மீண்டும் தமிழர்களுக்கு எதிராக ஐநா சதி?

சனல் - 4 இற்குக் கசிந்தது ஜெனிவாவில் உள்ள ஐ நா மனித உரிமைக் கழகத்தின் அறிக்கை அல்ல என்பது இங்கு கவனிக்கத் தக்கது. அந்த அறிக்கை இலங்கையைப் பெரிதளவில் பாதிக்காதிருக்க நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமைச் செயலகத்தில் உள்ள சிலரும் இலங்கை வெளியுறவுத் துறையும் இணைந்து செய்கின்ற ஒரு சதி தொடர்பான ஆவணத்தின் ஒரு பகுதியே வெளிவந்துள்ளது. 2014-ம் ஆண்டு மார்ச் மாதம் ஐநா மனித உரிமைக் கழகம் இலங்கை தொடர்பாக ஒரு தீர்மானம் ஐக்கிய அமெரிக்காவின் அனுமதியுடன் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அத் தீர்மானத்தில் இலங்கையின் மனித உரிமை நிலவரத்தை ஆராயவும் மதிப்பிடவும் கண்காணிக்கவும் ஐ.நா. மனித உரிமை ஆணையருக்கு இந்த தீர்மானம் அழைப்பு விடுத்தது. 'தேசிய அளவில் நம்பிக்கை தரும் நடவடிக்கை இல்லாதபோது சர்வதேச விசாரணை நடவடிக்கை அவசியம்' என ஐ.நா. உரிமைக் கழகத்தின் அப்போதைய தலைவர் நவிநீதம்பிள்ளை இத் தீர்மானம் தொடர்பாகக் கருத்தும் தெரிவித்திருந்தார்.

### ◆ வெத்து வேட்டுத் தீர்மானம்.

2014-ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தீர்மானம் இலங்கை தமிழர்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றவில்லை என்ற காரணத்திற்காக தாயகத்திலும், தமிழகத்திலும், மற்றும் வெளிநாடுகளிலும் உள்ள தமிழுணர்வாளர்கள் அதைக் கடுமையாக ஏதிர்த்தார்கள். உதாரணத்திற்கு தீர்மானம் நிறைவேற்றப்பட முன்னர் மனித உரிமைக்கழக ஆணையாளரின் அறிக்கையில் உரையாற்றியஅமெரிக்கப் பிரதிநிதி தமிழர் பகுதிகளில் அளவுக்கு அதிகமான படையினர் இருப்பதைப்பற்றிக் குறிப்பிட்டார். ஆனால் தீர்மானத்தில் தமிழர் பகுதிகளில் படையினர் குறைக்கப்படவேண்டும் என்ற பதத்தை இறுதிக் கட்டத்தில் அமெரிக்கா நீக்கி இருந்தது. ஒரு படைக்குறைப்பைக் கூடச் செய்ய முடியாத தீர்மானம் எமக்கு எந்த விமோசனத்தையும் பெற்றுத் தரப் போவதில்லை.

### ◆ இனக்கொலை என்ற பூசணிக்காயும் மனித உரிமை மீறல் எனும் சோறும்

அயர்லாந்தில் கூடிய டப்ளின் தீர்ப்பாயமும் ஜேர்மனியில் கூடிய பிறீமன் தீர்ப்பாயமும் இலங்கையில் நடந்தது ஒரு இனக்கொலை என்றன. ஐநா பொதுச் செயலர் நியமித்த நிபுணர் குழு இலங்கையில் போர்க்குற்றம் இழைக்கப் பட்டமைக்கும் மானிடத்திற்கு எதிரானகுற்றம் இழைக்கப் பட்டமைக்கும் காத்திரமானஆதாரங்கள் இருப்பதாக தனது அறிக்கையில் தெரிவித்தது. ஆனால் அமெரிக்கா இந்தப் போர்க் குற்றங்களையும் இனக் கொலையையும் கருத்தில் கொள்ளாமல் இலங்கையில் நடந்ததும் நடப்பதும் ஒரு மனித உரிமைப் பிரச்சனையே என்று தான் 2014 மார்ச் மாதம் 27-ம் திகதி மனித உரிமைக் கழகத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தின் மூலம் திரிக்கின்றது. பிறீமன் தீர்ப்பாயம் இலங்கையுடன் இணைந்து அமெரிக்காவும் பிரித்தானியாவும் போர்க் குற்றம் புரிந்ததாகத் தெரிவித்தது. இப்போது ஒரு குற்றவாளி இன்னொரு குற்றவாளியை நீதிபதியாக்குகின்றார். தீர்மானத்தின் படி மனித உரிமைக்கழகம் தயாரித்த அறிக்கையை 2015 மார்ச் மாதம் நடந்த கழகத்தின் கூட்டத் தொடரில் சமர்ப்பித்திருக்க வேண்டும். ஆனால் 2015- ஜனவரியில் இலங்கையில் ஐக்கிய அமெரிகாவிற்கு மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் ஏற்புடைய ஓர் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட படியாலும் இலங்கையின் புதிய வெளிநாட்டமைச்சரும் ஆட்சி மாற்றத்திற்கு பங்காற்றியவருமான மங்கள சமரவீரவின் வேண்டுகோளிற்கு இணங்கவும் அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படாமல் பிற்போடப்பட்டது. இந்த பிற்போடப்பட்டமை இலங்கையின் கட்சி அரசியலுக்கு ஏற்புடையதாகவும் புதிய குடியரசுத் தலைவர் நடாத்த எண்ணியிருந்த பாராளமன்றத் தேர்தலில் அவரது வாக்கு வேட்டைக்கு ஏதுவாகவும் செய்யப்பட்டது.

### ◆ துள்ளிக் குதித்தவர்கள் இருவர்

2014 - மார்ச்சில் ஐநா மனித உரிமைக் கழகத்தில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை இட்டுத் துள்ளிக் குதித்தவர்கள் இருவர். ஒருவர் த.தே. கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளமன்ற உறுப்பினர் எம் சுமந்திரன் மற்றவர் தனக்குத் தான் ஐக்கிய நாடுகள் சபையைப் பற்றி நன்கு தெரியும் எனத் தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கும் ச.வே கிருபாகரன். 2015-ம் ஆண்டு மார்ச் மாதம் மனித உரிமைக்கழக அறிக்கை வெளிவிடாமல் ஒத்திவைக்கப் பட்ட போது அதை தமிழின உணர்வாளர்கள் எதிர்த்தார்கள். அப்போது ஆத்திரப்பட்ட சுமந்திரன் முன்பு தீர்மானம் கொண்டுவரப்படும் போது எதிர்த்தவர்கள் இப்போது அதை ஒத்தி வைக்கப்படும் போதும் எதிர்க்கின்றார்கள். தீர்மானத்தைக் கொழுத்தியவர்கள் தீர்மானத்தை எதிர்க்கின்றார்கள் எனச் சுமந்திரன் துள்ளிக் குதித்தார்.

### ◆ ச.வி.கிருபாகரன்

சனல் - 4 மனித உரிமைக்கழக அறிக்கையை அம்பலப்படுத்துவதற்கு சில நாட்களுக்கு முன்னர் ஊடகம் ஒன்றிற்கு ச வே கிருபாகரன் பேட்டியளிக்கையில் "த தே கூ பன்னாட்டு ரீதியில் தமது அளப்பரிய சேவையைச் செய்து வருகின்றார்கள். கடந்த (2015 மார்ச்) நடந்த மனித உரிமைக் கழகக் கூட்டத் தொடரில் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு நூற்றுக்கு நூறு முற்று முழுதாக நின்று உழைத்தவர்கள் த தே கூட்டமைப்பினர். இதை யாரும் மறுக்க முடியாது. இதை நிராகரித்து இது தமிழர்களுக்கு உதவாது என்று சொன்னவர்கள் த.தே கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்றவர்கள். த.தே கூட்டமைப்பு தமிழர்களுக்கு என்ன செய்தார்கள் என்று கேட்டால் இந்த ஒரு அளப்பரிய சர்வதேச ரீதியாகக் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை அங்கு நிறைவேற்றக் கடுமையாக உழைத்தார்கள் என்பதே பதிலாகும். அதில் பல இரகசியங்கள் உள்ளன. பல நாடுகளுக்கு அவர்கள் சென்று பேச்சுவார்த்தை நடாத்தி இந்தத் தீர்மானத்தை நிறைவேறச் செய்தார்கள்." என்றார். மேலும் கிருபாகரன் மார்ச் 2014 நிறைவேற்றப் பட்ட தீர்மானத்தை எதிர்த்தவர்கள்தான் த.தே கூட்டமைப்பை எதிர்க்கின்றார்கள். இப்போது அறிக்கையில் வரவிருக்கும் உள்ளக விசாரணையை வலியுறுத்தும் அம்சம் கிருபாகரன் சொன்னது சுத்த அபத்தம் என்பதை உணர்த்துகின்றது.

### ◆ கண்ணகிக்கு இடம் துடித்தது மாதவிக்கு வலம் துடித்தது

ஜெனீவாவில் உள்ள மனித உரிமைக் கழகம் இலங்கை தொடர்பான அறிக்கைக்கு குந்தகம் விளைவிக்கக் கூடியவகையில் அமைந்தால் அதற்கு மாற்று வழியாக நிžயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை இலங்கையுடன் இணைந்து ஒரு உள்ளக விசாரணையை ஐநாவின் தொழில் நுட்ப உதவியுடன் செய்யலாம் என்ற சேதி எப்படியும் ஒரு பன்னாட்டு விசாரணையில் இருந்து இலங்கை காப்பாற்றப் படும் என்பதற்குக் கட்டியம் கூறி நிற்கின்றது.

> ## ஜெனிவாவில் உள்ள மனித உரிமைக் கழகத்திற்கும் நியூயோர்க்கில் உள்ள ஐநா தலைமைச் செயலகத்திற்கும் பின்னர் நின்று இயக்குவது ஒரே கும்பல்தான்.

இச் செய்தி இலங்கை ஆட்சியாளர்களுக்கு ஒரு வெற்றியாக அமையும். அதனால் மஹிந்தவிற்கு எதிராகத் தேர்தலில் போட்டியிடுபவர்கள் இது தமக்கு உலக அரங்கில் கிடைத்த அங்கீகாரம் எனப் பரப்புரை செய்யலாம். ஆனால் இது தமிழர்களின் முதுகில் மீண்டும் குத்தப்படும் நிகழ்வாகும். 2014-மார்ச் தீர்மானம் பற்றி அதிகம் துள்ளிய சுமந்திரனுக்கும் பேரிடியாகும்.

### ◆ ஒரே சதிகாரர்களின் இரு முனைகள்

ஜெனிவாவில் உள்ள மனித உரிமைக் கழகத்திற்கும் நியூயோர்க்கில் உள்ள ஐநா தலைமைச் செயலகத்திற்கும் பின்னர் நின்று இயக்குவது ஒரே கும்பல்தான். ஜெனிவாவின் கையில் தடியும் நியூயோர்க்கின் கையில் கரட்டும் இருக்கின்றன. 2015 ஒகஸ்ட் 17-ம் திகதி நடக்கவிருக்கும் இலங்கைப் பாராளுமன்றத் தேர்தலில் மஹிந்தவின் கை ஓங்கினால் கரட் எறியப்பட்டு ஜெனிவாவின் தடி மஹிந்தரைத் தாக்கும். மேலும் ஒரு தீர்மானம் கூட நிறைவேற்றப்படலாம். மஹிந்த தோற்கடிக்கப்பட்டால் ஜெனிவாத் தடி கிடப்பில் போடப்பட்டு ஐநா உதவியுடன் உள்ளக விசாரணை நடக்கும். அத்துடன் எல்லாம் முடிந்துவிடும். தமிழர்களின் நம்பிக்கை தவிடு பொடியாகும். இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டுதான் 2015 சமர்த்திருக்கப் பட வேண்டிய அறிக்கை ஒத்தி வைக்கப்பட்டதும் இலங்கைத் தேர்தல் திகதி முடிவு செய்யப்பட்டதும்.

சுமந்திரன் சொன்னது சரிதான் பன்னாட்டு விசாரணை முடிந்து விட்டது - மஹிந்த தோற்கடிக்கப்பட்டால்.

*கருத்துக்களுக்கு -* facebook.com/orupaper @orupaper

**கடன் சுமையால் கஸ்டப்படுகிறீர்களா?**

**தனிநபரோ... வியாபாரமோ...**

- கடன்/Credit Cardக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
- Bankruptcy யை தழுவ அல்லது தவிர்க்க...
- வியாபாரத்தை பலப்படுத்த...
- TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...

**இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்**

**உங்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கிறோம்**



BARNET-LONDON 020 8216 2520 MR. BRIAN
CROYDON 020 8150 9950 MR SIVA RANJAN
CAMBRIDGESHIRE 01354 707 911 MR. VAHEESAN

BBK PARTNERSHIP
www.bbkca.com
Email: admin@bbkca.com

Chartered Accountants and Business Recovery Professionals

- Accountancy / Audit
- Tax Solutions
- Company Formation
- Confidential Tax Consultancy
- Investigations / Tax Mitigation
- Bankruptcy / IVA
- Liquidations
- Business Startup & Consultancy
- Solicitors Rules Audit
- Payroll / VAT / Book keeping

R3 Association of Business Recovery Professionals
THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS IN ENGLAND AND WALES

# Tamil National Alliance presents pro-imperialist manifesto in Sri Lankan elections



By K. Nesan

On July 25, the Tamil National Alliance (TNA), which represents the Sri Lankan Tamil elites, presented a reactionary election manifesto for the Sri Lankan parliamentary elections at a press conference in the northern Tamil-majority city of Jaffna.

In the face of rising social anger in Tamil areas of Sri Lanka, the TNA backs the government in Colombo, which was installed through a US-engineered regime-change operation in January's presidential elections. The TNA insists that this government will provide an opportunity for a power-sharing settlement benefiting the Tamil people.

The manifesto fully corresponds to the instructions issued by US Secretary of State John Kerry during his visit to Sri Lanka in May. After meeting a TNA delegation, Kerry said the TNA needed to work with the "the new government's initiative towards an amicable solution in the interests of the country."

According to M.A. Sumanthiran, a member of the delegation that met Kerry, the US Secretary of State said "he was not asking the Tamils to give up their stand on issues of concern to them, but to work towards a mutually acceptable settlement with the Sinhalese majority."

The TNA openly boasts of its role in the US-assembled political line-up that secured President Maithripala Sirisena's election in January. It writes: "We made a significant contribution towards the achievement of these objectives on the 8th of January 2015." In that operation, President Mahinda Rajapakse, who was closely aligned to China, was replaced by Maithripala Sirisena, in accordance with the US "pivot to Asia" and its preparations for war against China.

TNA leader Sampanthan said: "We will not stop our journey toward a political solution. We strongly believe the parliamentary election results will be similar, confirming the January 8 victory of Maithripala Sirisena. If not, then we would support Maithripala forming a strong government in the parliament."

Since Sirisena's installation as president, Sri Lankan foreign policy has drastically shifted toward strengthening US influence in the Indian Ocean. Washington is closely monitoring the election, hoping to intensify the grip it secured through January's regime-change operation. Dennis Blair, a former US Director of National Intelligence, commented recently: "Sri Lanka's parliamentary election on August 17 will determine whether the reforms of President Maithripala Sirisena, himself elected to the surprise of most observers in January, will continue."

The TNA manifesto validates the Sirisena government's policies toward Tamils, writing that "since January 2015, decisions have been taken by the new regime for the return of lands to, and the resettlement of, the displaced Tamil People."

In fact, during the past six months, nothing substantial has changed in the lives of the thousands of people who met untold suffering during the bloody civil war waged by successive Colombo governments to suppress the Tamil minority in Sri Lanka. Except for a few token gestures, the new regime has continued the racist politics of Rajapakse's administration.

Sirisena took office with a "100-days program" promising to "reinstate democracy," raise living standards and increase the salaries of public and private sector employees. His promises have not produced any appreciable benefits for the working class, and new attacks are being prepared on working people, both Sinhala and Tamil.

The parliamentary elections are designed to allow the regime to re-brand its policies, scale back the minimal concessions it has made, and, as in Greece, introduce painful austerity measures to meet the demands of the International Monetary Fund and global finance capital.

The TNA manifesto strongly suggests that Sirisena and Prime Minister Ranil Wickremesinghe will remain in power after the elections to initiate "a comprehensive program for the development of the North and the East."

The TNA's proposed development program—including an international airport, sea ports and fishery harbours—is designed to promote the exploitation of cheap Tamil labour. Since the end of the civil war in 2009, the government has established small-scale industrial units producing mainly garments for export. The architecture of these units resembles prisons; they employ workers for lower wages than free-trade zones in other parts of the country. The utterly anti-working class character of the TNA's nationalist perspective underscores the political significance of the Socialist Equality Party's (SEP) campaign in the current elections. The SEP is the only party fighting for the unity of the Tamil and Sinhalese working class in struggle against war and austerity, based on a revolutionary socialist perspective. The SEP is running candidates in Jaffna, Nuwara Eliya and Colombo.

The TNA's program testifies to the political bankruptcy of Tamil nationalism, which has been increasingly evident since the defeat of the separatist Liberation Tigers of Tamil Eelam (LTTE) in 2009. According to the Tamil daily Virakesari, TNA leader Sampanthan told a group of TNA members and supporters: "We can't continue our political journey, we have to bring it to an end. If the Tamil people present us with an over whelming victory, electing 20 of our members to parliament, we would present them a political solution before the end of 2016."

Sampanthan's "political solution" is an imperialist-sponsored power-sharing agreement with the government in Colombo. Such an agreement would provide a greater share to the Tamil bourgeoisie in the exploitation of their "own" people. Tamil workers and poor must reject such an agreement, which offers nothing to them, and prepare for a struggle, together with their class brothers and sisters of all ethnicities, against austerity and the rising danger of war. The TNA manifesto begins by recounting the negotiations and agreements between Tamil nationalists and successive Sri Lankan governments ever since formal independence in 1948. The political record of Tamil nationalism is a series of disappointments, failures and betrayals in seeking power-sharing bargains with the Sinhalese bourgeoisie.

Since 1968, the Tamil nationalist parties have cited the "breach of promises" of the Sri Lanka Freedom Party (SLFP) and United National Party (UNP), the main Sinhalese capitalist parties, to justify their stance of supposedly refusing to enter into such agreements. During the past ten years, the TNA leadership stressed that mediation by the "international community," that is the major imperialist powers, was a precondition for any negotiations with the government.

In January, however, the TNA engaged in closed-door negotiations with the UNP and SLFP leaderships, apparently with US mediation, to extend unconditional support to Sirisena's campaign. Media reports in January stated that Sumanthiran, a leading TNA member, demanded a ministry during the negotiations. The TNA quickly denied the reports, however, claiming that no secret agreements or promises of ministerial positions were behind its position in the presidential election.

Except for a brief remark that the LTTE "continued its armed struggle," the manifesto is silent on the history of the LTTE's demand for a separate state. The bloody defeat of the LTTE in the civil war was primarily an outcome of the bankruptcy of its Tamil nationalist perspective. In the Tamil North and East of Sri Lanka, the LTTE established its political authority by suppressing the workers and poor, and killing its political opponents.

> The TNA manifesto strongly suggests that Sirisena and Prime Minister Ranil Wickremesinghe will remain in power after the elections to initiate "a comprehensive program for the development of the North and the East."

The LTTE alienated the Sinhala workers by staging periodical brutal attacks on Sinhalese civilians. For international support, the LTTE relied on US and European imperialism and the Indian bourgeoisie, even after they banned the organisation and extended full diplomatic and military aid to Colombo against the LTTE. The result was a catastrophic defeat for the LTTE in the civil war and the virtual annihilation of its forces on the island, together with the deaths of thousands of civilians, in a massacre by the Sri Lankan military.

The TNA's response is to appeal to the United States and other imperialist powers to intervene into Sri Lankan politics, supposedly to ensure a lasting peace in the war-torn country. The manifesto states: "The TNA is firmly of the view that international auspices are necessary to achieve permanent peace through genuine reconciliation, thereby enabling all peoples living in Sri Lanka to live as equal citizens."

Even after its pleas to the imperialist powers at the end of the civil war went unanswered, the TNA is again making bankrupt and dangerous appeals for imperialist intervention in the politics of Sri Lanka. The experience of Washington's neo-colonial interventions in Iraq, Afghanistan, Libya and Pakistan give the lie to the TNA's worship of the "international community." The imperialist powers manipulated ethnic divisions and religious conflicts to dominate these countries, resulting in the killing of hundreds of thousands of people.

*Courtesy: wsws.org*

Mass Global Shipping
Reliable, Dependable and honourable



Special Offer
Freight
+
Wooden Box
£65.00


உங்கள் பொருட்களை ஆகாய தரை கடல் மார்க்கமாக பாதுகாப்பாகவும் துரிதமாகவும்
குறைந்த செலவிலும் அனுப்புவதற்கு நம்பிக்கையுடன் நாட வேண்டிய ஒரே நிறுவனம்.
CITY WAREHOUSE
Located at BIG YELLOW STORAGE, Wandsworth
Mass Global Shipping – 100 Garratt Lane, London SE18 4DJ
T: 020 8864 4244 M: 07940108177
Special Offer
Within London Collection
£10/-*
* Within London Postcode Only
Door 2 Door Island-wide
within Colombo £40*
* T carton
VEHICLES SHIPMENT
From £725 all inclusive*
Conditions Apply
No Hidden Charges
No 3rd Party Agents
Fully Gated Yard Facility 24X7 CCTV Monitoring
No. 58, THE ARCHES, HARROW, HA2 8AA
Tel : 0208 422 1232, 0208 864 4244
Opening Times - Monday to Friday 9am – 6pm | Saturday 9am-6pm
E-Mail: info@massshipping.com Web : www.massshipping.com
4 Collection Points :
Harrow, Watford, Knightsbridge, Croydon

# The international significance of the Sri Lankan general election

By : Peter Symonds

The Sri Lankan parliamentary election on August 17 deserves to be closely followed. While the events in Greece and the betrayal of Syriza have been the subject of wide media attention, the political crisis in Sri Lanka is another acute expression of the breakdown of global capitalism, which is fuelling bitter geo-political rivalries and social counterrevolution against the working class.

Sri Lanka, which sits astride vital sea lanes, is a focus of the US "pivot to Asia" and its preparations for war against China. The United States, along with India, was deeply involved behind-the-scenes in the ouster of Mahinda Rajapakse as president in the January 8 presidential election. Rajapakse's "crime," as far as Washington and New Delhi were concerned, was not his autocratic methods of rule or the atrocities for which his government was responsible in the final stages of the communal war against the separatist Liberation Tigers of Tamil Eelam (LTTE), but his close ties with Beijing.

The regime-change operation engineered by Washington, in league with former President Chandrika Kumaratunga and the pro-US United National Party (UNP), resulted in the installation of Maithripala Sirisena as president. Various middle-class liberal groups and pseudo-left organisations played the critical role in dressing up Sirisena, who as Rajapakse's health minister was just as culpable for all of the government's crimes, as a champion of democracy. The SEP alone exposed this fraud and warned the working class that Sirisena would be just as ruthless as Rajapakse in imposing the agenda of big business.

Since January, Sri Lanka has rapidly been drawn into Washington's "pivot to Asia" against Beijing. Following the election, a string of high-level US administration and military figures made a beeline for Colombo, culminating in the visit of US Secretary of State John Kerry in May. He called for "an annual partnership dialogue" and identified the importance of Sri Lanka's "strategic location near deep-water ports in India and Myanmar," which could enable it to "serve as the fulcrum of a modern and dynamic Indo-Pacific region." A crucial aspect of the Pentagon's war planning against Beijing is the ability to disrupt China's shipping routes across the Indian Ocean to supplies of energy and raw materials in Africa and the Middle East.

Sirisena came to power promising to improve living standards and guarantee democratic rights—all within a whirlwind 100 days—after which he would call a parliamentary election. Burdened with a growing debt, the Sri Lankan economy is teetering on the brink of a balance-of-payments crisis. In March, the International Monetary Fund (IMF) flatly rejected Colombo's request for a $4 billion loan, demanding greater budget cutbacks and, in effect, a reversal of the government's very limited handouts.

Sirisena has already broken many of his "100 days" pledges, delaying loan increases for students and providing only part of the promised pay increase for public-sector workers.

The current election campaign takes place under conditions of acute political crisis in Colombo and deep fractures within the ruling elite. The two contenders in the January presidential election are both members of the opposition Sri Lanka Freedom Party (SLFP), and Sirisena, by virtue of being the country's president, is also nominal party head. However, rising public hostility towards the government has emboldened Rajapakse and his supporters to take control of the party's election campaign and promote the ousted president as the next prime minister. In so doing, Rajapakse is resorting to the stock-in-trade of Colombo politicians, whipping up anti-Tamil chauvinism and fears of an LTTE revival.

The prospect of Rajapakse returning to power has already triggered alarm bells in Washington and New Delhi, which will not tolerate Colombo's resumption of close ties with Beijing. The announcement that Rajapakse would run in the election was greeted by a storm of criticism from Sri Lankan liberal and pseudo-left organisations. Those that denounced the "fascist Rajapakse dictatorship" in January have not hesitated to demand that Sirisena use his autocratic presidential powers to block Rajapakse's return to power.

Sirisena has already announced that he will not appoint Rajapakse as prime minister even if the SLFP and its allies win a majority in the August 17 election. Such a flagrantly unconstitutional action could only be enforced through the establishment of an autocratic regime backed by the military.

In Greece, the pseudo-left in power—the Syriza government—carried out a monumental betrayal of the working class. In Sri Lanka, the pseudo-left organisations—the Nava Sama Samaja Party (NSSP), the United Socialist Party (USP) and the Frontline Socialist Party (FSP)—have been the cheerleaders for Sirisena and the right-wing, pro-American UNP. Their integration into ruling circles is underscored by the appointment of NSSP leader Wickremabahu Karunaratne to the 13-member National Executive Council (NEC)—the top government advisory body overseeing policy implementation—where he functions as the regime's apologist in chief.

Despite sharp differences in foreign policy orientation, whichever parties form the next government will rapidly drop their election promises as they proceed to impose the IMF's austerity demands. The gulf between the needs and aspirations of the working class and the entire political establishment is an expression of the immense social divide between rich and poor and the irreconcilability of sharpening class antagonisms.

The SEP is alone in advancing a revolutionary socialist program against war, austerity and attacks on democratic rights in opposition to both the Sirisena and Rajapakse camps of the ruling class. Sri Lanka is being inexorably drawn into the maelstrom of geo-political rivalry and conflict—a process that can be opposed only on the basis of an internationalist perspective aimed at uniting workers on the island with their class brothers and sisters throughout the Indian subcontinent and globally to abolish capitalism, which is the root cause of war.

The SEP is the only party capable of uniting workers across ethnic lines. It has waged an intransigent political struggle against all forms of nationalism and communalism and mounted an unswerving and principled opposition to the protracted war waged by successive Colombo governments against the democratic rights of the Tamil minority. The SEP fights for a Socialist Republic of Sri Lanka and Eelam as part of the struggle for socialism throughout South Asia and internationally. It deserves the support of workers and young people around the world.









## Word Finder

Find the names of your favorite Disney Princesses in the word finder below

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| R | A | P | U | N | Z | E | L | F | S |
| S | N | O | W | W | H | I | T | E | A |
| A | S | C | S | T | I | O | P | Q | U |
| M | Y | A | R | I | E | L | T | F | R |
| T | O | H | S | O | A | P | B | M | O |
| I | S | O | F | I | S | H | E | U | R |
| C | I | N | D | E | R | E | L | L | A |
| W | E | T | I | A | N | A | L | A | M |
| H | I | A | M | I | L | K | E | N | O |
| J | A | S | M | I | N | E | C | U | P |

Ariel
Belle
Cinderella
Tiana
Jasmine
Aurora
Rapunzel
Snow White
Pocahontas
Mulan

I'M A LITTLE PRINCESS

Tune: "I'm A Little Teapot"

I'm a little princess, see my crown.
I'm a little princess, see my gown.
When I am sad, I never wear a frown.
When I am happy, I dance around.
I'm a little princess because I share.
I'm a little princess because I care.
When I am sad, I never wear a frown.
When I am happy, I dance around.





## Colouring - 247





help to find the way





## This Week Coloring Kids



Rehasan Asokan



Vigaashan Asokan



Vishalini Mangalarubn



Archsiga, 9 Years'



Shobana



S. Chejen (5)



S. Kirishni



S. Krishni



KR. Mazneen, 9 Yrs'

ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் (இந்து) ஆலய அறக்கட்டளை

SHRI KANAGA THURKKAI AMMAN (HINDU) TEMPLE TRUST

5 Chapel Road, Ealing, London, W13 9AE, UK Tel: 0044 208 810 0835 Fax: 0044 208 840 0485

Email: info@ammanealing.org Web: www.ammanealing.org

**கோவிலின் செலவுகள் தவிர்ந்த வருமானத்தில் 1/3 பகுதி ஈழத்தில் அவதியுறும் மக்களைப் பராமரிப்பதற்கென பயன்படுத்தப்படுகிறது**

| | | | |
|---|---|---|---|
| 1 | இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் இல்லம் - பதுளை | 8 | அம்மன் மகளிர் இல்லம் - அம்பாறை |
| 2 | இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் இல்லம் - திருப்பழுகாமம் | 9 | யோகர்சுவாமி சைவ மகளிர் இல்லம்- மட்டக்களப்பு |
| 3 | இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் இல்லம் - செட்டிப்பாளையம் | 10 | சிவன் அருள் இல்லம் - மன்னார் |
| 4 | திலகவதியார் இல்லம் - மட்டக்களப்பு | 11 | இந்து வித்தியாபிருத்திச் சங்கம் - யாழ்ப்பாணம் |
| 5 | யோகர் சுவாமி சிறுவர் இல்லம் - மட்டக்களப்பு | 12 | அன்பகம் - வவுனியா |
| 6 | விபுலானந்தர் இல்லம் - மட்டக்களப்பு | 13 | ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி இல்லம் - வவுனியா |
| 7 | விபுலானந்தர் இல்லம் - அக்கரைப்பற்று | 14 | ஸ்ரீ சத்தியசாயி இல்லம் - வவுனியா |
| 15 | மகாதேவா ஆச்சிரம சைவச்சிறுவர் இல்லம் | 16 | கன்னியர் மடம் பெண்கள் சிறுவர் இல்லம் - கிளிநொச்சி |

மேற்குறிப்பிட்ட இல்லங்களில் உங்கள் பேருதவியினால் 500 பிள்ளைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றார்கள். ஏராளமான வேண்டுதல்கள் இல்லங்களில் இருந்து வந்த வண்ணம் உள்ளன. அம்பிகை அடியார்களாகிய நீங்கள் முன்வந்து இன்னும் இப்பணிக்கு உதவவேண்டுமென வினயமாக வேண்டி நிற்கின்றோம். கடந்த ஆண்டில் 'காக்கும் கரங்கள்' திட்டத்திற்கு £77,140.00 பவுண்கள் அனுப்பப்பட்டுள்ளன. ஆலயம் தொடங்கிய காலத்தில் இருந்து இதுவரை எமது ஆலயத்தினால் தாயகப்பணிக்கு £2,000,112.55 பவுண்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.



ஆதரவற்ற பிள்ளைகளை என்றும் அரவணைப்போம்!

அவர்களுக்கு வாழ வழிகாட்டுவோம்!

அவர்களுக்குப் படிப்பறிவித்து, இருளகற்றுவோம்.

அவர்களுக்கு கலங்கரை விளக்காக அமைவோம்.!

அவர்களை உயர்த்தும் ஏணிப்படியாக எங்களை அர்ப்பணிப்போம்!






ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தில் பணியாற்ற

# ஆலய சிவாச்சாரியார்கள் தேவை

**தகைமைகள் :** விண்ணப்பதாரி சிவாச்சாரியார் பட்டம்(குருக்கள்) பெற்றிருக்க வேண்டும். தமது பணிக்காலங்களில் சிவாச்சாரியாராகப் பணியாற்றியிருக்க வேண்டும்

**கடமைகள் :** ஆகம விதிப்படி ஆலயத்தில் பூசைகள் செய்தல்

**வேதனம் :** பிரித்தானிய வேதன முறைமைகளுக்கமைவானது. விண்ணப்பதாரிகளின் சிறப்புத் தகமைகளை கவனத்தில் கொண்டு நிர்ணயம் செய்வதுடன் அடியார்கள் வழங்கும் தட்சணை பங்கிடப்பட்டு வழங்கப்படும்

## விண்ணப்ப முடிவு திகதி : 22-08-2015

விண்ணப்பங்களை கீழ்காணும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

**SHRI KANAGA THURRKAI AMMAN TEMPLE TRUST**

5, Chapel Road, London. W13 9AE

Tel: 0208 810 0835 Email : info@ammanealing.com


VIJAY
10 POUND*
DISCOUNT
ON VIEWING CARD
இந்த திருவிழாவில் விஜய் டிவி
வியூயிங் கார்டை 10 பவுண்ட்
தள்ளுபடியில் பெற்றிடுங்கள்.
இச்சலுகை
ஆகஸ்ட் 9ஆம் தேதி மட்டுமே!
ஆகஸ்ட் 9ஆம் தேதி நடைபெறும்
லண்டன் ஈலிங் அம்மன் திருவிழா நாளன்று
விஜய் டிவியின் மாபெரும் மலிவு விற்பனை
~~£ 59.99~~
இப்போது
£ 49.99
VIJAY
விஜய் டிவி வியூயிங் கார்டு*
வாங்குபவர்களுக்கு அழகிய BAG
இலவசமாக வழங்கப்படும்.
* Terms & Conditions Apply.
Authorised Dealer:
SGA VIDEO - 020 84535644 / 020 36971395

# தீவினையகற்று

நன்மை செய்யாவிட்டாலும் தீமையாதல் செய்யாது இரு என்பது மூதறிஞர்கள் வழிவந்த அறிவுரை. தீவினையால் அல்லல்படும் நிகழ்வுகள் அன்றாடம் செய்திகளாக வருவதை பத்திரிகைகள் நிரப்புகின்றன. கொலைகள், களவுகள், கற்பழிப்புகள், விபத்துக்கள் பற்றிய செய்திகள் தினமும் வருவதைத் தடுக்க முடியாமல் சமூகம் தத்தளிப்பது எதனால் என்று சிந்தித்த ஒளவையார் தீவினையகற்று என்று இரண்டே இரண்டு சொற்களில் கூறிவிட்டார்.

தீவினைகள் என்று கூறும்போது, பாவச் செயல்களைத் தூண்டும் சிந்தனைகளைத் தான் இங்கு குறிப்பிட முடியும். சிந்தித்து செயற்படும் பாவச் செயல்களை சிந்தனையிலேயே தவிர்த்துவிட முடியுமானால், அதனால் விளையும் துன்பங்களைத் தடுத்துவிட முடியும். கொலைகள் சில சமயங்களில் சந்தர்ப்ப சூழ்நிலையில் ஏற்படுவதுமுண்டு. ஆனால், கூடுதலான கொலைகள் நன்கு திட்டமிட்டு செயல்படுவதை, குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்படும் எண்ணிக்கையைக் கணிக்கும் போது அறியக்கூடியதாக இருக்கிறது.

களவுகள் நன்கு திட்டமிட்டே இடம்பெறுவதைக் கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன. உழைத்துச் சாப்பிட முடியாத சோம்பேறிகள் பிறர் பொருளை அபகரிக்க நன்கு சிந்தித்து. திட்டமிட்டுச் செயற்படுவதை குற்றமிழைத்தவர்களுக்கு எதிராக நடாத்தப்படும் விசாரணைகளிலிருந்து புலனாகிறது. எவ்வளவோ சாதுரியமாகச் சிந்தித்து செயலாற்றப்பட்ட களவுகள், குற்றமிழைத்தவர்கள் தங்களை அறியாமலே விட்டுச்செல்லும் தடயங்கள் மூலம் அகப்பட்டுக் கொள்வதை சமீபத்தில் பிரித்தானியாவில் நடந்த வங்கிக் கொள்ளை நினைவூட்டுகிறது.

கற்பழிப்புகள் சில சமயங்களில் சந்தர்ப்பவசமாக இருப்பினும், அநேகமான குற்றச்செயல்கள் நன்கு திட்டமிட்டே நடந்துள்ளதை சம்பவங்கள் கூறுகின்றன. இதற்கு அடிப்படையாக அமைவது தரம் குறைந்த சிந்தனை தான் என்பது மறுக்க முடியாதது. இத்தகைய கெட்ட சிந்தனையை முதலில் அகற்றிவிட்டால், தீவினைகள் அகன்று விடுமென்பதாலேயே ஒளவையார் தீவினையகற்று என அறிவுரை கூறுகிறார்.

விபத்துக்கள் சில சமயங்களில் தவிர்க்க முடியாது போனாலும், ஏதோ ஒரு விதத்தில் சம்பந்தப்பட்டவர்களின் கவலையீனம் தான் காரணம். சமீபத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தில் விபத்து சிறியதாக இருந்தபோதிலும், அதுபற்றிய சர்ச்சையில், 79 வயது நிரம்பிய ஒரு முதியவர் கத்தியால் குத்தப்பட்டு சாவைத் தழுவிய பரிதாப நிலைமையை அறிந்தோம். கத்தியை கையோடு வைத்திருக்கும் ஒரு கலாச்சாரம் நாகரிகமடைந்த நாடுகளிலேயே காணும் போது, தீவினையை அகற்றுவது அவ்வளவு சுலபமல்ல. முயற்சித்துப் பாருங்கள்.

## புற்றுநோயைக் கண்டறிய சுவாசப் பரிசோதனை

புற்றுநோயால் பாதிக்கப்படும் மக்களும் மரணங்களும் நாளுக்கு நாள் அதிகரித்து வருவது நாளாந்த செய்திகள். புற்று நோயில் தான் எத்தனைவகை. இதில் மரண அபாயம் கூடிய புற்று நோயை ஆரம்பத்தில் கண்டுகொள்வது அவ்வளவு இலகுவாக இருக்கவில்லை. குறிப்பாக உணவுக் குழாய்களில் உண்டாகும் கட்டிகளை, என்டோஸ் கோப்பி (Endoscopes) பரிசோதனைகள் மூலம் தான் கண்டுகொள்ள முடிந்தது. இந்தச்சோதனைகளைக் கையாள்வதற்கு அதிக செலவும், கூடிய நேரமும் தேவைப்படுவதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். ஆகவே, மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்ட ஆராய்ச்சிகள் மூலம் சுவாசப் பரிசோதனை (Breathalyser) போன்ற ஒரு சாதனத்தை சமீபத்தில் கண்டுபிடித்துள்ளதாக, இலண்டன் இம்பீரியல் கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியர் ஜோர்ஜ் ஹானா (George Hanna) தெரிவிக்கிறார். இப்பரிசோதனைகளில் 200 நோயாளிகள் உட்படுத்தப்பட்டதாகவும், மரண அபாயம் தரக்கூடிய புற்றுநோயின் இரு வகைகள், உணவுக் குழாய்களில் தொற்றிக் கொள்ளும் ஆரம்பக்கட்டத்தில் அறியக்கூடியதாக இருந்ததை நிரூபித்துள்ளனர்.

இப்புதிய உபகரணத்தின் உதவியுடன் செய்த பரிசோதனையில், புற்றுநோய் காரணமாக உலகளவில் உண்டாகும் 7 மரணங்களில் ஒன்றையாவது தடுக்க முடியும் என ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர். அத்துடன், இச்சாதனத்தின் உதவியுடன் கையாளப்படும் பரிசோதனைகளின் பெறுபேறுகள் சில நிமிடங்களில் கிடைக்குமென்பதால், புற்றுநோயின் அறிகுறி தென்படும் ஆரம்பக்கட்டத்திலேயே சிகிச்சைகளைத் தொடங்க வசதியாக இருப்பதால், புற்றுநோய் வீரியமடையாமல் தடுக்க முடியுமெனத் தெரிவிக்கின்றனர். ஏனெனில், புற்றுநோயின் தாக்கம் உடலில் வேறு பாகங்களுக்கும் பரவமுன்னர், பரிகாரம் தேட முடியுமானால் மரணங்களைத் தடுக்க முடியுமென்பதே மருத்துவ விஞ்ஞானிகளின் அபிப்பிராயமாகும்.

**தகவல் களஞ்சியம்**

வைத்திருப்பவர் : **உமா மகாலிங்கம்**

## எதிர்கால தமிழர் விகிதாசாரம்

உலக சனத்தொகை குடிதினத்தையொட்டி, யாழ். மருத்துவா சங்கத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட கலந்துரையாடலில், சங்கத்தின் தலைவர் முரளி வல்லிபுரநாதன் அவர்கள் தெரிவித்த சில ஆய்வுக் குறிப்புகள் எமது வருங்காலச் சந்ததியினருக்கு பயனுள்ளதாகக் கருதுவதால், அவருடைய அறிக்கையின் முக்கிய குறிப்புகளை இங்குதர விரும்புகிறோம்.

வாக்காளரின் சனத்தொகை அடிப்படையில் யாழ் தொகுதிக்கான நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் 9 இலிருந்து 7 ஆகக் குறைக்கப்பட்டு நடைபெறப்போகும் தேர்தலில் உள்வாங்கியுள்ளதை அறிவீர்கள். இன்னும் 15 வருடங்களில் சிங்களவர்களுக்கு அடுத்த நிலையிலிருக்கும் தமிழர்கள், முஸ்லிம் இனத்தவர்களால் பின்தள்ளப்பட்டு இரண்டாவது சிறுபான்மையினமாக வரும் அபாயம் உள்ளதென புள்ளிவிபர ஆதாரத்துடன் முரளி தெரிவித்துள்ளார். 30 வருட யுத்தத்தினால் ஏற்பட்ட உயிரிழப்பு, மீள்குடியேற்ற மறுப்பு. திட்டமிட்ட பாரபட்சங்கள், காணாமல் போனவர்களின் எண்ணிக்கை போன்ற காரணிகளால் பாதிக்கப்பட்ட சனத்தொகை வட கிழக்கில் வாழும் தமிழ்மக்களின் குடிசன மதிப்பை குறைவடையச் செய்த பாதிப்பினால் 2012 ஆம் ஆண்டு மதிப்பிடப்பட்ட 11.2 விகிதமான தமிழ்மக்கள் 2031 அளவில் 10.3 விகிதமாகச் சரிந்துவிடுமென முரளி வல்லிபுரநாதன் தெரிவிக்கிறார்.

வட கிழக்கில் மட்டும் 89,000 விதவைகளாக வாழும் பெண்கள், மறுவாழ்வுக்கு உள்வாங்கப்பட்டாலே ஒழிய, இவர்கள் மூலம் குடிசனப் பெருக்கம் நிகழ்வது அசாத்தியம். இதைவிட காலம் தாழ்த்திய திருமணங்களில் பெண்களை விட ஆண்கள் தான் அதிகமாக இருப்பதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. பொருளாதாரம், சீதனம், சாதிப்பிரச்சினை, பிரதேசவாதம் ஆகிய சமூகப் பிரச்சினைகளும், தமிழரின் சனத்தொகையை கட்டுப்படுத்துகிறது.

காலம் தாழ்த்தி திருமணம் செய்வதினால் குழந்தைகள் பிறக்கும் விகிதம் கூட 4.1 விகிதமாக 2003 இல் கணிக்கப்பட்ட தொகை 2011 ஆம் ஆண்டுக் கணிப்பில் 2.4 விகிதமாக குறைந்துள்ளதை மிகக் கவலையுடன் தெரிவிக்கிறார் முரளி. எனவே, எதிர்காலச் சந்ததியின் நலன் கருதி, இலங்கைத் தமிழர் முதலில் காலம் தாழ்த்திய திருமணங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதோடு, குடும்பக்கட்டுப்பாட்டுச் சிந்தனையையும் கைவிட வேண்மென கோரிக்கை விடப்படுகிறது. இல்லாதுபோனால், 2012 இல 74.9 விகிதமாகக் காணப்பட்ட சிங்களவர்கள் 2041 இல் 88 விகிதமாகவும், 9.2 விகிதமாகக் காணப்பட்ட முஸ்லிம்கள் 11.7 விகிதமாக அதிகரிப்பது ஆச்சரியமில்லையெனவும், இன்னும் 15 வருட காலத்தில் வடகிழக்கில் வாழும் இலங்கைத் தமிழர்கள், இரண்டாவது சிறுபான்மையினராவது தவிர்க்க முடியாததென எச்சரிக்கை விடப்படுகிறது. ஈழத்தமிழர்கள் விழித்துக் கொள்வார்களா?

ஸ்ரீ ராமஜெயம்



ஸ்ரீ ஜேய வீர ஆஞ்சநேயர் ஆலயம் - கொலின்டேல்

15ம் வருட அலங்கார உற்சவப் பெருவிழா விஞ்ஞாபனம்

காலம் : ஜய வருஷம் 19/8/15 முதல் 30/08/15 வரை

ஸ்ரீ ஆஞ்சநேயப் பெருமான் அடியார்களே,

சுகலவளங்களும்நிறைந்துவிளங்கும்இலண்டன்மாநகர்கொலின்டேல்பகுதியில்வீற்றிருந்து அடியவர்களுக்குஅருளைவாரிவழங்கிகொண்டிருக்கும்ராமதூதன்ஸ்ரீஜெயவீர ஆஞ்சநேயபெருமானுக்கு எதிர்வரும் ஆவணி மாதம் 2ம் நாள் 18-08-2015 செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு விநாயகர் பூஜையுடன் ஆரம்பிக்கப்பட்டு அதனை தொடர்ந்து 12 நாட்கள் ஆஞ்சநேய பெருமானின் ஜய வருட அலங்கார உற்சவம் நடைபெற திருவருள் கூடியுள்ளது. அத்தருணம் அடியார்கள் அனைவரும் ஆசார சீலர்களாக விரதம் இருந்து திரளாக வருகை தந்து இறைவனின் திருக்காட்சியை கண்டு திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம்.

உற்சபகால நீகழ்ச்சிகள்

| காலை | மாலை |
|---|---|
| 09:00 – விநாயகர் பூசை | 05:30 – விசேட அபிடேகம் |
| 10:00 – விசேட அபிஷேகம் | 07:00 – விசேட கலை நிகழ்ச்சி |
| 12:00 – பூஜை | 08:00 – அலங்கார பூஜை |
| 12:45 – மங்கள ஆராத்தி | 08:45 – மங்கள ஆராத்தி |
| 01:00 – அன்னதானம் | 09:00 – பிரசாதம் |

விழா இறுதி நாளான 30-08-2015 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9.00 மணிக்கு விசேட அஷ்டோத்திர (108) சங்காபிஷேகமும் மதியம் 12 மணிக்கு விசேட அலங்கார பூஜையும் நடைபெறும். மாலை 5.30 மணிக்கு சீதாதேவி சமேத ராமசந்திரஸ்வாமிக்கு **திருக்கல்யான உற்சவம்** நடைபெறும். விழாக்காலங்களில் பூஜைக்கு தேவையான பால் பழங்கள் தயிர் பூக்கள் மற்றும் அன்னதானத்துக்கு தேவையான அரிசி பருப்பு மரக்கறி போன்றவற்றை அளித்து ஆண்டவன் அருள் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

ஸ்ரீ ராமஜெயம்

இங்கனம்

அறங்காவலர்கள் மற்றும் ஆலயகுருக்கள்

அனைவரும் வருக ஆஞ்சநேயர் அருள் பெறுக !

ஆலய முகவரி : Sri Jeya Veera Anjaneyar Alayam, Hanuman Community Center, (Marquin Center), Marsh Drive, West Hendon, NW9 7QE

Tel : 020 3609 4313, www.anjaneyar.co.uk, Emai : info@anjaneyar.co.uk

# களத்தில் குதித்த துருக்கியும் முதுகில் குத்தப்படும் குர்திஷ் மக்களும்



**வேல் தர்மா**
*(ஒரு பேப்பருக்காக)*

துருக்கிப்படைகள் சிரியாவில் ஐ எஸ் எனப்படும் இஸ்லாமிய அரசுப் போராளிகள் மீதும் ஈராக்கில் குர்திஷ்த்தான் தொழிலாளர்கள் கட்சியின் போராளி அமைப்பினர் மீதும் தாக்குதல் நடாத்தத் தொடங்கியமை மேற்காசியாவில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலையில் பெரு மாற்றத்தை உருவாக்கியுள்ளது. ஐக்கிய அமெரிக்காவின் நட்பு நாடும் நேட்டோப்படைத் துறைக் கூட்டமைப்பில் ஒரு உறுப்பு நாடுமான துருக்கி இதுவரை காலமும் தனது விமானப் படைத்தளங்களை ஐ எஸ் அமைப்பினருக்கு எதிரான தாக்குதலுக்குப் பயன்படுத்த அமெரிக்காவிற்கு அனுமதி மறுத்திருந்தது. தற்போது அந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. துருக்கியில் நடந்த தீவிரவாதத் தாக்குதல்கள் துருக்கியின் நிலைப்பாட்டை மாற்றியுள்ளது.

## ◆ அமெரிக்காவிற்கு இரட்டை நன்மை

யேமனில் சவுதி அரேபியா களமிறங்கி இஸ்லாமியத் தீவிரவாதிகளுக்கு எதிராகப் போர் புரிகையில் சிரியாவில் ஐ எஸ் அமைப்பினருக்கு எதிராக துருக்கி தாக்குதல் தொடங்கியது ஐக்கிய அமெரிக்காவிற்கு ஒரு வெற்றி எனச் சொல்லாம். அமெரிக்கப் படைகள் தரையில் இறங்கிப் போர் புரியாமல் ஐ எஸ் அழிக்கப்பட முடியாது எனப் பல படைத்துறை நிபுணர்கள் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கையில் நேட்டோப் படைத்துறைக் கூட்டமைப்பில் ஆளணி எண்ணிக்கை அடிப்படையில் இரண்டாவது பெரிய படைத்துறையைக் கொண்ட துருக்கி தாக்குதல் செய்வது அமெரிக்காவிற்கு ஆறுதல் அளிப்பதாக அமைகின்றது. இஸ்லாமியத் தீவிரவாதிகளுக்கு எதிராக அமெரிக்கா நேரடிப் போரில் ஈடுபட்டால் அது ஆளணி இழப்புக்களையும் பணச் செலவையும் உருவாக்கும். சவுதி அரேபியாவும் துருக்கியும் தாக்குதல் செய்வது அந்த இரண்டும் அமெரிக்காவிற்கு நடக்காமல் செய்யும். அத்துடன் அமெரிக்காவிடமிருந்து இரு நாடுகளும் படைக்கலன்களை வாங்கும் போது அமெரிக்காவின் ஏற்றுமதி வருமானம் அதிகரிக்கும்.

## ◆ குர்திஷ் அமைப்புக்கள்

**1.** பிகேகே (PKK) - இது துருக்கியில் குர்திஷ் தான் தொழிலாளர் கட்சியின் போராளி அமைப்பு. 1978-ம் ஆண்டு உருவாக்கப்பட்ட தீவிர இடதுசாரிக் கொள்கையைக் தொழிலாளர் கட்சி துருக்கிய அரசுக்கு எதிராக கரந்தடிப் போரைச் செய்து கொண்டிருக்கின்றது.

**2.** வைபிஜி - (YPG/YPJ) - இவை இரண்டும் சிரியாவில் செயற்படும் மக்களாட்சி ஐக்கியக் கட்சியின் போராளிப் பிரிவுகளாகும். YPG ஆண் போராளிகளையும் YPJ பெண் போராளிகளையும் கொண்டவை. YPJதான் எல்லாக் குர்திஷ் போராளி அமைப்புகளில்லும் போரிடும் திறன் மிக்கது. இது சிரியாவின் தனது கட்டுப்பாட்டின் கீழ் ஒரு நிலப்பரப்பை வைத்திருக்கின்றது. அமெரிக்காவுடன் இது இணைந்து செயற்படுகின்றது.

**3.** பெஷ்மேர்கா - இது 1920களில் இருந்து ஈராக்கில் உரிமைக்காகப் போராடிவரும் குர்திஷ் மக்களின் அமைப்பாகும். 2003-ம் ஆண்டு அமெரிக்கப் படைகள் ஈராக்கை ஆக்கிரமித்த போது அவற்றுடன் பெஷ்மேர்கா இணைந்து போராடியது. தற்போது இது ஈராக்கில் பெரு நிலப்பரப்பை தனது கட்டுப்பாட்டின்கீழ் வைத்து ஒரு நிழல் அரசை நடாத்தி வருகின்றது.

## ◆ குட்டையைக் குழப்பிய துருக்கி

இதுவரை அமெரிக்காவுடன் இணைந்து போராடிக் கொண்டிருக்கும் குர்திஷ் மக்களின் போராளிகளிற்கு எதிராக துருக்கியப் படைகள் தாக்குதல் நடாத்தியமை இன்னும் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. எழுபதுகளில் சதாம் ஹுசேய்ன் சோவியத் ஒன்றியத்துடன் தனது உறவுகளை நெருக்கமாக்கிய போது ஈராக்கில் உள்ள குர்திஷ் மக்களுக்கு அமெரிக்கா மட்டுப்படுத்தப் பட்ட அளவில் படைக்கலன்களை ஈரானுடாக வழங்கியது. பின்னர் ஈரானில் மதவாதப் புரட்சி ஏற்பட்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் அமெரிக்கா ஈராக்குடன் தனது உறவை வளர்த்தது. பின்னர் சதாம் ஹுசேய்ன் குர்திஷ் மக்களுக்கு எதிரான ஓர் இன அழிப்புத் தாக்குதல் செய்யும்போது குர்திஷ் மக்கள் அமெரிக்கா தமக்கு உதவி செய்யும் என நம்பி ஏமாந்தனர். அந்த ஏமாற்றத்தின் இரண்டாவது கட்டமாக இப்போது துருக்கி குர்திஷ் மக்களை அழிக்கப் போகின்றதா? துருக்கி தாக்குதலைத் தொடங்கிய முதல் இரண்டு நாட்களிலும் ஐ எஸ் அமைப்பினர் மீது நடாத்திய தாக்குதலிலும் பார்க்க ஈராக்கில் உள்ள குர்திஷ் நிலைகள் மீதே அதிக தாக்குதல்களை நடாத்தியது. ஐ எஸ் இற்கு எதிராக ஒரு விமானப் பறப்பும் பெஷ்மேர்காவிற்கு எதிராக 185 பறப்புக்களும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. குர்திஷ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை துருக்கி ஐ எஸ் அமைப்பிற்கு இணையான பயங்கரவாதமாகப் பரப்புரை செய்து கொண்டிருக்கின்றது. ஈராக்கின் காந்தில் மலைப்பிரதேசத்தில் உள்ள குர்திஷ் போராளிகளின் தலைமைச் செயலக முகாம்களிலும் படைக்கலக் களஞ்சியங்கள் மீதும் துருக்கிய விமானப் படைகள் தாக்குதல் நடாத்தின. பதிலடியாக துருக்கியப் படையினர் மீது தற்கொடைத் தாக்குதல்கள் நடாத்தப்படுகின்றன.

## ◆ சுய நிர்ணய உரிமையற்ற குர்திஷ் மக்கள்

ஈராக்கின் வடக்கில் ஏர்பில் நகரை ஒட்டிய பிரதேசத்திலும் துருக்கியின் தெற்கில் தியர் பக்கிர் நகரை ஒட்டிய பிரதேசத்திலும் ஈரானின் வடமேற்குப் பிராந்தியத்திலும் செறிந்து வாழும் குர்திஷ் இன மக்கள் மூன்று நாட்டு ஆட்சியாளர்களாலும் இன அழிப்பபிற்கு உள்ளாக்கப்பட்டவர்கள். 2014-ம் ஆண்டில் ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பினர் ஈராக்கிய அரச படைகளை பல பிராந்தியங்களில் இருந்து விரட்டிய போது குர்திஷ் மக்கள் அதை வாய்ப்பாகப் பயன்படுத்தி ஈராக்கில் உள்ள பெஸ்மேரா எனப்படும் குர்திஷ் போராளி அமைப்பு தமக்கு என ஒரு பிராந்தியத்தை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது. ஈராக்கில் குர்திஷ்ப் போராளிகளின் நிலைகளைத் துருக்கிய விமானங்கள் தாக்கியதுடன் துருக்கியில் வாழும் குர்திஷ் மக்களின் கட்சியான குர்திஷ் தொழிலாளர் கட்சி துருக்கியுடன் நடாத்தி வந்த சமாதானப் பேச்சு வார்த்தை முறிவடைந்து விட்டதாக அறிவித்தது. துருக்கியில் தமக்கு சுய நிர்ணய உரிமை வேண்டும் என முப்பது ஆண்டுகளாக குர்திஷ் மக்கள் போராடி வருகின்றனர். சிரியாவில் செயற்படும் குர்திஷ் போராளிகள் மீது துருக்கி தாக்குதல் நடாத்தியது. ஐக்கிய அமெரிக்காவுடன் இணைந்து செயற்படும் குர்திஷ் போராளிகள் இது தொடர்பாக அமெரிக்காவிடம் விளக்கம் கோரியுள்ளனர்.

## ◆ கேந்திர முக்கியத்துவம் மிக்க துருக்கி

துருக்கி குர்திஷ் மக்களுக்கு எதிராகச் செய்யும் நடவடிக்கைகளை தட்டிக் கேட்கும் நிலையில் அமெரிக்கா இல்லை. உலகின் புவிசார் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நாடுகளில் ஒன்றாக துருக்கி இருக்கின்றது. உலக எரிபொருள் வளத்தின் நடைபாதையில் இருக்கும் துருக்கி கிழக்கையும் மேற்கையும் இணைக்கக் கூடிய ஒரு தேசமாகத் திகழ்கின்றது. தென் கிழக்கு ஐரோப்பா, மேற்கு ஆசியா, வட ஆபிரிக்கா ஆகியவற்றின் நடுவில் துருக்கி இருக்கின்றது. புவியியல் ரீதியாக மட்டுமன்றி அரசியல் மற்றும் கலாச்சார ரீதியாகவும் ஆசியா, ஐரோப்பா, ஆபிரிக்கா ஆகிய கண்டங்களை இணைக்கும் ஒரு நாடாக துருக்கி இருக்கின்றது.

## ◆ நேட்டோவைக் கூட்டிய துருக்கி

தமது நாட்டில் ஐ.எஸ் அமைப்பினர் தாக்குதல் செய்ததாக ஐயப்பட்ட துருக்கிய அரசு நேட்டோப் படைத்துறைக் கூட்டமைப்பின் அவசர கூட்டத்தைக் கூட்டியது. சிரியாவில் இருந்து ஏவுகணைகள் துருக்கி மீது வீசப்பட்டது எனச் சொல்லி துருக்கியில் நேட்டோப்படையினரின் ஏவுகணை எதிர்ப்புக் கணைகள் நிறுத்தப்பட்டுள்ளன. நேட்டோவின் உறுப்பு நாடுகள் துருக்கிக்கு தமது ஆதரவைத் தெரிவித்த வேளை குர்திஷ் போராளிகளுக்கு எதிரான தாக்குதலை மட்டுப்படுத்தப் பட்ட அளவில் நடாத்துமாறு வேண்டிக் கொண்டன.

## ◆ அரபு வசந்தமும் துருக்கியும்

2011-ம் ஆண்டு அரபு வசந்தம் தொடங்கியதில் இருந்து துருக்கிக்கும் ஐக்கிய அமெரிக்காவிற்கும் இடையிலான உறவில் நெருக்கடி ஏற்பட்டது. லிபியாவில் கடாஃபியின் ஆட்சியை அகற்றியது போல் சிரியாவிலும் ஒரு விமானப் பறப்பற்ற ஒரு பிரதேசம் பிரகடனப்படுத்தி பஷார் அல் அசாத்தை சிரிய ஆட்சிப் பீடத்தில் இருந்து அகற்ற வேண்டும் என துருக்கி வற்புறுத்தி வருகின்றது. மேலும் அசாத்திற்கு எதிராகப் போராடும் கிளர்ச்சிக்காரர்களிற்கு படைக்கலங்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் துருக்கி அமெரிக்காவை வேண்டி இருந்தது. எகிப்தில் இஸ்லாமிய சகோதரத்துவத்தின் ஆட்சி நீடிப்பதை துருக்கி விரும்பியது.

## ◆ கேந்திரோபாயப் போட்டி

ஈராக்கின் வட பகுதியையும் சிரியாவின் வட பகுதியையும் தன்னுடன் இணைக்க துருக்கி விரும்புகின்றது. சியா முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஈராக்கில் சவுதி சுனி முஸ்லிம்கள் ஆட்சி நடத்த வேண்டும் எனக் கருதுகின்றது. ஈரான் அங்கு சியா முஸ்லிம்களின் ஆட்சி நடப்பதை விரும்புகின்றது. இவற்றால் சவுதி அரேபியா, ஈரான், எகிப்து, துருக்கி ஆகிய நாடுகளின் ஆட்சியாளர்களிடையே ஒரு பிராந்திய ஆதிக்கப் போட்டி நிலவுகின்றது. ஈரானைப் போல் ஒரு அரபு நாடு அல்லாத துருக்கி அரபுப் பிரதேசத்தின் வடக்கில் தனது ஆதிக்கத்தை நிலை நாட்ட விரும்புகின்றது. அமெரிக்கா மேற்காசியாவிலும் வட ஆபிரிக்காவிலும் தனது கேந்திரோபாயத் தரகர்களாக சவுதி, எகிப்து, துருக்கி ஆகிய நாடுகள் இருக்க வேண்டும் என விரும்புகின்றது. பொருளாதாரத் தடை நீக்கப் பட்ட ஈரானுடன் ஒரு புதிய கேந்திரோபாய உறவை உருவாக்கவும் அமெரிக்கா முயல்கின்றது. இரசியா மேற்காசியாவில் தனது ஆதிக்கத்தை மீள நிலை நாட்ட முயல்கின்றது. இந்த பல்முனைக் கேந்திரோபாயப் போட்டியில் வதை படப் போவது குர்திஷ் மக்களே.

கருத்துக்களுக்கு - facebook.com/orupaper @orupaper



# கறுப்பு யூலை நினைவு நிகழ்வுகள்




1983 ஆம் ஆண்டு யூலை மாதம் 23ஆம் திகதி இலங்கையின் சிங்கள பேரினவாத அரசினால் தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட இனப்படுகொலையின் 32ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நினைவேந்தல் நிகழ்வுகள் பிரித்தானியாவில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்களையே மேலே காண்கிறீர்கள்.

# நடக்க இருக்கும் நிகழ்வுகள்

**AUGUST 09 SUNDAY**

### இரதோற்சவ அருட்காட்சி

ஈலிங் அருள்மிகு கனகதுர்க்கை அம்மன் ஆலய வருடாந்த இரதோற்சவ அருட்காட்சி (தேர்) நிகழ்வுகள்.

நேரம்: காலை 10:00 மணி

இடம்: 5, Chapel Road,
West Ealing,
London, W13 9AE

**AUGUST 22 SATURDAY**

### அரசறிவியல் அற்றும் இராசரீக ஆய்வரங்கம்

தமிழின அழிப்பிற்கு நீதிதேடி பிரித்தானிய தமிழர் ஒருங்கிணைப்புக் குழு நடாத்தும் அரசியல் மற்றும் இராசரீக ஆய்வரங்கம்.

தொடர்புகளுக்கு : 074 0166 4266
020 371 9313

**AUGUST 28 FRIDAY**

### வருடாந்த மஹோற்சவ நிகழ்வுகள்

இலண்டன் அருள்மிகு சிவன் திருக்கோயில் வருடாந்த மஹோற்சவ நிகழ்வுகள். 28ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் மஹோற்சவம் 18.09.15 அன்று வைரவர் பொங்கல் விழாவுடன் நிறைவு பெறும்.

நேரம்: காலை 06:00 மணி முதல்

இடம்: 4A, Clarendon Rise,
Lewisham,
London, SE13 5ES

**AUGUST 31 MONDAY**

### Summer Sports Festival 2015

தமிழ் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் (ஐ.இ) நடாத்தும் மாபெரும் விளையாட்டு நிகழ்வுகள்.

நேரம்: காலை 09.00 மணி முதல்

இடம்: Raynes Park Sports Ground,
Tauton Avenue
SW20 0BHE



# வன்னியில் ஒரு காலத்தில் தன்னிறைவு கொண்டு விளங்கிய மூன்று கிராமங்களின் கதை




**மகாலிங்கம் பத்மநாபன்**

*பெரிய பரந்தன், குஞ்சுப்பரந்தன். செருக்கன் கிராமங்களின் பொற்காலமும் நீலனாறு, கொல்லனாறுகளால் சூழப்பட்டு பொறிக் கடவை அம்பாளின் அனுக்கிரகத்தால் வாழ்ந்த மக்களின் வரலாறும்.*

### அருவி வெட்டல், சூடடித்தல்

ஊர் மக்களால் மட்டும் இதனை தனித்து ஒப்பேற்ற முடியாது. ஊரில் இருந்து (மீசாலை, சாவகச்சேரி) உறவு முறையானவர்கள் வந்து மாதக்கணக்கில் தங்கி உதவி செய்வர். போகும் போது நெல்லை வண்டில்களிலேற்றி சுட்ட தீவு போன்ற இடங்களிற்கு கொண்டு சென்று வள்ளங்களில் கச்சாய் துறைமுகம் கொண்டு செல்வர்.

பூநகரி, நல்லூர் போன்ற ஊர்களில் வானம் பார்த்த பூமியை மட்டும் கொண்டுள்ள சிறு விவசாயிகள் அரிவி வெட்டு, சூடடி போன்ற காலத்தில் குஞ்சுப்பரந்தன், பெரியபரந்தன் கிராமங்களிற்கு வண்டில் கட்டி வருவார்கள். இங்கேயே தங்கி அரிவி வெட்டி, சூடடித்து முடிந்த பின்னர் கூலியையும் நெல்லாக வாங்கி வண்டில்களில் ஏற்றிச் செல்வர். அவர்கள் வந்து, வேலை முடித்துத் திரும்பிச் செல்லும் போது உறவினர்களைப் பிரிந்தது போன்ற துக்கம் ஏற்படும்.

பெரிய பரந்தன், குஞ்சுப்பரந்தன் கிராமங்களில் ஆதியில் எருமைமாடுகள் கட்டியே போரடித்தனர். நடுவில் களமரம் நடப்பட்டுச் சூழவும் பாய் அல்லது படங்குகள் விரிக்கப்படும். சூடடிக்கவென ஒவ்வொருவர் காணியிலும் விசேட களங்கள் மேட்டு நிலங்களாகக் காணப்பட்டன. நடுவில் நடப்பட்ட களமரத்தைச் சுற்றி நெல் கட்டுக்களைப் பரவுவார்கள். பின் அனுபவசாலியான பெண் எருமையை முதலாவதாகவும் ஏனைய ஆண் எருமைகளை வரிசையாகவும் பிணைப்பர். எருமைகள் காலத்தைச் சுற்றி வரும். சூடடியில் மட்டும் பெண் எருமையொன்றை ஏனைய எருமைகளை வழி நடத்தும் பொருட்டு பயன்படுத்துவார்கள். சுற்றி வரும் மாடுகள் அடிக்கடி சாணம் போடும். நாங்கள் சிறுவர்கள் வைக்கலில் சாணம் விழா வண்ணம் மிகவும் பவித்திரமாகக் கடகத்தில் ஏந்திக் கொள்வோம்.

ஒவ்வொரு களத்திலும் சூடடிக்க முன்னர் களப் பொங்கல் பொங்கப்படும். நாங்களும், சிறுவர்களும், சூடடிகாரரும் அப் பொங்கலில் பசியாறிக் கொள்வோம். பின் இரவு முழுவதும் கோப்பி, தேநீர், சோற்றுக் குழையல் என்று வயிற்றுக்கு வஞ்சனையின்றி உணவு கிடைக்கும். களைத்து போன எருமைகளுக்கு மாற்று எருமைகள் மாறி மாறிக் கட்டப்படும். சூடடிப் போர் இராகமாகப் பாடுவர். தாம் அனுபவப்பட்ட பேய், பிசாசு கதைகளைக் கூறிச் சிறுவர்களை நடுங்க வைப்பர். நொடிகள் போட்டு அவிழ்ப்பதன் மூலம் நித்திரையை விரட்டுவர். சூடடி என்றபோது இப்போ நினைக்கும் தோறும் ஓர் இனிய அனுபவமாகும்.

### நெல்லைச் சேமித்தல்

மூன்று வகையான முறையில் நெல்லைச் சேகரித்து வைப்பர். நெல் சேகரித்து வைப்பதற்கு தனி வீடு அமைக்கப்பட்டிருக்கும். கோற்காலி என்று நான்கு கால்களாலான ஒரு கட்டில் போன்ற அமைப்பு. அதன் மேல் பலகையை அடுக்கி விடுவர்.

1. பாயால் பெரிய கூடை போன்று பின்னி வைத்திருப்பர்.
2. ஈச்சம் தடியால் பெரிய கூடையும், மூடியும் பின்னி சாணம் கலந்த களிமண் பூசி ஓட்டைகளையடைத்து வைத்துப்பர்.
3. படங்கினால் பெரிய சாக்குப் போல ஒன்றைத் தைத்து வைத்திருப்பர்.

இந்த மூவகைக் கூடைகளையும் கோற்காலியின் கீழ்ப்புறம் சுத்தமாக வைக்கப்படும். எலி, அகிழானின் அசுமாத்தம் கண்டால் அவை தேடி அழிக்கப்படும். இவற்றிலே உணவைத் தேடும் அணில், எலி, அகிழானைத் தேடி அழையா விருந்தாளிகளாக நாகமும், சாரையும் தேடி வரும். ஊர் நாய்கள் நான்கு, ஐந்து ஒவ்வொரு கமக்காரருக்கும் உற்ற துணையாகும். அவற்றிற்கென ஒவ்வொரு வீட்டிலும் தனி உலை, பாம்பின் நடமாட்டம் கண்டு நாய்கள் கொதித்து எழுந்து விடும். நாகங்களிடம் கடி படாவண்ணம் அவற்றை விரட்டுவதில் ஊர் நாய்கள் திறன் வாய்ந்தவை.

பெரிய பரந்தன், குஞ்சுப்பரந்தன், செருக்கன் மக்கள் பெரும்பாலும் மீசாலை, கச்சாய், சாவகச்சேரி போன்ற ஊர்களிலிருந்து கடல்வழியாகச் சுட்ட தீவு ஊடாக வந்து குடியேறியவர்களின் வழித்தோன்றல்களாகும். போக்குவரத்திற்கு வள்ளங்களையும், எருதுகளால் இழுக்கப்பட்ட வண்டில்களையும் பிரதானமாகப் பாவித்தனர். ஒரு பகுதியினர் நெற்செய்கை, பசுவளர்ப்பு, ஆடு வளர்ப்பிற்கும் இன்னொரு பிரிவினர் மீன்பிடி, கருவாடு போடுதல் போன்ற தொழில்களை நாடியும் இவ்வூர்களுக்கு வந்தனர்.

இம் மக்கள் குடியேறத் தொடங்க முன்னர் இந்தியாவின் கேரளாவிலிருந்து வந்த பணிக்கர்கள் எனும் மலையாள மொழி பேசுவோர் இங்கு தங்கி யானைகளைப் பிடித்து இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்தனர். அவர்கள் தமது நாட்டிலுள்ள கண்ணகை அம்மனை இங்கு தருவித்து அம்மனை வணங்கிய பின்னர் யானைகளுக்குப் பொறி வைத்துப் பிடித்தனர். அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட அம்மனே பொறிக் கடவை அம்மன் என இன்று வரை போற்றப்படும் அம்மன் ஆகும். நேர்த்தியின் பின் அவர்கள் வைத்த பொறியில் பவளக் கொம்பன், முத்துக் கொம்பன் யானைகள் வந்து விழுந்தன.

ஓரிரு பணிக்கர்கள் கிளிநொச்சிப் பெண்களை மணந்து இங்கே தங்கிவிட ஏனையவர்கள் இந்தியா திரும்பி விட்டனர். பணிக்கர்களின் பின்னர் கச்சாய்ப் பகுதியிலிருந்து வந்த முக்குவ மக்கள் அம்மனை ஆதரிக்கத் தொடங்கினர்.

பின்னர் குஞ்சுப்பரந்தன் உடையார் குடும்பத்தினரிடம் ஆலய நிர்வாகம் சென்றது. நீண்ட காலம் இவர்களின் நிர்வாகத்திலேயே இயங்கிய கோவில் பின்னர் குஞ்சுப்பரந்தன், பெரிய பரந்தன், செருக்கன் மக்களால் தெரிவு செய்யப்படுகின்ற அறங்காவல் சபையினரின் நிர்வாகத்தின் கீழ் வந்துள்ளது.

உருத்திரபுரம் குடியேற்றத் திட்டம் ஏற்படு முன் 8ம் வாய்க்கால், 10ம் வாய்க்கால் நீரை பெரிய பரந்தன், குஞ்சுபரந்தன் மக்களே அனுபவித்தனர். இதனால் இக் கிராமங்களில் முப்போகம் நெல் செய்கை பண்ணப்பட்டது.

டி8, டி10 உருத்திரபுரம் குடியேற்றத் திட்டங்கள் முழுமையாகச் செயற்படத் தொடங்கியதும் அந்த இரு வாய்க்கால்களினதும் ஏகபோக உரிமை இல்லாது போயிற்கு. 1964ம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தில் கடல் பெருக்கெடுத்து ஊருக்குள் நுழைந்தது. இதனால் நூறு ஆண்டுகளுக்கு மேல் செய்கை பண்ணப்பட்ட பொன் கொழிக்கும் பூமி உவர் நிலமாக மாறியது.

நீலனாறு, கொல்லனாரு போன்றவற்றை தூய்மைப்படுத்தி ஆழப்படுத்துவதன் மூலம் இந்த உவர் தன்மையை இல்லாது போக்கலாம் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். நீர் தட்டுப்பாட்டுடன் எருமைகளின் தேவை குன்றியது. அகப்பட்ட விலைக்கு விவசாயிகள் எருமைகளை விற்றனர். ஓரிருவர் தமது எருமைகளைக் காப்பாற்ற ஸ்கந்தபுரம், கோணாவில், முறிப்பு, அக்கராயன் குளம், வன்னேரி என இடம் பெயர்ந்தனர். உழவு இயந்திரங்களின் வரவுடன் எருமைகளின் தேவை முற்றாக இல்லாது போயிற்று. விவசாயிகளிடையே காணப்பட்ட அன்பு, பாசம், நட்பு, விட்டுக் கொடுத்தல், கூட்டுறவுப் பண்பாடு யாவும் அற்றுப் போயின. ஓர் இயந்திரத்தனமாக வாழ்வுஆரம்பமாகியது.

எனினும் பொறிக்கடவை அம்மன் மட்டும் இம்மக்களை இணைக்கும் பாலமாகத் திகழ்ந்தார். இக்கிராம மக்கள் தீபாவளி, புதுவருடத்தை விட அம்மனின் பங்குனி வேள்வியையே பிரதானமாகக் கொண்டாடுவர். புத்தாடை அணிந்து காவடி, பாற்செம்பு எடுத்து மிகக் குதூகலமாகக் கொண்டாடுவர். உலகின் எந்த மூலையில் இருந்தாலும் பங்குனி வேள்விக்கு ஊருக்கு வந்து விடுவர்.

### கல்வி

பெரிய பரந்தன் மக்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட காணியில் கிளி/பரந்தன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை 1925ம் ஆண்டு அமைக்கப்பட்டு உருத்திரபுரம், குஞ்சுப் பரந்தன், செருக்கன், நீவில், 05ம் வாய்க்கால், பெரிய பரந்தன் காடு, பரந்தன் சந்தி முதலிய இடங்களிலிருந்து வந்த மாணவர்களுக்குச் சிறந்த கல்வியை வழங்கியது. 1954ம் ஆண்டு கிளி/பரந்தன் இந்து மகா வித்தியாலயம் ஆரம்பிக்கப்படும் வரை இப் பாடசாலையே இப் பகுதிக் கல்விக்குப் பொறுப்பாக இருந்தது.

### பெரும் புலப்பெயர்வு

கனகாம்பிகைக் குளம் என்னும் இடத்தில் அரை ஏக்கர் காணியை அரசாங்கம் வழங்கும் போது பெரிய பரந்தன் கமக்காரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டதால் பெரிய பரந்தன் மக்கள் பெருமளவில் கனகாம்பிகைக் குளத்தில் குடியேறினர். இப்போது குஞ்சுப்பரந்தன், பெரிய பரந்தனில் குறைந்த எண்ணிக்கையானவர்களே வாழ்கின்றனர். குஞ்சுப்பரந்தன் மக்களில் பலர் மீண்டும் மீசாலை, சாவகச்சேரி போன்ற இடங்களில் மீளக் குடியேறிவிட்டனர். இவர்களும் நீவில் கமக்காரர்களும் கலபோகச் செய்கைக்கு மட்டுமே வந்து போகின்றனர். செருக்கன் மக்கள் மீட்சியின்றி கவனிப்பாரற்று செருக்கன் பிள்ளையாரை மட்டும் நம்பி வாழ்ந்து வருகின்றனர். அரசினர் இவர்கள் மீது கரிசனை காட்டுவது அவசியம். பெரிய பரந்தனில் தற்போது வசிக்கும் மக்களில் மூன்று குடும்பத்தவரை தவிர ஏனையவர்கள் வீட்டுத் திட்டங்கள் பெற்று, சுயமுயற்சியாலும் அரசின் ஆதரவாலும் வீடு கட்டி வாழ்கின்றனர். கிளி/பரந்தன் அ.த.க பாடசாலையும் புதிய கட்டிடங்களுடன் சிறப்பாக இயங்குகின்றது. காஞ்சிபுரம் என்னும் கிராமம் பெரிய பரந்தன் கிராமத்திற்கு மிக அருகே உள்ளது. நீலனாறு இரு கிராமங்களையும் பிரிக்கின்றது. நீலன் ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் அமைக்கப்படும் ஆயின் காஞ்சிபுரம் மாணவர்கள் நூறு பேர் வரை கிளி/பரந்தன் அ.த.க பாடசாலைக்கு வந்து தமது கல்வித் தேவையைப் பூர்த்தி செய்யலாம். எண்பத்தைந்து குடும்பங்களுக்கு மேலே வாழும் காஞ்சிபுரம் கிராமத்திற்கு என ஒரு பாடசாலை இல்லை. சுமார் ஐந்து கிலோமீற்றர் நடந்து சென்று கிளி/பரந்தன் இந்து மகா வித்தியாலயத்திலேயே கல்வி கற்கின்றனர்.

*தொடரும்*

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....

seven | zero
graphic designers
020 7043 4310
G11, LOMBARD HOUSE | 2, PURLEY WAY | CROYDON | CR0 3JP



creative artwork from concept to design

# பொதுத் தேர்தலில் வடக்கும் கிழக்கும்

பாகம் 177

ஒருவாறு இலங்கையின் 2015 பொதுத்தேர்தல் வந்திருக்கிறது. அரசியற் கட்சிகளெல்லாம் வரிந்து கட்டிக்கொண்டு தேர்தற் களத்தில் குதித்துவிட்டன. வழமை போல தமிழர் தங்களது ஒற்றுமையின்மையைக் காட்டும் பலப்பரீட்சையில் இறங்கியிருக்கிறார்கள்.

எனக்குத் தெரிந்த வரை தமிழ் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் தேசிய மக்கள் முன்னணி, ஜனநாயக போராளிகள் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழமக்கள் ஜனநாயக முன்னணி என்ற தமிழ் தேசியவாதத்தை முன்னெடுக்கும் பல கட்சிகளுடன் சிங்களப் பெரும்பான்மைக் கட்சிகளான ஐக்கிய தேசியக்கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு போன்றனவும் சில சுயேட்சைக் குழுக்களும், தமிழர்களின் வாக்குகளைத் தங்களால் முடிந்தவரை பிரித்துச் சிதைத்து ஓர் பலமிழந்த தரப்பாக தமிழர் தரப்பை உருவாக்கி வைத்திருப்பதற்கான கைங்கரியத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. இதைவிட, முஸ்லீம் தரப்பினரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் போன்ற கட்சிகளையுருவாக்கி அவர்களும் பொதுவான கட்சியினரேயெனக் காட்டி தமிழ் மக்களின் வாக்கு களை அபகரிக்கும் உள்நோக்கத்தோடு செயற்படுகின்றனர்.

இங்கே பிரச்சனையென்னவென்றால் தமிழ் தேசியத்திற்காகப் பாடுபடவோ அல்லது தமிழருக்கானவோர் தாயகத்தை நிறுவவோ வரிந்து கட்டிக்கொண்டு வெளிப்பட்டிருக்கும் தமிழர் தரப்புக் கட்சிகள் அத்தனையும் பாராளுமன்றக் கதிரைகளைப் பிடிக்க முயல்கின்றனரா அல்லது தேசியத்தை வென்றெடுக்க முயற்சிக்கின்றனரா என்ற குழப்ப நிலைக்குள் மக்களை ஆழ்த்தி வைத்திருப்பதுதான். ஜனநாயகத்தில் பல்வேறு வகைப்பட்ட சமூக, பொருளாதார அரசியல் சார்ந்த கொள்கைகளை வைத்துக் கொண்டு பல கட்சிகளையுருவாக்கி மக்கள் செல்வாக்கின் மூலம் ஆட்சியைப் பிடிக்க முயல்வது அரசியலில் சர்வசாதாரணமான விடயமே. ஆனால் தமிழீழத் தாயகத்திற்கான சுயாட்சி அல்லது சுயநிர்ணய உரிமை எனப்படும் ஒரேயொரு கொள்கையை வைத்துக்கொண்டு, உலகில் ஒப்பீட்டளவில் மிகச்சிறியவோர் பாரம்பரியப் பிரதேசத்தினுள், இத்தனை கட்சிகள் மிகச் சிறியவோர் மக்கள் கூட்டத்தின் பெறுமதிமிக்க வாக்குகளைப் பங்குபோட்டு, ஈழத்தமிழர்களின் ஜனநாயக பலத்தைச் செல்லாக்காசாக்க முற்படுவதை எந்த வகையில் அடக்குவது என்று தெரியவில்லை.

நாம் அடிக்கடி சொல்லும் பழமொழியான ‘கூரையேறிக் கோழிபிடிக்க முடியாதவன் வானமேறி வைகுண்டம் போக முற்பட்டானாம்’ என்பதுபோல, தமக்குள்ளே ஒற்றுமைப்பட்டு, ‘தமிழர் தாயகத்திற்கான சுயநிர்ணயவுரிமையைப் பெறுதல்’ என்னும் ஒத்த கொள்கைக்குள் அமைந்தவோர் பொது வேலைத் திட்டத்தின்கீழ, ஒரு பலமான ஜனநாயகக் கட்டமைப்பையுருவாக்கிப் போராட முடியாதவர்களை நம்பி எமது வாக்காளர்கள் தமது பொன்னான வாக்குகளைச் சிதறடிக்கப் போகிறார்களேயென்று கவலைப்பட வேண்டியிருக்கிறது. இங்கே உண்மையில் நடக்கப்போவது கதிரைகளுக்கான போட்டிதானேயன்றிக் கட்சிக் கொள்கைகளுக்கான போட்டி போலத் தென்படவில்லை.

ஆலம் பழம் போன்று அழகாயிருக்கும் ஜனநாயகம் என்னும் மேற்தோலின்கீழ் தங்கள் சுய அபிவிருத்திக்காக எமது ஒற்றுமையையும் கட்டுக்கோப்பையும் தின்று கொண்டிருக்கும் புழுக்களாகத்தான் தமிழ் அரசியல் வாதிகளை நோக்க வேண்டியிருக்கிறது. இதற்கு யாரும் விதிவிலக்கில்லை. தமிழரின் பழமைவாய்ந்த கட்சியான தமிழரசுக்கட்சியின் வீட்டுச் சின்னத்தின்கீழ் போட்டியிடும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கும், எதிர்க்கடை போட்டுத் தேர்தலில் நிற்கும் மாற்றுக் கட்சிக் காரர்களை தம்மோடு சேர்த்து ஒற்றுமைப்படுத்தி ஓர் பொது அமைப்பை உருவாக்க முடியவில்லை. எல்லா அரசியல் ஜாம்பவான்களும் அனுபவஸ்தர்களும் தோற்றுப்போய் என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாறுகிறார்கள்.

## அலசுவாரம்

அலசுபவர் : **மட்டைக்கிளப்பான்**

வடக்கில் பலகட்சிகள் போட்டியிடுவதால் பெரிய பாதிப்பு வரப்போவதில்லை. எப்படி வாக்குகள் பிரிந்தாலும் கிடைக்கப் போகின்ற தமிழர் பிரதிநிதிகளின் தொகையில் மாற்றமேற்படாது. ஆனால் இக்கட்சிகள் கிழக்கில் வந்து ஆளுக்காள் பிரிந்து நின்றுகொண்டு செயற்படுவது, கிழக்குத் தமிழர்களுக்குச் செய்யும் பெரிய துரோகமாகும். கிழக்கில் பல கட்சிகளால் தமிழர்களின் வாக்குகள் பிரிக்கப்படுவதால் அங்கு தமிழர்களின் பிரதிநிதித்துவம் வெகுவாகக் குறைக்கப்பட்டு மாற்றினத்தவர்களின் கையில் போய்விடும். இதை நன்கு தெரிந்திருந்தும் தம்முள் ஒற்றுமைப்பட்டுச் செயற்படாமல் தமிழர் தரப்புக் கட்சிகள் தேர்தலில் தனித்தனியாகக் குதித்திருப்பது நமது கண்ணில் நாமே மண்ணையள்ளிப் போடுவது மாதிரியே உள்ளது. இதனைச் சாணக்கியமான அரசியல் என்று ஏற்க முடியவில்லை.

அவ்வகையில் நோக்கும் போது வடபகுதியில் என்ன நடந்தாலும் அதைப் பொருட்படுத்தாது கிழக்கு வாழ் தமிழர்கள் மிகப்பெரும்பான்மைப் பலத்துடன் வரக்கூடியதாக தமது ஒரே கட்சிக்கே வாக்களித்து புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள வேண்டுமென்று அலசுவாரம் வாசகர்கள் சார்பில் வேண்டுவோம்.

சென்ற வாரம் உலகத் தமிழர்களுக்கு நேர்ந்த மிகப்பெரிய இழப்பு எமது மதிப்புமிக்க அணுவிஞ்ஞானி அப்துல் கலாம் மறைந்ததுதான். இந்தியாவின் அதியுயர் பதவியான ஜனாதிபதியாக இருந்த அன்னார் தனது எண்பத்தி மூன்றாம் அகவையில் காலமானார். தமிழீழ மக்களைப் பொறுத்தவரை அவரின் அவ்வுயர் பதவி பெரிய நன்மைகளெதையும் செய்து விடவில்லை. இந்திய ராஜதந்திரத்தின் கட்டுப்பாட்டிற்குள் தனது பணியை ஆற்றவேண்டியிருந்ததால் அவரால் எதையும் எமக்காகச் செய்ய முடியவில்லை. ஆனாலும் அவர் ஓர் தமிழர். தமிழ் தாய்க்கு அதுவோர் பேரிழப்பு. அவரது மறைவையொட்டி எழுதப்பட்ட இரங்கற் கவிதையை இங்கே தருகிறேன்:

அண்ணல் கலாம் மறைந்தார்

அவனி அழுகிறது.

காலா கலாமைக் கவர்ந்தது ஏன் எங்களுக்கம்

மேலாம் அறிஞனினி

வேண்டாமென்றெண்ணினையோ!

கண்ணிழந்த காலன் கலாமை
எடுத்து விட்டான்

அண்ணலை எங்கள் அரிய தமிழுறவை

எண்ணியிருந்து எண்பத்தி மூன்றகவை

காணப்பறித்த தறு
கண்ணாளன் தோற்கானா?

எத்தனை பேர் இன்னும் இப்புவியில்
தொண்ணூறை

தாண்டியும் வாழ்கின்றார்
தறி கெட்ட காலனுக்கேன்

இத்தனை வன்மம் எம் தமிழத்தாய்
பெற்றெடுத்த

சொத்தினை எங்கள் சோதியைப் போயேன்
பறித்தான்

அறிவியலே உந்தன் ஆற்றல் இதுதானா?

குறிவைத்து இந்தக் குவலயத்தில்
நல்லோரை

தட்டிப் பறிக்கும் தரம் பாராக் காலனை ஏன்

எட்டியுதைக்க இன்னும் வழிகாணாய்

ஐஸாக் நிž்ட்டனைப்போல் ஐன்ஸ்டீன்
அறிஞனைப்போல்

அறிவியலுக்காய் வாழ்ந்த அப்துல் கலாம்
எங்கள்

அன்னை தமிழின் அருமை மகனன்றோ!

ஏன் தமிழர் வாழ்வில்
இடிவிழுத்தப் பார்த்திருந்தாய்?

குரு ஆனை மேலாம் குறளை மனதிருத்தி

அருவாம் திருவருளை அன்புடனே நேசித்து

ஆக்கம் பல கண்ட அப்துல் கலாம் என்றும்

நீக்கமற நிறைந்தெம் நெஞ்சில் நிலை
நிற்பார்.

அன்னவரின் ஆன்மா
அண்டவனின் சன்னிதியில்

உன்னதமாம் சுவன ஒளியில் கலக்கட்டும்.

ஈஸ்வர அல்லாஹ் தேரே நாம்!

சப்கோ சன்மதி தே பகவான்!

தொடரும்..

# நாடாளுமன்ற...

(09ம் பக்கத் தொடர்ச்சி)

அழைப்பு விடுக்கப்பட்டு சம்பந்தர் ஐயா எடுக்கும் முயற்சிகளுக்கு ஆதரவு வழங்குங்கள் என்று கோரப்படு வார்கள். அவர்களும் மெதுவாக ‘யதாரத்தத்துக்கு’ கட்டுப்பட்டு விடுவார்கள். இத்தகைய விடயங்களைக் கவனத்திற் கொண்டே ஒரு தமிழ் வாக்களார் எந்தக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்க வேண்டும். ஆனால், தமிழ் மக்களிடம் ஒரு பிரதான கட்சியை அல்லது அமைப்பை. ஆதரிக்கும் அரசியற்பண்பாடு நீண்டகாலமாக இருந்து வருகிறது. சிறிலங்கா அரசை எதிர்கொள்ள பலமான அரசியல் அமைப்புத் தேவை என்ற தமிழ் மக்களின் அரசியற்புரிதலில் இருந்துதான் இந்தப்பண்பாடு வளர்ச்சியடைந்திருக்க வேண்டும். இந்த அரசியற்பண்பாடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே இத் தேர்தலிலும் சாதகமாக இருக்கிறது. மேலும் கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் குறையாது பாதுகாக்க வேண்டும் என்ற அக்கறையும் தமிழ் மக்களுக்கு உள்ளது. இதுவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே சாதகமாக உள்ளது. இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே இத் தேர்தலில் தமிழர் தாயகப் பகுதியல் கூடுதல் ஆசனங்களைப் பெறும். இத்தகையதொரு சூழலில் தமிழ் மக்களின் தேசிய உரிமைக்காக போராட்டம் நீர்த்துப் போகாமல் எவ்வாறு பாதுகாப்பது என்ற கேள்வி எழுகிறது. வாக்களித்து பிரதிநிதிகளைத் தெரிவு செய்தவுடன் மக்கள் அதிகாரம் அற்றவர்களாகப் போய்விடுகிறார்கள். இது பிரதிநிதித்துவ ஜனநாயக முறையின் குறைபாடுகளில் ஒன்றாக உள்ளது. மீண்டும் 5வருடம் கழித்து தேர்தலின் போதுதான் அதிகாரம் மக்கள் கைக்கு வரும். இதற்கிடையில் இவ் இடைப்பட்ட காலத்தில் தெரிவு செய்யப்பட்டவர்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த, அரசியல்வாதிகளுக்கு அழுத்தம் கொடுக்கக் கூடிய வலுவான சமூக இயக்கங்கள் இல்லாத நிலைமையும் தமிழ் மக்களிடையே இருக்கிறது. இதனால் தேர்தலின் பின் எழக்கூடிய நிலையை எதிர்கொள்ள வருமுன் காப்போனோக தமிழ் மக்களில் விழிப்புணர்வு உள்ள வாக்களர்கள் செயற்பட வேண்டும். அவர்கள் எவ்வாறு இப் பிரச்சினையைக் கையாள முடியும்?

இப் பிரச்சினையை இத் தேர்தலில் எதிர்கொள்ள விழிப்புணர்வுள்ள தமிழ் மக்களுக்கு ஒரு வழியுண்டு. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை விடக் கொள்கை நிலைப்பாட்டில் உறுதியாகவுள்ள ஒரு சிலரை நாடாளுமன்ற உறுப்பினர்காளகத் தெரிவு செய்வதுதான் அந்த வழி. கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி மட்டுமே தற்போதய நிலையில் இதற்குத் தகுதியாக உள்ளது. தமிழ் தேசிய மக்கள் முன்னணியில் இருந்து இத் தேர்தலில் பிரதிநிதிகள் தெரிவாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தடம் மாறிப் போகமால் இருப்பதற்கான அழுத்த சக்தியாக இருக்கும். தமிழர் உரிமை அரசியலையும் இது வலுப்படுத்தும். இங்கு நமது அக்கறையெல்லாம் தமிழர் உரிமை அரசியல் வலுப்பட வேண்டும் என்பதுதான். கூட்டமைப்பில் இரண்டு அல்லது மூன்று பிரதிநிதிகள் குறைவதனால் தமிழர் உரிமை அரசியல் வலு விழந்து போகாது. மாறாக தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கு இரண்டு அல்லது மூன்று பிரதிநிதிகள் கிடைப்பது தமிழ் மக்களின் உரிமை அரசியலை வலுப்படுத்த உதவும்.


ஒரு பேப்பர்
ORU PAPER

உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு £35 மட்டுமே!

SUBSCRIPTION FORM

Name:

Address :

Postcode:

Telephone:

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £35 க்கு "Oru Paper Ltd."" ன் பெயரில் காசோலையினையும், G11, Lombard House, PURLEY WAY, CROYDON, CR0 3JP என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

ENGINE TEC MOTORS



We offer Facilities For:

- Serving
- Clutches
- Brakes
- Overhauls
- Car Electricals
- Pre - MOT Checks
- All types of Repair & Body Work
- Insurance Work Undertaken




Ask for Vel or Rajan
Tel: 02086408000 / 02086401230
Mob:07860226476 / 07860770945
Unit 5, 339 London Road, Mitcham, Surrey CR4 4BE
e mail: vel@etmluk.com Web:www.etmluk.com

வெகுவிரைவில் தரணியெங்கும்...

தமிழ்

| வணக்கம் தமிழ் | ஞாபகம் வருதே | விம்பம் | உப்பு புளி காரம் |
| வெள்ளித் திரை | ஒளித்தடம் | மயக்கும் மாலைப் பொழுது | அரும்புகள் |
| நான் நீ ! | மருத்துவம் | நாம் யார் ? | நடந்து வந்த பாதை |
| வேங்கைகள் | பாட்டுக்குப் பாட்டு | யாதும் ஊரே | உண்மையின் வெளிச்சம் |
| தரிசனம் | நிகழ்வுகள் | இன்றைய பார்வை |
மற்றும் பல சுவையான நிகழ்ச்சிகள்...

**மேலதிக விபரங்களுக்கு**

Tel : 020 7043 4316

Web : www.tamil.com

Facebook.com/tamiltelevisionnetwork | @tamiltvnetwork

# வரலாறு எம்மை விடுதலை செய்யும்



**கோகிலவாணி**

*ஒகஸ்ட 2ம் திகதி வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரை மைதானத்தில் நடைபெற்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுக் கூட்டத்தில் யாழ் தேர்தல் மாவட்டதில் முன்னணியின் சார்பில் போட்டியிடும் செல்வி சின்னமணி கோகிலவாணி (சுகன்யா) ஆற்றிய உரையின் சுருக்கத்தை இங்கு தருகிறோம்.*

இன்னும் சில தினங்களில் எம் மக்கள் ஒரு பொதுத் தேர்தலை எதிர் கொள்ளப் போகின்றார்கள். 2009களில் இலங்கையின் வடபுலத்திலே ஒரு மிகக் குறுகிய நிலப் பரப்பிலே இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பின் பின்னர் எம் மக்கள் சந்திக்கின்ற இரண்டாவது பாராளுமன்றத் தேர்தல் இது. எங்கள் வீட்டு மதில்களில், எங்கள் கடை வீதிகளில், எங்களூர் மரங்களில் முகம் தெரியாத பல பிரமுகர்கள் கைகூப்பிப் புன்முறுவல் செய்யும் நேரம் இது. எங்களூர் குச்சொழுங்கைகளிலும் வாகனச் சக்கர அடையாளங்கள் பல காலணித் தடங்கள் தெரியும் காலம் இது. பதிப்பக இயந்திரங்கள் ஓய்வு கேட்டுக் கெஞ்சுகின்ற வேளை இது. மறந்து போன முகங்களை ஒருமுறை நேரடியாகவும் ஊடகங்கள் வாயிலாகவும் மக்களுக்கு மீளவும் நினைவுபடுத்தும் அவசரத்தில் எங்களது பழைய அரசியல்வாதிகள். ஏனென்றால் இது தேர்தல் காலம்.

30 ஆண்டுகளாக நடாத்தப்பட்ட போரில் நாங்கள் சந்தித்த பேரழிவுகளை, அதிலும் இலங்கை அரசால் இறுதிக் கட்டப்போரில் ‘மனிதாபிமான இராணுவ நடவடிக்கை’ என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட திட்டமிடப்பட்ட இன அழிப்பில் எம் மக்கள் எதிர் கொண்ட கொடூரங்கள் இந்தச் சந்ததி அழிந்து ஆயிரமாயிரம் ஆண்டுகள் கடந்தாலும் அழியாத வடுவாக எங்கள் வரலாற்றில் மீண்டும் மீண்டும் நினைவுபடுத்தப்பட்டுக் கொண்டே இருக்கும்.

போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர் கடந்துபோய்விட்ட 5 வருடங்களையும் இந்த இடத்தில் நாங்கள் ஒருமுறை நினைத்துப் பார்ப்போம். கையறு நிலையில் சொந்த மண்ணிலேயே ஏதிலிகளாக நாங்கள் நின்ற நிலையின் நினைவுகள் எந்த பிறவியிலும் எங்களை விட்டு அகலப் போவதில்லை. 2009 மே மாதத்தின் பின்னர் எங்கள் வாழ்வியலே முற்று முழுதாக மாறிப் போனது. நலன்புரி முகாம்களிலும் தடுப்பு முகாம்களிலும் சிறைச்சாலைகளிலும் எங்கள் நாட்கள் நகர்ந்தன. உலகையே திரும்பிப் பார்க்க வைத்த எங்கள் இனம் முட்கம்பி வேலிகளுக்குள் அடைக்கப்பட்டு முடக்கப்பட்டது. இந்த நிலையில் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட 7 மாதங்களில் ஜனாதிபதித் தேர்தலும் அதனைத் தொடர்ந்து 11 மாதங்களில் பொதுத் தேர்தலும் நடைபெற்றது.

பின்னடைவுக்குள் தள்ளப்பட்ட தமிழர் உரிமைப் போராட்டத்தை முன்னோக்கி நகர்த்திச் செல்வார்கள், எங்களது உரிமைகள் பற்றிப் பேசுவார்கள், எங்களது அரசியல் மற்றும் வாழ்வியல் பிரச்சனைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுத் தருவார்கள் என்று கருதப்பட்ட ஒரு தரப்பினருக்கு அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு, விடுதலைப் புலிகளால் ஒருங்கிணைக்கப்பட்ட ஒரே காரணத்திற்காக மக்கள் அவர்களுக்கு வாக்களித்து தங்கள் பிரதி நிதிகளாக பாராளுமன்றம் அனுப்பி வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து வந்த உள்ளூராட்சித் தேர்தல் மற்றும் எதுவுமே இல்லாத வெற்றுக் கூடுதான் மாகாண சபை என்று அறிந்தும் அந்தத் தேர்தலிலும் மக்கள் தமது வாக்குகளை அளித்து அவர்களை வெல்ல வைத்தார்கள். ஆனால் நடந்தது என்ன?

30 ஆண்டுகளுக்கு மேலாக எங்கள் மக்கள் எதற்காக இத்தனை விலை கொடுக்க நேர்ந்தது? பல்லாயிரக்கணக்கான மாவீரர்களின் ஈகம் எந்த நோக்கத்திற்காக மேற்கொள்ளப்பட்டது? இன்று எத்தனையோ ஆயிரக்கணக்கான போராளிகளது எதிர்காலம் கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளது எதற்காக? இவ்வளவு ஈகங்களையும் தியாகங்களையும் ஈந்து முன்னெடுக்கப்பட்ட இந்த இன விடுதலைப் போராட்டத்தின் ஜனநாயக வடிவம் தொடர வேண்டும் என்ற நோக்கத்தில் எங்களுடைய பிரதிநிதிகள் என்று நாம் யாரைக் கருதிப் பாராளுமன்றம் அனுப்பினோமோ அவர்கள் எங்கள் பிரதிநிதிகளாக அல்லாமல் அயலாதிக்க சக்திகளின் பிரதி நிதிகளாக மாறி நிற்பதை நீங்கள் அறிவீர்கள். இதனை வரலாறு ஒரு போதும் மன்னிக்காது. யுத்தம் முடிவடைந்து 6 வருடங்கள் கடந்த நிலையில் இன்றுவரை எமது மக்களது அரசியல் தீர்வுகள் தொடர்பிலோ அல்லது அவர்களது வாழ்வியல் சுதந்திரம் பற்றியோ எந்தவிதமான ஆக்கபூர்வமான விடயங்கள் எங்கள் மக்கள் பிரதி நிதிகளால் முன்னெடுக்கப்பட்டனவா என்றால் இல்லை என்பது உங்கள் அனைவருக்கும் தெரிந்தவிடயம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயா கூறுகிறார். 20 ஆசனங்களைப்பெற்று பாராளுமன்றத்தில் பேரம் பேசும் சக்தியினைப் பெற்றுக் கொள்ள ஆணை தருமாறு. 20 ஆசனங்களைப் பெற்று இவர் எதைப் பேரம் பேசப் போகின்றார்? அயலாதிக்க சக்திகளின் நலங்களிற்காக எங்கள் உரிமைகளைப் பேரம் பேசுவாரே தவிர எங்களது உரிமைகளுக்காக ஒரு போதும் அவர் பேரம் பேசப் போவதில்லை என்பது வெளிப்படை. இவர் எதிர்வரும் 2016 ஆண்டின் முடிவிற்குள் எமது பிரச்சனைகளிற்கு தீர்வு காணப்படும் என்று சம்பந்தன் ஐயா அவர்கள் கூறியிருப்பதாக பத்திரிகையில் ஒரு செய்தி வெளி வந்திருந்தது. தொடர்ந்து அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இரு பேரினவாதக் கட்சிக்களும் ஒற்றையாட்சிக்குள் தான் தீர்வு என்ற வெளிப்படையாகவும் துணிச்சலாகவும் அறிவித்திருக்கின்ற நிலையில் சம்பந்தன் ஐயா யாருடன் பேசி எங்களுக்குத் தீர்வை 2016க்குள் பெற்றுத் தரப்போகின்றார் என்பதை அவர் வெளிப்படுத்தவேண்டும். இதிலிருந்து ஒன்றை எம் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஏற்கனவே வழங்கிய ஐந்து வருடங்கள் வீணாக்கப் பட்ட நிலையில் இன்னும் ஒரு ஐந்து வருடங்களையும் கொடுத்து தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கால நீடிப்பு அரசியலுக்குத் துணை போக வேண்டுமா? அரசியல் தீர்வு தான் எட்டப்படவில்லை. மக்களது வாழ்வியலில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டதா? புலம் பெயர் உறவுகளின் எண்ணிக்கையற்ற நிதி பங்களிப்பு எந்தவிதமான திட்டமிடல்களுமின்றி, தூர நோக்கின்றி அவரவரது சுய லாப அரசியல் நோக்கங்கள் கருதி எப்போதும் பிறரிடம் கையேந்தி நிற்கும் சமூகத்தினை உருவாக்குவதில் தான் செலவிடப்படுகிறது. அந்த வகையில் ஐந்து வருடங்களையும் சுகமாக கடத்தி விட்டு தற்போது விதம் விதமான விளம்பரங்கள், உருவேற்றும் வாக்கியங்கள் மூலம் உங்களை நாள் தோறும் சந்தித்து வாக்குக் கேட்கிறார்கள்.

இறுதிப் போரில் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஜெனீவாவில் பிரேரணை ஒன்று 2012 ஆம் ஆண்டு முதன் முதலில் கொண்டுவரப்பட்டது. அந்தப்பிரேரணை குறித்து ‘சின்னக் கதிர்காமர்’ என்று ஊடகங்களால் அழைக்கப்படுகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர்களால் வெளியிடப்பட்ட கருத்தை இங்கு முன் வைப்பது மிக அவசியம் என நான் கருதுகின்றேன்.

“ஜெனீவாவிற்குச் செல்வதில்லை என்ற தீர்மானத்தை TNA எடுத்திருக்கின்றது. ஏனெனில் எங்களுக்கு அங்கு இடம் கிடையாது. நாங்கள் இலங்கையிலுள்ள ஒரு கட்சி மாத்திரமே. ஜெனீவாவில் என்ன நடக்கப் போகின்றதென்றால் அங்கு 47 நாடுகளின் பிரதி நிதிகள் வருவார்கள். அவர்கள் தீர்மானத்தை ஆதரித்தோ எதிர்த்தோ வாக்களிக்கலாம். நாங்கள் விரும்பினால் அவர்களுடன் பேசி ஒரு சார்பு நிலையினை எடுக்கலாம். ஆனால் நாங்கள் அதை விரும்பவில்லை. ஏனென்றால் நாங்கள் இலங்கையின் ஒரு பகுதி. ஆகவே சிறிலங்காவிற்கு எதிராக எந்தவிதமான செயற்பாடுகளையும் மேற்கொள்ள நாங்கள் விரும்பவில்லை. ஏனென்றால் சிறீ லங்கா எங்கள் நாடு”

எங்கள் அன்புக்குரிய மக்களே, முள்ளிவாய்க்கால் அவலத்தின் பின்னர் எங்களது புலம்பெயர் உறவுகளால் முன்னெடுக்கப்பட்ட இறுதிப் போரில் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் கொண்டுவரப்பட்ட இந்த விடயத்தைப் பலவீனப் படுத்தும் வகையில் தனது கருத்தை வெளியிட்டு எங்கள் இனத்தை விற்கும் இவர் எங்களது பிரதி நிதியா? இத்தகைய ஒரு பிரதிநிதி எங்களுக்குத் தேவையா? இவரை ஆதரித்து இவரது கூற்றினை நியாயப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனியும் எம்மக்களது காப்பாளர்கள் என்று நாங்கள் நினைக்கலாமா?

இது முடிவு செய்ய வேண்டிய நேரம். நாங்கள் ஒரு திருப்புமுனைக் காலகட்டத்தில் இருக்கின்றோம். தேசியத் தலைவர் அவர்களால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு என்பது பெயரில் மட்டும் தான் இருக்கின்றது. அங்கிருப்பவர்கள் தமிழரசுக் கட்சியாக, ஈ.பி.ஆர்.எல்.எஃப். ஆக, ரெலோவாக புளொட்டாகத் தான் இருக்கிறார்கள். ஆகவே அவர்களை நிராகரிக்க வேண்டியது காலத்தின் கட்டாயம்.

இங்கே இன்று உங்கள் முன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் வந்திருக்கும் நாங்கள் உங்களிடம் எதனையும் தேர்தல் கால வாக்குறுதிகளாக முன்வைக்கப் போவதில்லை. ஆனால் எங்கள் அனைவரதும் எதிர்பார்ப்புக்களை, இனவிடுதலைக்கான, அரசியல் சுதந்திரத்திற்கான கனவுகளை நனவாக்க அளப்பரிய தியாகங்களை, அர்ப்பணிப்புக்களை மேற்கொண்டு இன்று மீளாத் துயிலைக் கூட அமைதியுடன் அனுபவிக்க முடியாமல் தவிக்கும் அந்த மகாத்மாக்களின் சுய நல நோக்கமற்ற இலட்சியத்தைச் சாத்தியமாக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பினை எம்மக்களுடன் இணைந்து நாங்களும் சுமந்து நிற்கின்றோம் என்பதனை எங்கள் நாவினால் அல்ல ஆத்மாவிலிருந்து கூறிக் கொள்ள விழைகின்றோம்.

ஆகவே அதற்கான சகல வழி முறைகளையும் தேர்தல் உட்பட்ட சகல ஜன நாயக ரீதியிலான அமைதி வழிப் போராட்ட முன்னெடுப்புக்களில் உங்களுடன் கைகோர்த்துக் கொள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினராகிய நாங்கள் எப்பொழுதும் தயாராக இருப்போம் என்று உறுதி கூறுகின்றோம்.



# எங்கள் பனை வளமும் ஒடியல் கூழும்

அண்மையில் ஊர் சென்று வந்த நண்பர் தன் தாயக பயண அனுபவங்களைச் சொன்னார். கொடியேற்றம், தேர், தீர்த்தம், திருவிழா, வேள்வி, பங்கு இறைச்சி, கூவில்கள் என்றெல்லாம் சொல்லிக் கொண்டு வந்த அவரின் முகத்தில் திடீர் சுழிப்பு. என்ன என்றேன்.

என்ன இருந்தாலும் அந்த நாளைப்போல ஒரு வீட்டிலும் கூழைக் காண முடியவில்லை. பனையும் குறைந்து விட்டது. இவைகளும் எங்கோ போய்த் தொலைந்து விட்டன என்று அலுத்துக் கொண்டார். ஏன் இங்கு தானே பழைய மாணவர் சங்க ஒன்றுகூடல், விளையாட்டுப் போட்டிகள் எல்லாவற்றிலும் கூழைக் குடிக்கக் கூடியதாக இருக்கிறதே என்றேன்.

என்ன இருந்தாலும் எங்கள் ஊர் ஒடியல் கூழைப்போல, அந்த பனந்தோப்பின் மகிமையைப் போல பார்க்க முடியுமா? என்றார். உண்மை தான். அந்த நாள் நிகழ்வுகள் என்னையும் ஊர் ஒடியல் கூழ் பக்கம் இழுத்துச் சென்றது.

போர்க்காலத்தில் பல்லாயிரக் கணக்கில் அழியுண்டு போனதாகச் சொல்லப்படும் பனை நூற்றுக்கணக்கில் எங்கள் வீட்டுப் பின்வளவிலும் இருந்தது. பனை வளவு என்று தான் அதற்குப் பெயர். தென் மேற்கு மூலைப் புறமாக நளவளா என்று இன்னொரு வளவு. எங்கள் சிறு பிள்ளைக் காலத்தில் வடலிகளை மட்டும் தான் இந்த வளவு கொண்டிருந்தது.

இதேபோல பனை வளவைப் பராமரித்தாலே வருமானம் போதுமென்ற திருப்தி அந்த நாளில் எங்கள் பேரன், பூட்டனுக்கு இருந்தது. எங்கள் வளவின் முன்புறமும், ரோட்டுப் புறமும், எங்கள் வளவின் தென்னை ஓலைகளால் கிடுகால் அடைக்கப்பட்டிருக்க, மற்ற இருபுற வளவுகளையும் வேலியாக அலங்கரிப்பது பனை ஓலைகள் தான்.

ஆரம்பத்தில் வீட்டின் முன் இருந்த தலைவாசல் கூரைகளும் வேயப் பயன்பட்டது இந்தப் பனை வளவு ஓலைகள் தான். மீதி விற்றுக் காசாக்கப்பட்ட காலமும் உண்டு. இதை விட குறிப்பிட்ட சில பனைகள் கள்ளு சேகரிப்பதற்கு வழங்கப்பட்டிருக்கும். அதிலும் வருமானம். பனம்பழம் பழுத்தால் சனி, ஞாயிறு காலைகளில் கடகத்தைக் கொண்டு பனை வளவுக்கு அம்மம்மாவுடன் போவோம். எங்கள் நான்கு சகோதரர்களும் ஆளுக்கு இருபுறம் என்று ஒரு கடகத்தைப் பிடிக்க, ஆங்காங்கே விழுந்து கிடக்கும் பனம் பழங்களை பொறுக்கிக் குவிப்பது எங்கள் சின்ன வயது வேலை. இதனை விட தினமும் காவோலைகளை, பன்னாடைகளை பொறுக்கிக் குவிப்பது, பனைக்கு மூடியாக வரும் பனுவிலை காய்ந்தவுடன் சேகரித்துக் குவிப்பது, கங்கு மட்டைகளை வெட்டி ஓலைகளைத் தனியாக்கி அவற்றைத் தனியாக அடுக்குவது, கங்கு மட்டை விறகை ஒருபுறம் சேகரிப்பது என்று வேலைகள் தொடர்ச்சியாக இருக்கும்.

ஆண்டுக்கு ஆண்டு பனை ஓலைகள் பனை மரத்தால் மரம் ஏறிகள் வந்து வெட்டி வீழ்த்துவார்கள். ஒரு வெயிலில் காய விட்டு மறுநாள் காலை அவர்கள் ஓலை மிதிக்க வருவார்கள். பனைகளுக்கு இடையாக வளைந்து வளைந்து அந்த ஓலை மிதிப்பு நடக்க இருபுறமும் நின்று காய்ந்த ஓலைகளை அவர்களுக்கு நாங்கள் தான் எடுத்துக் கொடுப்போம். பனை மட்டைகள் அவற்றால் வெட்டப்பட்டு வேறாக்கப்பட்டு அதற்கென உள்ள பரணில் அடுக்கப்படும். காய்ந்ததும் அதனை வேலியாக வரிச்சு பிடிக்கப்பட்டு அழகாக வேலிகள் பாதுகாக்கப்படும். ஓலைக் குருத்து என்ற ஓலைச்சார் தலைவாசல் தாழ்வாரத்தில் விரித்துத் தொங்கவிடப்படும். மழை காலத்தில் அந்தக் காய்ந்த ஓலைச்சார்களை, காம்புச்சத்தகத்தால் கிழித்து ஓலையாக்கி அம்மம்மாவும், அவவையொத்த பக்கத்து வீட்டுப் பொம்பிளைகளும் சேர்ந்து பெட்டி, கடகம் என்றும் நீத்துப்பெட்டி என்றும் வீட்டு முன்புறத்திலிருந்து இழைப்பார்கள். அழகாக அடுக்குவார்கள். இடையிடையே துலா மரத்துக்கு அல்லது வேறு தேவைகளுக்கு என்று வெட்டிச் சரிக்கப்படும் பனையிலிருந்து தலைப் பாகத்தில் குருத்தை நசுக்கித் தருவார்கள். அந்தக் குருத்தின் ருசிக்கு ஒப்பீடே சொல்ல முடியாது. நுங்குப் பருவத்தில் குலை குலையாக நுங்கை வெட்டி வாயருகே வைத்து உறிஞ்சி விரலால் கோதி குடித்து மகிழ்வோம். அம்மம்மா பனம்பழத்தைச் சுட்டுத்தர உண்டு மகிழும் பனம்பழச் சுவையே தனி. பாயில் அவ்வவ்போது முற்றத்தில் காயும் பனாட்டு, பனம் மரத்தின் பனம் கிழங்கு அவித்து அவற்றை அம்மம்மா தர அல்லது அடுப்பில் வைத்து சுட்டுத்தர அவற்றை உண்டு மகிழ்கின்ற போது வருகின்ற இனிமையான சுவை எல்லாமே மனதைக் குளிர்விப்பவை தான்.

அவித்த பனங்கிழங்கை கிழித்து காய விட்டால் அது புழுக்கொடியல். அந்தப் பனங்கிழங்கை சீவிக்காய விட்டால் அவை கூட பாதுகாப்பாக நீண்ட காலத்திற்கு உண்ணப்பயன்படும். அவித்த பனங்கிழங்கை தும்பு நீக்கி உரலில் இட்டு சீரகம், புளி, உப்பு என்பன எல்லாம் போட்டு பனங்கிழங்குத் துவையலாக உரலில் உலக்கையால் இடித்து அம்மம்மா உருட்டித் தருவார். அவற்றை உண்டு சுவைப்பதே கொள்ளையில்லா மகிழ்ச்சியைத் தரும்.

## ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: **ப.வை. ஜெயபாலன்**

பனங்கிழங்கை வெறுமனே பச்சையாகக் கிழித்துக் காயவிட்டால் அது ஒடியல். இந்த ஒடியல் தான், மாவுக்கும் கூழுக்கும் பயன்படுகிறது. ஒடியல் மாவில் ஒரு கயர்ப்பு இருக்கும். அம்மம்மா ஒடியல் மாவை நனைய வைத்து வெள்ளைத் துணியால் பிழிந்து கயர்ப்பை எப்படியோ போக்கி விடுவார். அந்த ஒடியல் மாவில் பிட்டு அவித்துத் தருவார். பனங்கட்டியோடு உண்ண அந்தப் பிட்டு தேவாமிர்தமாகத்தான் இருக்கும்.

ஒடியல் கூழ் பானையின் நினைவு இன்றும் பசுமையாக இருக்கிறது. ஒரு பெரிய பானை, ஒரு அகலப் பெரிய மண் சட்டி என்பன கோடியில் கவிழ்த்து வைக்கப்பட்டிருக்கும். கோடையில் அடிக்கடி கூழ் காய்ச்சும் போது அதை அடுப்பில் அலங்கரிக்கும். கூழ் தயாராகும் போது பலாவிலை கோலி, தென்னோலைக் குச்சியால் குத்தி கூழ் குடிக்கும் பாத்திரத்தை நாங்களே தயாராக்கிக் கொண்டு குசினிக்குள் பலகையில் போய் குந்திக் காத்திருப்போம்.

முதல்நாள் மயிலிட்டிக் கடற்கரைக்கு அண்ணர் சைக்கிளில் போய் வாங்கி வந்த மீன், நண்டு, இறால் எல்லாம் வெட்டி, கழுவி, நோண்டி சுத்தமாகத் தயார்படுத்தப்படும். தயார்படுத்தப்பட்ட அவை கூழ்ப்பானையில் பச்சைத் தண்ணீரில் பயிற்றங்காய், பலாக்கொட்டை, தேங்காய்ச் சொட்டு என்பவற்றின் துண்டுகளோடு சேர்த்து பச்சைத் தண்ணியில் அவியும். ஊறவைத்த பளப்புளி தண்ணி, ஒடியல் மாவை வடித்து கலந்த தண்ணீர் என்பவை தனித்தனி தயாராக்கப்படும். மஞ்சள், உள்ளி, மிளகு, சீரகம், செத்தல் மிளகாய் என்பன உரலிலே இட்டு இடித்து பளப்புளிக் கரைசலுடன் கலந்து ஏற்கனவே பானையில் தயாராகிக் கொண்டிருக்கின்ற கொதித்த ஏனையவற்றுடன் சேர்த்து அளவாகக் கொட்டி கூழ் தயாராக்கப்படும்.

இந்த மீன் ஏற்கனவே அவிந்தவுடன் எடுத்து அவையுடம் கூட முள் நீக்கி குத்தி மசித்து கலவையாக்கப்பட்டு விடும். அளவாக கொதித்து தடித்து ஒடியல் மா மணத்தோடு அந்தக் கூழ் கொதித்து வர சட்டியால் இறக்கி அவை குசினிக்கு நடுவிலே அம்மம்மா வைப்பார்.

# கோர்த்து விடும் செய்திகள்

## ■ ஜெனிவாத் தீர்மானம் அம்போ

மஹிந்தர் அணி தோற்பது உறுதியாம். அதனால் ஜெனிவாத் தீர்மானங்கள் எல்லாம் கிடப்பில் போடப்படுவதும் உறுதியாகிவிட்டது. அவர் தனது தொகுதியில் வென்றாலும் அவரது அணி தோற்று அவருக்குத் தலைமை அமைச்சர் பதவி கிடைக்காவிடில் அவர் உறுதி மொழி எடுத்துப் பாராளமன்ற உறுப்பினர் ஆக மாட்டாராம். கிட்டனதாயின் வெட்டன மற. ஆனாலும் அவரது கவலை எல்லாம் எப்படி தனது குடும்பத்தினரை வழக்குகளில் இருந்து காப்பாற்றுவது என்பது தானாம்.

## ■ அயல்நாடு நல்லா இறைக்குதாம்

பன்னாட்டு விசாரணை முடிந்து விட்டது என்ற சுமந்திரனை வெல்ல வைக்கவும் பன்னாட்டு விசாரணை வேணுமெண்டு நிக்குற கஜேந்திர குமாரைத் தோற்கடிக்கவும் அயல் நாட்டு உளவுத் துறை நல்லா இறைக்குதாம். விசாரணை வந்தால் தங்கட குட்டும் அம்பலமாகிவிடும் எண்ட பயமாம். பழைய படி சேலை விற்பவர்களாகவும் ஐஸ்கிரீம் விற்பவர்களாகவும் உளவுத் துறை பல களவு வேலையள் செய்யினமாம் தேர்தலில் தமக்கு வேண்டியவர்களை வெல்ல வைக்கவும் வேண்டாதவர்களைத் தோற்கடிக்கவும். இதுக்கெண்டு ஒரு தனிப் பிரிவு அமைக்கப்பட்டிருக்காம். கூத்தமைப்பு 20 பெற்றால் அவர்கள் தானாம் பேரம் பேசுவினம்.

## ■ கூத்தமைப்புக்குள் பெரும் கூத்து

வடமாகணக் கப்பல் துறை அமைச்சைப் பெரிசு எடுத்துக் கொள்ளுமாம். மற்ற ஒரு அமைச்சு அது வடமாகாண காவற்துறைக்குப் பொறுப்பான அமைச்சு அல்லது மாகாணசபை அமைச்சு என ஒரு அதிகாரமில்லாத அமைச்சுப் பொறுப்பு ஆருக்குக் குடுக்கிறது என்றுதான் பெரிய அடிபிடியாம் கூத்தமைப்புக்குள். மாவை அரைப்பவர் தான் சீனியர் எண்டு நிற்கிறாராம். மற்றவர் உனக்கு ஒழுங்கா இங்கிலீசு பேசத் தெரியாது நல்லா இங்கிலீசு பேசுற எனக்குத்தான் வேண்டும் என நிற்கிறாராம்.

## ■ அந்த ஒரு சொல்லில் உயிர்வாழ்வேன்

வன்னியில கடும் போட்டி நடக்குதாம். குங்குமப் பொட்டுக்காரர் ஒரு சொல் சொன்னாப் போதும் ஆக்கள் மாறிவிடுவினம் எண்டு பலர் நினைக்கினமாம். அவர் நடு நிலை என்று சொல்வதே அவையள்ள உள்ள மதிப்பைக் குறைச்சுப் போட்டுதாம். அவர் ஓர் ஆதரவு கொடுக்க வேண்டும் எனப் பல வழியிலயும் முயற்சித்துப் பார்த்துச் சரிவரவில்லையாம்.

## ■ என்ன அந்த இரு தேசம் ஒரு நாடு

இரண்டு தேசம் ஒரு நாடு என்பது பலருக்கு சிதம்பர சக்கரமாயிருக்காம். அதை விளங்கிக் கொள்வதற்குள் தேர்தல் முடிந்துவிடும். அதுக்குள்ள ஒருத்தர் ரெம்பக் 'குஷி'யா நிண்டு எல்லாரையும் குழப்புகின்றாராம். அவற்றை மகனுக்குத் தான் வோட்டுப் போடுவன் என மருதனா மடம் சந்தையில சனத்தைச் சொல்ல வைச்சு வீடியோ எடுத்தி ஆக்களக் குஷிப்படுத்துகின்றாராம். அவரை இதுக்கெண்டு கூலி கொடுத்து அனுப்பியிருக்கினமாம்.

- *ஊருளவாளி*




எமது சேவைகள்: களஞ்சியம் - காப்புறுதி - திறந்த வெளி இட வசதி - பொறுப்பேற்றல் மற்றும் விநியோகம்

தனிநபர் கவனிப்பு - இடமாற்றம் - அதிகப்படியான பொதி



- இலவச பெட்டிகள்
- தொழில்முறை ஆலோசனை
- பொறுப்பேற்றல் - விநியோகித்தல்

கப்பல் மூலம் வாகனம் அனுப்புதல்

- பணியக உதவிகள்
- கடன் கடிதங்கள்
- சுமை அகற்றல் - ஏற்றல்




வீட்டுக்கு வீடு சேவை

இலங்கையிலுள்ள உடன்பாட்டாளர் பெறுபவர் வீட்டிற்கே விநியோகம் செய்வோம்

இயந்திரங்கள் - உபகரணங்கள் - உதிரிப்பாகங்கள்



- விசேட விலைகள்
- தகர்த்தல் மற்றும் தயாரித்தல்

வாணிப சரக்கு நிலையம்

- சுங்க ஏற்றுமதி
- ஆவணங்கள் - செயலாக்கம்
- இறுதி வரை கையாளுதல்

Office: 46, Mead Court, Buck Lane, Kingsbury, London, NW9 0XN Tel: 020 3371 1272 Mob: 07913842265
Warehouse & Yard, Unit1 & 2, Renwick Industrial Estate, Renwick Road, Barking, IG110SD. Tel: 020 3371 1272

# நுளம்பிற்கு மருந்தடிக்கத் தயாராகின்றதா ஐ.நா ?



**கலாநிதி சேரமான்**

உலக சமூகத்தின் மீது தமிழ் மக்கள் நம்பிக்கை கொள்வதும், பின்னர் ஏமாற்றப்படுவதும் காலம் காலமாக நிகழும் ஒன்று. அதிலும் உலக சமாதானத்தின் காவலன் என்று போற்றப்படும் ஐ.நா. மன்றம் தமிழ் மக்களின் காலை வாரி விடுவது என்பது இன்று நேற்று நடக்கும் ஒன்றல்ல. அமைதி காக்கும் போர்வையில் போர் ஆயுதங்களுடன் தமிழீழ மண்ணில் இந்தியப் படைகள் களமிறங்கிப் பெரும் அட்டூழியங்களைப் புரிந்த பொழுதும், சூரியக்கதிரின் பெயரில் யாழ் குடாநாடு மீது பெரும் படையெடுப்பை சிங்களப் படைகள் தொடங்கி ஒரே இரவில் வலிகாமம் மண்ணில் இருந்து ஐந்து இலட்சம் தமிழர்களை இடம்பெயர வைத்த பொழுதும், அதன் பின்னர் வன்னி கிழக்கில் நான்கரை இலட்சம் தமிழர்களை முற்றுகைக்குள் வைத்து சிங்களம் நரபலிவேட்டையாடி இருபத்தோராம் நூற்றாண்டின் மிகப் பெரும் இன வழிப்பை அரங்கேற்றிய பொழுதும் உதவிக்கு வந்து கைகொடுக்கும் என்று தமிழர்கள் எதிர்பார்த்த ஐ.நா. மன்றம், அன்று கண்மூடி, வாய்புதைத்து மௌனம் சாதித்தது.

நியூயோர்க்கில் இருந்து கொழும்புக்குப் பறந்து சென்று போர்நிறுத்தத்திற்கான ஏற்பாடுகளை ஐ.நா. மன்றத்தின் செயலாளர் நாயகம் பான் கீ-மூன் அவர்கள் செய்வார் என்று தமிழர்கள் காத்திருக்க, அவரோ அதனையிட்டு அலட்டிக் கொள்ளாது தென்கொரியாவில் ஏற்பாடாகியிருந்த தனது புதல்வனின் திருமண வைபவ ஒழுங்கமைப்பில் மூழ்கியிருந்தார். இரண்டாம் உலக மகா யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த 1942ஆம் ஆண்டு சனவரி மாதம் 1ஆம் நாளன்று ஐக்கிய நாடுகள் மன்றத்தை நிறுவுவதற்கான பிரகடனத்தை அமெரிக்கா தலைமையிலான இருபத்தாறு நேச நாடுகள் மேற்கொண்டன. அச்சந்தர்ப்பத்தில் ஐக்கிய நாடுகள் என்ற பெயரை அன்றைய அமெரிக்க அதிபர் பிராங்க்லின் ரூஸ்செவெல்ற் அவர்களே முன்மொழிந்தார்.

இவ்வாறு அமெரிக்கா என்ற உலக வல்லரசின் மூளையத்தில் உதித்த ஐக்கிய நாடுகள் என்ற எண்ணக்கரு, மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் 26.06.1945 அன்று அமெரிக்காவில் ஐம்பது நாடுகள் மேற்கொண்ட ஐக்கிய நாடுகள் சாசனத்திற்கான பிரகடனத்தைத் தொடர்ந்து 24.10.1945 அன்று ஐக்கிய நாடுகள் மன்றம் என்ற அமைப்பு தோற்றம் பெறுவதில் முடிந்தது. மனித குலத்திற்கு பெரும் துயரை ஏற்படுத்தும் யுத்தத்தை இல்லாதொழிப்பதும், மனித உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதும், நீதியான உலக ஒழுங்கைப் பேணுவதும், சமூக மாற்றத்தையும், மேம்பாடான வாழ்நிலையை ஊக்குவிப்பதும் ஐ.நா. மன்றத்தின் அடிப்படை இலட்சியங்களாக பிரகடனம் செய்யப்பட்டிருந்தாலும், இற்றைவரை இவற்றையயல்லாம் ஐ.நா. மன்றம் காற்றில் பறக்கவிட்டே வந்துள்ளது.

ஐ.நா. மன்றம் என்பது ஒரு பொதுச் சந்தை போன்றது. அங்கு யாரும் செல்லலாம். எவரும் எதனையும் பேசலாம். ஆனால் அரசுகள் என்ற வியாபாரிகள் மட்டுமே அங்கு அதிகாரம் பொருந்தியவர்களாக இருப்பார்கள். அதிலும் சக்தி வாய்ந்த அரசுகள் என்ற தொழிலதிபர்களே சந்தையின் அன்றாட நடப்புக்கள் பற்றிய இறுதித் தீர்மானங்களை எடுப்பார்கள். மக்களின் நலனுக்காக ஐ.நா. மன்றம் என்ற பொதுச் சந்தை உருவாக்கப்பட்டதாகக் கூறிக் கொள்ளப்பட்டாலும், அங்கு மக்களின் நிலை என்பது வெள்ளாட்டு மந்தைகளின் பரிதாப நிலைக்கு ஒப்பான ஒன்று. வெள்ளாடுகளுக்காக பசுத்தோல் அணிந்த ஓநாய்கள் அழுவதுண்டு. ஓநாய்களின் நீலிக் கண்ணீரைக் கண்டு ஆடுகளும் உருகிப் போவதுண்டு. இறுதியில் ஓநாய்களின் பசுத்தோல் கழன்று விழும் பொழுது தான் வெள்ளாடுகள் சுதாகரித்துக் கொள்ளும். அதற்குள் காலம் கடந்து விடும். இவ்வாறு பசுத்தோல் அணிந்த ஓநாய்கள் அழுவதும், அவற்றைக் கண்டு வெள்ளாடுகள் உருகுவதும் காலம் காலமாக நடைபெறும் நிகழ்வுகள்.

இதுதான் இன்று தமிழ் மக்களுக்கும் நடக்கின்றது. காலம் காலமாகத் தமிழ் மக்களின் காலைவாரிய ஐ.நா. மன்றம், மீண்டும் ஒரு தடவை தமிழ் மக்களின் காலை வாருவதற்கு தயாராகி வருவதாகப் பிரித்தானியாவில் இருந்து ஒளிபரப்பாகும் சனல் 4 தொலைக்காட்சி தகவல் வெளியிட்டுள்ளது. கடந்த ஒன்றரை ஆண்டுகளாக ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையாளரின் செயலகம் மேற்கொண்ட விசாரணைகளின் பெறுபேறாக சிங்கள ஆளும் வர்க்கம் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தில் முன்னிறுத்தப்படும் அல்லது சிங்கள ஆளும் வர்க்கத்தைக் கூண்டில் ஏற்றுவதற்காக சிறப்பு நடுவர் மன்றம் ஒன்றை ஐ.நா. மன்றம் உருவாக்கும் என்று தமிழ் மக்கள் இலவு காத்த கிளிகளாகக் காத்திருக்க, உள்ளகப் பொறிமுறையை சிங்கள ஆளும் வர்க்கம் நிறுவுவதற்கு ஐ.நா. மன்றம் உதவிபுரியத் திட்டமிட்டுள்ளது என்ற தகவலை தற்பொழுது சனல்-4 தொலைக்காட்சி வெளியிட்டிருக்கின்றது.

“உள்நாட்டு விசாரணை முடிந்து விட்டது. இனி நடக்கப் போவது விசாரணையின் பெறுபேறுகளை உள்நாட்டில் அமுல்படுத்தும் வேலைதான். அதற்காகத்தான் உள்ளகப் பொறிமுறை நிறுவப்பட இருக்கின்றது” என்று கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பட்டத்து இளவரசர் மதியாபரணம் ஏபிரகாம் சுமந்திரன் தெரிவித்திருந்தார். இதனை உறுதிப்படுத்தும் வகையிலேயே சனல் 4 தொலைக்காட்சியின் செய்தி அமைந்திருக்கின்றது. இங்கு ஒரு விடயம் பட்டவர்த்தனமாகின்றது. உள்ளகப் பொறிமுறையை உருவாக்குவதற்கு சிங்கள அரசுடன் இணைந்து ஐ.நா மன்றம் மேற்கொண்ட இரகசிய ஏற்பாடுகளில் சுமந்திரனும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அவருக்குப் பரிவட்டம் கட்டுவோரும் காத்திரமான பங்கை வகித்திருந்தார்கள் என்பதுதான் அது. சிங்கள ஆளும் வர்க்கத்துடனும், அதன் தமிழ் அடிவருடிகளுடனும் இணைந்து ஐ.நா. மன்றம் வகுத்திருக்கும் இரகசிய திட்டத்தில் இன்னுமொரு சூட்சுமமும் அடங்கியிருக்கின்றது.

தேசத்தின் குரல் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களால் குள்ளநரி என்று வர்ணிக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவினதும், உலகத் தமிழர்களிடையே பிளவை ஏற்படுத்துவதில் மும்முரமாக செயற்படும் மங்கள சமரவீரவினதும் பங்குதான் அது. ஐ.நா. மன்றத்தின் திட்டம் உள்ளகப் பொறிமுறையை மேற்பார்வை செய்யும் பணியை சிங்கள தேசத்தின் பிரதம மந்திரிக்கும், அதன் வெளியுறவுத்துறை அமைச்சருக்கும் வழங்குகின்றது. இதில் இரண்டு விடயங்கள் மறைந்திருக்கின்றன. முதலாவது, இத்திட்டம் சிங்கள தேசத்தின் பிரதம மந்திரியாக ரணில் விக்கிரமசிங்கவும், வெளியுறவுத்துறை அமைச்சராக மங்கள சமரவீரவும் பதவி வகிக்கும் கடந்த ஏழு மாத காலப் பகுதிக்குள் வகுக்கப்பட்டுள்ளது என்பதாகும். இரண்டாவது, வரும் 17ஆம் நாளன்று நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவே வெற்றிபெறுவார் என்ற ஐ.நா. மன்றம் நம்புகின்றது என்பதாகும்.

இதிலிருந்து இன்னொரு விடயத்தையும் நாம் புரிந்து கொள்ளலாம். சக்தி வாய்ந்த அரசுகளின் பொம்மையாகச் செயற்படும் அமைப்பு என்ற வகையில், ஐ.நா. மன்றம் வகுத்திருக்கும் இத்திட்டத்தின் பின்னணியில் ரணில் விக்கிரமசிங்க சிம்மாசனம் ஏறுவதை விரும்பும் அமெரிக்கா தலைமையிலான சில சக்தி வாய்ந்த நாடுகள் இருக்கின்றன என்பதே அது. அதாவது, வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை வெற்றியீட்ட வைக்கும் நோக்கத்துடன் ஐ.நா. மன்றத்தின் இரகசியத் திட்டம் திட்டமிட்டுக் கசிய விடப்பட்டிருக்கலாம். ரணில் ஆட்சிக்கு வந்தால், படைவீரர்களையும், யுத்த காலத்தின் ஆயுதப் படைகளின் முதன்மை தளகர்த்தாவாக விளங்கிய மகிந்த ராஜபக்சவையும் பன்னாட்டு நீதிமன்றத்திற்கு கொண்டு சென்று மின்சாரக் கதிரையில் அமர்த்திவிடுவார் என்பதுதான் இன்று மகிந்த அணி மேற்கொள்ளும் பரப்புரைகளில் முதன்மையானதாகும். இவற்றுக்கெல்லாம் ஆப்பு வைத்து மகிந்தரின் வாக்கு வங்கியில் சரிவை ஏற்படுத்தி, அதன் ஊடாக ரணில் விக்கிரமசிங்கவை வெற்றிபெற வைப்பதற்கே இத் திட்டத்தை தேர்தலுக்கு முன்னர் ஐ.நா. மன்றம் கசியவிட்டிருக்கலாம் என நாம் கருத முடியும்.

இது இவ்விதம் இருக்க, இதுவிடயமாக சணல்-4 தொலைக்காட்சிக்கு அறிக்கை ஒன்றை ஐ.நா. மன்றம் அனுப்பியிருக்கின்றது. நான்காம் கட்ட ஈழப்போரில் நிகழ்ந்த அனைத்துலக சட்ட மீறல்கள் பற்றி ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையாளரின் செயலகம் மேற்கொண்டிருக்கும் விசாரணைகளின் பெறுபேறுகளையும், பரிந்துரைகளையும் உள்ளகப் பொறிமுறை ஊடாகவா? அல்லது பன்னாட்டுப் பொறிமுறை வாயிலாகவா? அல்லது இவை இரண்டும் கலந்த பொறிமுறைகள் ஊடாகவா? அமுல்படுத்துவது என்பது பற்றிய முடிவுகள் இது வரை எட்டப்படவில்லை என்பதுதான் அது. இதிலும் சில சூட்சுமங்கள் இருக்கத்தான் செய்கின்றன.

அதாவது, வரும் நாடாளுமன்றத் தேர்தலின் முடிவுகளைப் பொறுத்தே உள்ளகப் பொறிமுறையை நிறுவுவதா? அல்லது பன்னாட்டுப் பொறிமுறைக்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதா? அல்லது இரண்டும் கலந்த பொறிமுறைகளை உருவாக்குவதா? என்பது பற்றிய முடிவை ஐ.நா. மன்றம் எடுக்கப் போகின்றது என்பதாகும். அதாவது ரணில் வெற்றி பெற்றால் உள்ளகப் பொறிமுறை, மகிந்தர் வெற்றி பெற்றால் பன்னாட்டுப் பொறிமுறை, இப்பொழுது இருப்பது போன்று சிறுபான்மை அரசாங்கம் உருவாகினால் இரண்டும் கலந்த பொறிமுறை என மூன்று விதமான தெரிவுகளுக்கு ஐ.நா. மன்றம் தன்னைத் தயார்படுத்திக் கொண்டுள்ளது.

அப்படிப் பார்த்தால் வரும் தேர்தலில் மகிந்தர் வெற்றிபெற்றால் மட்டுமே மீண்டும் தமிழ் மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக ஐ.நா. மன்றம் மிளிரத் தொடங்கும் என எதிர்பார்க்கலாம். அதே போன்று சிறுபான்மை அரசாங்கம் உருவாகினாலும் நீண்ட கால நோக்கில் (உடனடியாக அல்ல) தமிழ் மக்களுக்கு நம்பிக்கையும், ஓரளவு நன்மையும் அளிக்கக்கூடிய சில நகர்வுகளை ஐ.நா. மன்றம் செய்யக்கூடும் என்று நாம் கருத முடியும். இவை இரண்டும் நடைபெறாது தேர்தல் ரணில் வெற்றி பெற்று உலகின் சக்தி வாய்ந்த நாடுகள் விரும்பும் உறுதியான அரசாங்கம் உருவாகும் பட்சத்தில் தமிழ் மக்களை ஐ.நா. மன்றம் கைவிட்டுவிடும்.

அப்பொழுது நுளம்பிற்கு மருந்தடித்து மலேரியா நோய் பரவுவதைத் தடுக்கும் வேலையைத் தவிர வேறு எதனையும் செய்ய முடியாத கையாலாகாத அமைப்பு என்ற நிலையில் வைத்து ஐ.நா. மன்றத்தைப் பார்ப்பதைத் தவிர தமிழ் மக்களால் வேறு எதனைத்தான் செய்ய முடியும்?

*நன்றி: ஈழமுரசு*


**Meera Arnold & Co.**

for all your accounting needs...

- Accountancy Auditing
- Company Information
- Payroll
- Book Keeping



45, Chandos Ave, N14 7ES. Tel: 0208 882 2333

**SRI KANTH & CO SOLICITORS**



We practise in the following areas of law:

- Immigration
- Wills & Probate
- Conveyancing - Residential
- Conveyancing – Commercial
- Landlord & Tenant
- Property Sale & Letting
- Liquor Licensing
- Matrimonial / Family
- Employment Matter
- Consumer Problems
- Civil Litigation
- Housing Matters
- Welfare Matters

557 High Road, Wembley, Middlesex, HA0 2DW
www.srikanthsolicitors.co.uk
Tel: 020 8795 0648 Mob: 07831 195 979
Fax: 020 8795 0649

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

| பிரித்தானியா: | கனடா: |
|---|---|
| Tel: 020 7043 4315 | Tel: 647-724-4188 |
| Fax: 020 7043 4312 | Fax: 416-438-7855 |

email: **info@orumanam.com**



## மணமகள் தேவை

1. 43 வயது, 5'8" Canadian citizen graduate working as an engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5520

2. 29 வயது, 5'5" British citizen graduate working in a services industry தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5521

3. 42 வயது, 5'6" தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5523

4. 27 வயது, 5'6" Born & brought up in uk. Finished degree working as an accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5524

5. 37 வயது, 5'6" Living in sri lanka working in a medical business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5529

6. 30 வயது, 6'0" living in India. Graduate working as a sales manager தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5419

7. 32 வயது, 5'8" Born & brought up in uk. Qualified MSC in internet computing working as an IT consultant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4710

8. 30 வயது, 5'7" Living in sri lanka. working in a Bank தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5531

9. 30 வயது, 5'5" Asylum seeker working as a decorating job தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5533

10. 30 வயது, 5'7" British citizen working as a Technician for an Electrical Gaming Company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5325

11. 37 வயது, 5'8" British citizen தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5502

12. 31 வயது, 5'5" British citizen working as a financial sector தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5509

13. 43 வயது, 5'8" British citizen working in an Investment bank as an accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4558

14. 35 வயது, 5'5" British citizen Finished degree in MBA working in a supermarket தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5510

15. 30 வயது, 6'0" British citizen finished degree in MBA working as an accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5511

16. 36 வயது, 5'7" swiss citizen living in swiss working in a Own business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5512

17. 28 வயது, 5'7" German citizen. living in uk finished degree in German language (Hons), working as a language translator தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5513

18. 41 வயது, 5'6" British citizen தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5516

19. 37 வயது, 5'11" Born and brought up in uk, master degree from Imperial college, working as an Investment banker தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5517

20. 34 வயது, 5'5" British citizen, BSc (Hons) in computer science, working as an accounts manager at Deloitte company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 236

21. 42 வயது, 5'6" Divorced, British citizen Graduate தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4816

22. 41 வயது, 5'8" British citizen working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5486

23. 31 வயது, 5'10" Asylum seeker தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5488

24. 35 வயது, 6'1" British citizen Graduate working as an IT Programmer and organizer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5490

25. 30 வயது, 5'7" living in saudi தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5491

26. 33 வயது, 5'0" Refugee visa working as site engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5492

27. 38 வயது, 5'5" Divorced born & brought up in the UK. Currently working in UAE as business and sales director தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5393

28. 29 வயது, 5'5" Born & brought up in uk graduate working in a Electronic engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5498

29. 24 வயது, 5'8" asylum seeker working as a customer services தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5455

30. 27 வயது, 5'6" british born and brought Graduate Engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5458

31. 31 வயது, 6'0" born and brought up in UK. Working in marketing & financial department தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5465

32. 29 வயது, 5'9" graduate Student visa தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5470

33. 32 வயது, 5'3" Student visa Graduate completed in Electrical and Electronic Engineering HNDE. working as a technician தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5472

34. 33 வயது, 6'0" british citizen. Working as a engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5475

35. 26 வயது, 5'5" Living in sri lanka தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5477

36. 26 வயது, 5'6" British citizen working as a engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5478

37. 31 வயது, 5'5" work permit Graduates working as a financial sector. தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4650

38. 31 வயது, 6'1" PSW visa graduates working as a Electronic Engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4687

39. 33 வயது, 5'6" UK citizen graduate working as a manager of five star hotel தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5258

40. 32 வயது, 5'5" work permit graduate working as a Information technology தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3397

41. 32 வயது, 6'0" UK citizen graduate doing own business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 587

42. 31 வயது, 5'6" Divorced UK citizen doing own business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5343

43. 34 வயது, 5'5" British citizen தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5267

44. 32 வயது, 5'6" British citizen doing own business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3272

45. 27 வயது, 5'8" Work permit graduate. Working as a Tesco team Leader தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5451

46. 39 வயது, 5'10" Divorced British citizen graduates now studying PHD தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5444

47. 29 வயது, 5'10" Asylum seeker graduates. currently doing CIMA தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5446

## மணமகன் தேவை

1. 32 வயது, 5'7" Divorced graduate living in Sri Lanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5519

2. 27 வயது, 5'0" Asylum seeker தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5522

3. 24 வயது, 5'4" Born & brought up in uk. Graduate working as a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5526

4. 41 வயது, 5'6" divorced living in Sri Lanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5528

5. 27 வயது, 5'4" living in sri lanka graduate working in a international school in colombo as a teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4536

6. 25 வயது, 5'3" Born & brought up in uk finished degree working in a pharmaceutical company as a laboratory technician தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5530

7. 26 வயது, 5'6" Living in sri lanka Finished Dance degree grade 6 தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5532

8. 32 வயது, 5'2" Born & brought up in uk. Finished degree in Finance தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3914

9. 33 வயது, 5'4" British citizen Graduate working as an Accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5504

10. 28 வயது, 5'6" British citizen working in at Childcare தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5505

11. 27 வயது, 5'3" Finished degree living in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5506

12. 25 வயது, 5'4" Studying CIMA at colombo, living in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5507

13. 30 வயது, 5'3" British citizen Graduate working in medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5400

14. 36 வயது, 5'2" Born and brought up in uk, working as a marketing manager தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5494

15. 26 வயது, 5'0" Living in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5518

16. 27 வயது, 5'2" France Citizen தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5481

17. 27 வயது, 5'1" living in Sri Lanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5485

18. 25 வயது, 5'4" UK Citizen graduate working as a Financial Sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5487

19. 30 வயது, 5'4" British Citizen medical doctor, Catholic, seeking a UK professional தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5489

20. 33 வயது, 5'4" British Citizen working as a research & policy officer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5493

21. 29 வயது, 4'9" British Citizen தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5495

22. 32 வயது, 5'5" Born and brought up in uk working as a accounts Manager. Graduates in BSC horns தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5497

23. 32 வயது, 5'5" Born and brought up in uk working as a accounts Manager. Graduates in BSC horns தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5497

24. 22 வயது, 5'6" British citizen graduates தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5457

25. 31 வயது, 5'3" Living in sri lanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5459

26. 28 வயது, 5'0" Living in sri lanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5476

27. 30 வயது, 5'2" British citizen graduate working as Accounts Assistant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4754

28. 29 வயது, 5'5" British citizen working medial sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3615

29. 31 வயது, 5'6" British citizen working as an investment banker தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 1722

30. 29 வயது, 5'2" British citizen working medial sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3615

31. 29 வயது, 5'7" British citizen graduate working as a information technology தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4703

32. 30 வயது, 5'8" British citizen working medial sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3359

33. 36 வயது, 5'1" Divorced Asylum seeker living uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5438

34. 30 வயது, 5'4" Living in Sri Lanka Graduate working in a English teacher at school தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5439

35. 25 வயது, 4'8" Living in Sri Lanka Graduate working in a maths teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5447

36. 25 வயது, 4'8" Living in Sri Lanka Graduate working Administrative service தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5450

37. 26 வயது, 5'4" British citizen as a doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5448

38. 21 வயது, 5'4" Living in Sri Lanka working as a pharmacist தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5449

39. 35 வயது, 5'3" Living in Sri Lanka Graduate working as a accounts executive தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5425

40. 22 வயது, 5'4" Permanent residence in UK graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5435

41. 32 வயது, 5'4" EU citizen graduate living in Germany தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5431

42. 24 வயது, 5'1" EU citizen graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5424

43. 29 வயது, 5'6" British citizen Graduate working in a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5417

44. 27 வயது, 5'5" British citizen MBBS doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5413

45. 30 வயது, 5'1" British citizen Graduate working in a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5400

46. 30 வயது, 5'10" German citizen graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5399

47. 25 வயது, British citizen graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5398

48. 28 வயது, 5'2" British citizen graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5397

49. 42 வயது, 5'3" Permanent residence in uk divorced working in a factory தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5374

50. 30 வயது, 5'6" Graduate nurse living in sri lanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5391

51. 25 வயது, 5'4" German citizen doctor living in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5376

52. 27 வயது, 5'6" Born and brought up in uk lawyer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5360

53. 29 வயது, 5'4" student visa graduate working as a accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5354

54. 32 வயது, 5'3" British citizen Graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5345

55. 26 வயது, 5'3" British citizen Graduate Medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5343

56. 25 வயது, 5'0" British citizen Graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5331

57. 35 வயது, 5'2" Born and brought up in uk lawyer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5329

58. 22 வயது, 5'2" இந்தியாவில் வசிக்கும் இலங்கை மணமகளுக்கு (Engineer) தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5317

59. 23 வயது, 5'2" British citizen Graduate working in a company மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5225

**இணையத்தில் மேலதிக விபரங்கள்**
**www.orumanam.com**

# உலகில் பாலங்களில் நீளம் கூடியது எத்தனை அடி ?



அகாசி - கய்க்கோ தொங்கு பாலம்

**மாசிலாமணி**
*(ஒரு பேப்பருக்காக)*

உலகின் அதி நீளமான பாலம் 540672 அடி. அதாவது 102.4 மைல்கள். இந்த 102 மைல்கள் நீளமான பாலம் சீனாவின் நான்ஜிங்கிற்கும் ஷங்காய்க்கும் இடையில் வேகத் தொடரூந்துப் பாதையாகப் பயன்படுத்தப்படுகிறது. பாலம் என்ற பதத்திற்கே புது அர்த்தம் கற்பிக்கும் தேவை ஏற்படுவதுபோலல்லவா உள்ளது. ஆதி நாட்களில் ஆற்றைக் கடக்க பயன்பட்ட சாதனம் தான் ஆற்றுப்பாலம் என்று அழைக்கப்பட்டது. ஆற்றுப்பாலம், படுகைப்பாலம், மேம்பாலம் என்று இரட்டைச் சொற்களாகவே இந்தப் பதம் சொல் வழக்கில் உள்ளது. குளங்கள் நிறைந்து அல்லது மழை அதிகமாகி மேலதிக நீர் வீதியை உடறுத்து வளியும்போது வீதிக்கு அரிப்பு ஏற்படாமல் தவிர்ப்பதற்காக தரையை வைரமாக்கி செய்யப்படும் பகுதியை படுகைப்பாலம் (cause way) என்றழைக்கிறார்கள். வீதிக்கு மேலாக செல்லும் பாதைகள் (flyover) இலங்கைக்கு புதிதானாலும் அதை மேம்பாலம் என்று தமிழில் பலர் அழைப்பதைக் கேட்டிருக்கின்றேன். புதிதாகச் சென்னையில் கட்டி முடிக்கப்பட்ட மெற்றோ தொடரூந்துப் பாதையையும் பாலம் என்றுதான் அழைக்கிறார்கள். காரணம் பட்டினத்தின் ஊடாக நகரின் ஆயிரக்கணக்கான வாகனங்களுக்கு எதுவிதத் தடங்கலும் ஏற்படுத்தாது கோபுரத் தூண்களின்மேல் ஓடும் ஒரு பாதை என்பதால்தான்.

தமிழ் நாட்டின் புகழ்பெற்ற இராமேஸ்வரம் அமைந்திருக்கும் பாம்பன் தீவை பெரு நிலப் பரப்புடன் இணைக்கும் பாம்பன் பாலமும் (புதிய பெயர் அன்னை இந்திரா காந்தி பாலம்) பலகாரணங்களால் எம் உள்ளங்களிலிருந்து நீங்காத பாலம். இது 100 ஆண்டுகளின்முன் 2 மைல் நீளத்திற்கு கடலின் ஊடாக கோபுரத் தூண்கள்மேல் கட்டப்பட்ட பாலம். ராமேஸ்வரம் கோயிலுக்கு ஆயிரக் கணக்கானவர்கள் நாள்தோறும் போக வழி அமைக்கும் பாலம்.

தமிழ்நாட்டின் மேட்டுப்பாளையம் ஊட்டி புகையிரதப் பாதையும் அதன் தனிப் பண்பு காரணமாக யுனஸ்கோவின் உலக அரும் பெரும் செல்வங்கள் பட்டியலுள் அடக்கப்பட்டுள்ளது. அந்த 26 மைல் பாதையில் 16 சுரங்கப் பாதைகளும் 250 பாலங்களும் அடங்கி உள்ளன. ஊட்டியிலிருந்து இறங்குவதிலும் பார்க்க மேட்டுப்பாளையத்திலிருந்து மேலே ஏறிச்செல்லும் பயணம்தான் சுவை கூடியதாக அமையும். ஒவ்வொரு 12 அடிக்கும் சராசரி 1 அடி உயரம் இந்தப் பாதையால் புகையிரதம் மேல்நோக்கி ஏறவேண்டும். இரும்புப் பாதை


பாதை நடுவே உள்ள பற் சாதனமும் முன் நோக்கிச் சுற்றும் பற்சாதனங்களும்

என்பதால் உராய்வு பற்றாது இழுக்க முடியாத நிலை ஏற்படும். அதைத் தவிர்க்க பாதைக்கு நடுவே பற்கள் கொண்ட சாதனம் பூட்டப்பட்டுள்ளது. புகையிரத யந்திரத்துடன் பூட்டப்பட்டுள்ள பற்சக்கரங்கள் இந்தப் பற்சக்கரங்களின்மேல் சுற்றுவதால் ஏற்படும் கடும் உராய்வு வண்டியை பின்னுக்கு வரவிடாது தடுத்து மேல்நோக்கி செல்ல தேவையான உந்து ஆற்றலையும் எஞ்சினிலிருந்து பெற்று புகையிரதம் மேலேறுகிறது. இறங்கும்போதும் தேவையற்ற வேக அதிகரிப்பை தவிர்க்க உதவுகிறது.

இக்கட்டுரையை எழுதும் போது என் அகக் கண் முன் தென்படுவது மட்டக்களப்பிலுள்ள இரு பாலங்கள். ஓட்டுமாவடியில் மகாவலி கங்கைக்கு மேலாகச் செல்லும் பாலமும், கல்லடியிலுள்ள பாலமும். இன்று கல்லடிப் பாலம் புதிய வடிவம் பெற்றுவிட்டது. அந்நாளில் அதன் மேலாக வாகனம் செல்லும் போது ஏதோ இரும்புத் திராந்திப் பெட்டிகளினூடாகச் செல்வது போன்ற உணர்வு ஏற்படும். ஓட்டுமாவடிப் பாலமும் மகாவலி கங்கை மேல் போகின்றோம் என்ற உணர்வே ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தும்.

இதுவரை நாம் பேசிய பாலங்கள் அனைத்தும் கோபுரத் தூண்கள்மேல் போடப்படும் இரும்புத்தீராந்திகளாலான பெட்டிப் பாலங்களும் மேல்நோக்கிய வளைவுப் (arch) பாலங்களுமே. பாதைகள் இருமலைகளுக்கு இடையில் உள்ள செங்குத்தான பள்ளத்தாக்கை கடக்கவேண்டிய தேவை ஏற்படும்போதும், ஆழமான நீளமான நீர்நிலையைக் கடக்க வேண்டிய தேவை ஏற்படும்போதும் புதிய வழிமுறை தேவைப் பட்டது. இந்தத் தேவையை பூர்த்தி செய்ய உருவாக்கப் பட்டவைதான் தொங்கு பாலங்கள்.

தொங்கு பாலங்களின் அடிப்படை எளிதானது. இரண்டு தூண்களை நிறுவி, ஒன்றிலிருந்து மற்றையதற்கு பாரிய வடத்தைக் கட்டி அந்த வடத்தில் தொங்க விடுவதுதான் தொங்கு பாலம். பழைய நாட்களில் ஆற்றின் இரு பக்கங்களிலும் உயர்ந்த பாரிய திடமான மரங்கள் இரண்டை நாட்டி ஒன்றறிலிருந்து மற்றையதற்கு கயிற்று வடங்களைத் தொடுத்து அக்கயிற்று வடங்களில் தொங்க விடப்படும் பலகைகளாலான மேடைகளை ஆற்றைக் கடக்கும் சாதனமாகப் பயன்படுத்தினார்கள். இந்த அடிப்படையில்தான் தொங்குபாலத்தையும் தொங்க விடுகிறார்கள். ஆனால் கயிற்றுப் பாலங்களுக்கு மரங்கள் போல் ஆழமான அத்திவாரத்தில் உறுதியாகப் போடப்பட்ட கோபுரங்கள் பயன்படுத்தப் படுகின்றன. வடங்களை கோபுரங்களில் கட்ட முடியாது. கட்டினால் பாலத்தின் பாரமும் செல்லும் வாகனங்களின் பாரமும் சேர்ந்து கோபுரங்களைையே பிடுங்க வல்லவை. இப்பாலங்கள் ஒரு மைல்வரை நீண்டு 6 வாகனங்கள் செல்லும் அகலம் கொண்டவையாக இரு கோபுரங்களுக்கும் இடையில் எந்த ஆதரவும் இல்லாமல் அந்தரத்தில் தொங்குபவை.

கோபுரத்தில் கட்டினால்தானே பிடுங்கும் நிலை ஏற்படும். அதற்குப் பதிலாக கோபுரத்தையே அச்சாகப் பயன்படுத்தும்முறை கையாளப்படுகிறது. சிறு பிள்ளைகள் செக்காடுவதை அவதானித்திருப்பீர்கள். 10 அடிவரை நீளமான சீவிய பனை மரத்தின் நடுப்பகுதியை உறுதியாக நாட்டிய ஒரு தடியின் மேல் வைத்து விட்டு இரு பக்கமும் எடையை சமன்செய்து பல பிள்ளைகள் ஏறுவார்கள். எடை சமன்செய்யப் படுவதால் தடி அச்சாகப் பயன்படுகின்றது. அங்கு பிரயோகிக்கப்படும் எடையின் பெரும்பகுதி தடியை கீழ் அழுத்த செலவிடப் படுகின்றதே அன்றி தடியை சரிக்க செலவிடப்படுவதில்லை. இங்கும் அதைத்தான் செய்கிறார்கள். கோபுரத்தை அச்சாகப்பயன்படுத்தி இருபக்கமும் சம தூரத்திற்கு பாலத்தை தொங்க விடுகிறார்கள்

ஒரு பாலத்தை எடுத்துக்காட்டிற்கு பார்ப்போம். உலகின் நீளமான தொங்கு பாலம் யப்பானிலுள்ள அகாசி-கய்க்யோ. இது ஆழமான கடலைக் கடக்கப் பயன்படுகிறது. ஒவ்வொரு கோபுரத்தையும் அச்சாகப் பயன்படுத்தி இரு பக்கமும் 3000 அடிக்கு கூடுதலாக பாலத்தை நீட்டியுள்ளார்கள். மற்றைய கோபுரத்திலும் அதேபோல் 2x3000 அடி நீளமான பாலம் அமைக்கப்பட்டள்ளது. கடலின் நடுப்பக்கம் செல்லும் பாலங்களின் இரு தொங்கல்களும் ஒன்றுடன் ஒன்று இணைக்கப் பட்டுள்ளது. இப்பொழுது தொங்கலுக்கு தொங்கல் பாலத்தின் நீளம் 12.000 அடிகளைத் தாண்டி விட்டது. இரு பக்கமும் ஏற்கனவே கோபுரத்தை அச்சாக வைத்து ஒவ்வொரு பக்கமும் 12,000 அடிகளுக்கு கூடுதலாகப் போடப்பட்ட வடத்தில் பாலம் தொங்க விடப்பட்டுள்ளது.

இந்தப் பாலம் பற்றிய சில தரவுகளைப் பார்ப்போம். பாலத்தைத் தாங்கும் கோபுரங்களின் அடித்தளம் பாரியது. 197 அடி நீருக்கு கீழே நிமிர்த்திப் புதைக்கப்பட்ட 263 அடி விட்டமும் 230 அடி உயரமும் கொண்ட உருக்குக் குழாயை நிரப்பியே அத்திவாரம் தொடங்குகிறது. கட்டும்போதே மணிக்கு 180 மைல் வேகக் காற்றைச் சமாளிக்கும் தன்மையும் 8.5 வரையான பூகம்பத்தைச் சமாளிக்கும் தன்மையும் பரிசோதிக்கப் பட்டது. இந்தக் கோபுரங்களின் மொத்த உயரம் 928 அடி. நீரிலிருந்து 215 அடி உயரத்தில் பாலம் தொங்குகிறது. சிகரத்தின் வடம் 36830 சிறிய உருக்குக் கம்பிகளை ஒன்றாக இணைத்து முறுக்கப் பட்டது. வடத்தின் சுற்றளவு 11 அடி. பயன் படுத்திய மொத்த உருக்கு கம்பிகளின் நீளம் ஒரு இலட்சத்து எண்பத்தாறாயிரம் மைல்.

தொங்குபாலத்தின் இன்னொரு வடிவமே நாம் Dartfordல் கண்டுகொண்டிருக்கும் வடம் தாங்கும் பாலம்.(cable stayed bridge). கோபுரங்களே அச்சாகப் பயன் படும் அதே சமயத்தில் அவற்றின் சிகரத்திலிருந்து நேரடியாக சீரான இடைவெளியில் எல்லா வடங்களையுமே உச்சியுடன் தொடுத்து பாலத்தின் பாரம் தாங்க வைக்கப்படுகிறது.

உலகின் அழகிய தொங்கு பாலங்களில் ஒன்றான Aizhai பாலம்பற்றியும் சில வார்த்தைகள் கூறியாக வேண்டும். 3760 அடி நீளம் கொண்டதும் இரு மலைகளுக்கு நடுவிலுள்ள பள்ளத்தாக்கை தொடுப்பதும். 80 அடி அகலம் கொண்டதுமான இந்தப் பாலம் தரையிலிருந்து 1100 அடி உயரத்தில் தொங்குகிறது. இரண்டு மலைகளினின்றும் வெளியேறும் சுரங்கப் பாதைகள் இப்பாலத்தினால் இணைக்கப் படுகின்றன. மலைகளின் அடிவாரத்தில் மாடிக் கட்டடங்களுடன் அழகிய வீதி. அம்மாடிக் கட்டடங்களின் உயரத்தை மழுங்கடிக்கும் விதத்தில் 1100 அடி உயரத்தில் இந்த அழகியபாலம்.

இப்பொழுது பல நெடுஞ்சாலைகளையும் நாம் பாலம் கொண்டே தயார் செய்கின்றோம். பேலியக்கொடைக்கும் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கும் துரித நெடுஞ்சாலை ஒன்று அமைக்கப்பட்டு 20 நிமிடங்களில் விமான நிலையம் செல்லக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது. இதில் முக்கியமாக நாம் கவனிக்க வேண்டிய விடயம், வீதிகள் அமைக்க முடியாத பகுதிகளூடாகவும் இந்தப் பாதை கோபுரத் தூண்கள் ஊடாக செல்கிறது. இதே பாதையின் தொடர்ச்சி கட்டுநாயக்க, மன்னார் வீதியாக மாறும்போது இடையிலுள்ள தரை அமைப்புப் பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை. கோபுரத் தூண்கள் மூலம் பாதை அமைத்து விடலாம்.



# சின்னதாய் திரில்லிங்காய்

# ஒரு புன்னகைப் புரட்சி - தமிழ் சினிமா



- வ.சிறீநிவாசன்

கொஞ்ச நாளைக்கு முன்பாக திடீரென்று கிளம்பி 'டிமாண்டி காலனி' என்கிற படத்தைப் பார்த்தேன். 'டிக்கட் கிடைக்குமா?' என்கிற சஸ்பென்ஸோடுதான் எல்லாம் ஆரம்பித்தது. நான் தியேட்டருக்குப் போனபோது அரங்கு நிறைந்து விட்டது. யாரோ ஒருவர் தன்னிடம் அதிகமாய் இருந்த டிக்கட்டுகளை விற்கப் போய் படம் துவங்குவதற்கு ஐந்து நிமிடம் முன்பாக உள்ளே போனேன். படம் ஆரம்பித்ததும் முதல் 15, 20 நிமிடங்கள் "தப்பு செய்து விட்டோமே. பராபரியாக நன்றாக இருக்கிறது என்று யார் யாரோ சொன்னதையும், ஆங்கில ஹிந்துவில் நன்றாக இல்லை என்கிற மாதிரி இருந்த விமர்சனத்தையும் நம்பி வந்து விட்டோமே" என்று சோர்ந்து போனேன். எழுந்து வந்து விடலாம் ஒன்றும் பிரச்னை இல்லை. இன்டர்நெட்டில் புக் செய்த டிக்கட் என்று சொல்லி ஒரு டிக்கட்டுக்கு ரூ. 150/- கொடுத்து வந்தது கொஞ்சம் தயக்கம் தந்தது. இப்படி இருக்கையில் படம் திடீரென்று வேறு மாதிரி ஆகி விட்டது. முழுப் படமும் இறுதி வரை ஆச்சர்யங்கள் பலவற்றை அள்ளித் தந்தது. அஜய் ஞானமுத்து, அருள் நிதி மற்றும் இதில் சம்பந்தப் பட்ட அனைவருக்கும் சந்தோஷமான வாழ்த்துகள். எங்கிருந்தும் அடிக்கப்பட்ட ஈயடிச்சான் காப்பி இல்லை எனும் பட்சத்தில் "கலக்கிட்டிங்கப்பா!" என்று நிச்சயம் சொல்ல வைக்கும் படம். இதன் ஆச்சர்யங்கள் இன்னமும் தொடர்கின்றன. இப்போது தான் தெரிந்தது அஜய் ஞானமுத்து மொமென்டோ, சாரி, கஜினி புகழ் முருகதாசின் சீடராம். எப்படீங்க அப்புறம் இப்படி?

இதைப் பார்த்த வேகம் பல நாளாய் எழுத நினைத்து இருந்த தமிழ் சினிமா பற்றிய கட்டுரையை முடிக்க வைத்தது.

தயாரிப்பாளர்களிலிருந்து, விமர்சகர்கள் வரை விஷயம் தெரியாதவர்களின் கையில் சிக்கிக் கொண்டு தவிப்பதும், இலுப்பைப் பூக்களே கொண்டாடப்படும் ஆலையில்லா ஊராய் தமிழ் சினிமா உலகம் இருப்பதும் இன்று நேற்றாய் நடப்பது அல்ல. உலக அரங்கு என்று வேண்டாம் அகில இந்தியாவிலும் ஒப்பிட்டுப் பார்த்தாலும் நாம் பெருமையாக சொல்லிக் கொள்கிற மாதிரி படங்கள் இங்கு அதிகம் இல்லை.

பேசாத படங்கள், பேசும் என்கிற அடைமொழியோடு பாடும் படங்கள், பேசு பேசென்று பேசிய படங்கள், புராணிகப் படங்கள், சரித்திரப் படங்கள், கத்திச் சண்டை, கத்தாமல் சண்டை போட்ட படங்கள், சமூகப் படங்கள், குடும்பப் படங்கள், காதல் படங்கள், மர்மப் படங்கள், நகைச்சுவைப் படங்கள், பிரசாரப் படங்கள் என்று வகைப் படுத்தியோ, கால கட்டங்களை வைத்தோ பார்த்தாலும் எல்லாம் கலந்த கலவையாக யதார்த்தம் என்கிற பெயரில் யதார்த்தத்துடன் சம்பந்தப் படாத படங்களே அநேகம்.

ஒரு சமயம் சிறீதர் வந்தார். சினிமாவில் செந்தமிழும், சகஜமான தமிழும் கலந்து வந்தன. அவர் காலத்திலும், பின்னருமாக கே. பாலச்சந்தர், கே.எஸ். கோபாலக்ருஷ்ணன் போன்றவர்களும் நல்ல டைரெக்டர்கள் என்கிற அடைமொழியோடு புகழ் பெற்று இருந்தார்கள். சிறீதரின் நெஞ்சம் மறப்பதில்லையும், காதலிக்க நேரமில்லை, ஊட்டி வரை உறவு போன்ற நகைச்சுவைப் படங்களும் அவர் இடத்தைக் காப்பாற்றும் பொழுது போக்குப் படங்கள். கே. எஸ். கோபாலக்ருஷ்ணனின் 'என்னதான் முடிவு' ஆன்மீகப் போராட்டத்தினை சித்தரிக்க முயன்ற முக்கியமான தமிழ்ப் படம். பாமா விஜயம், அனுபவி ராஜா அனுபவி போன்ற நகைச்சுவைப் படங்களில் மிளிர்ந்த கே. பா. முயன்று முயன்று திரையில் கொண்டு வரப் பார்த்த ஆற்றல் மிகு பெண் பாத்திரம் அவரது கடைசிப் படங்களில் ஒன்றான 'கல்கி'யில் மட்டுமே ஓரளவு கை கூடி இருந்தது.

சினிமா பற்றிய அறிவு மிக்கவர்களாலும் (ப. நீலகண்டன், அனந்து) ஒன்றும் பிரமாதமாகச் செய்துவிட முடியவில்லை.

பின்னர் பாரதிராஜா வந்ததும், செட்டியார், ரெட்டியார், ஐயரிடம் (ஏவி.எம்., நாகிரெட்டி, எஸ். எஸ்.வாசன்) மாட்டிக் கொண்டிருந்த சினிமாவுக்கு விடுதலை என்று சில விமர்சகர்கள் சொன்னார்கள். ஆனால் பாரதிராஜா பாக்யராஜ் போன்ற உதவியாளர்களை வைத்து கொண்டு ஆபாசம் இல்லமலோ, கோணல் இல்லாமலோ எடுப்பதும் கடினம். எனினும் நாடகத்துக்கும் ,சினிமாவுக்கும் வித்தியாசம் தெரியாத, துருத்தும் குறியீட்டுக் காட்சிகளாலும் (கே. பா.) வானொலி நாடகங்கள் போல் விஷுவல் என்கிற ஒரு விஷயம் இருப்பதையே மறந்து போன உரத்த குரல் நீட்டிமுழக்கும் வசனங்களாலும் (கே.எஸ்.ஜி.) படங்களைக் கெடுக்காதவர் என்கிற வகையில் பாரதிராஜா பாராட்டுக்குரியவர்.

ஜெயகாந்தன், ருத்ரைய்யா போன்றவர்களின் உயர்தர படங்களுக்கான முழு முயற்சிகள் தவிர மகேந்திரன், பாலு மஹேந்திரா – அவரது காப்பியடிப்பது, செக்ஸின் மீதான அதீத சார்பு இரண்டையும் நீக்கிவிட்டுப் பார்த்தால் (அப்படி எதற்காகப் பார்க்கவேண்டும்?) – படங்களில் காணப்பட்ட நல்ல காட்சிகள், ஃபாசிலின் உயிரோட்டம் மிகுந்த இயல்பான படங்கள், தமிழின் வணிக சினிமாக்களில் நல்ல படங்கள் என்கிற வரிசையில் முதல் ஸ்தானத்தைப் பெறுபவை.

பின்னர் வந்தவர்களில் அகில இந்தியப் புகழ் பெற்ற சில இயக்குனர்களின் படங்கள் போலித் தன்மை மிகுந்தவையாகவே உள்ளன. நுண்புலனுணர்வு உள்ளவர்கள் இவற்றின் பாசாங்கையும், mediocrityயையும், வணிக நோக்கு உந்துதல்களையும் எடுத்த எடுப்பிலேயே உணர்ந்து விடுவார்கள். வேறு சில புது முயற்சிகளும் வலிந்து வன்முறை நிரம்பியவையாகவே இருந்தன. கிராமம் பற்றிய படங்கள் பலவும் ஏமாற்றம் அளிப்பவையாக இருந்தன. சில வெறுப்புறும்படியும். கிராமத்துக் கவிதைகள் எனப் புகழப்பெற்ற படங்களில், ஜெயகாந்தன் பாரதிராஜா பற்றி சொன்ன மாதிரி 'கிராமமும் இல்லை, கவிதையும் இல்லை'.

பெரிய நடிகர்களின், பெரிய டைரெக்டர்களின் ஒரே மாதிரியான படங்கள் தொடர்ந்து வந்து கொண்டே இருந்தன.

மேலே சொன்ன இந்த மாதிரி சூழலில்தான் ஒரு புரட்சி நடக்கட்டுமா என்று கேட்க ஆரம்பித்திருக்கிறது. புரட்சி என்றதும் ரத்தக் களறியால், அழிவால் வருவது என்று தோன்றும். நமது கத்தியின்றி ரத்தமின்றி வந்த யுத்தத்தில் கூட உயிர்ப் பலியோ, போராடியவர்களுக்கெதிரான வன்முறையோ இல்லாமல் இல்லை. ஆனால் கலைகளிலும், எழுத்திலும் புரட்சி, உரத்து, அடுக்கு மொழியில் பேசாமல், வானம் நிறம் மாறுவதைப் போல், துளி உராய்வில்லாமல் வந்ததை இவ்வுலகம் கண்டிருக்கிறது. அந்த மாதிரியில் தமிழ் சினிமாவிலும் ஒரு புரட்சி சமீபத்தில் சப்தமில்லாமல் நிகழத் துவங்கியுள்ளது.

நம்பிக்கையூட்டும் புதிய இயக்குனர்களுக்கு ஒன்றிரண்டு படங்கள்தான் வந்துள்ளன. அதற்குள் நாம் அவசரப் பட முடியாது. நாம் நிறைய one film wonder களைப் பார்த்திருக்கிறோம். பாரதி ராஜாவின் 'பதினாறு வயதினிலே' அதன் sexual vulgarity தவிர ஒரு புதிய திருப்பமாக அமைந்தது. பிறகு அதிகம் தேறவில்லை. ஆனால் கணிசமான படங்கள் எடுத்திருக்கிறார். ருத்ரையாவின் 'அவள் அப்படித் தானும்' அப்படித்தான். அப்புறம் அவ்வளவு தான். ஆனால் இதற்குக் காரணம் அவருக்கு கிட்ட வேண்டிய அடையாளமும், ஆதரவும் கிட்டவில்லை. ஈ.எம். இப்ராஹிமின் 'ஒரு தலை ராகம்'. ஓடவும் செய்தது. உருக்கவும் செய்தது. அவ்வளவு இயல்பான நடிப்பை அந்தக் காலத்தில் பார்ப்பது அரிது. அவரது அடுத்த படம் 'தணியாத தாகம்' என்கிற haunting பெயரில் வந்தது. போய்ப் பார்ப்பதற்குள் ஓடி விட்டது.

இப்போதைய நல்ல படங்களைக் குறிக்க நடிகர் (விஜய் சேதுபதி நீங்கலாக) டைரெக்டர் தயாரிப்பாளர் என்று பிரித்து விசேஷமாய்ச் சொல்ல இன்னும் பல படங்கள் வர வேண்டும்.

'த்ரில்லர்' என்கிற வகையில் படங்களை எடுத்தவர்களில் எஸ். பாலசந்தர் துருவ நட்சத்திரமாகத் தெரிகிறார். பட்ஜெட் கட்டுப்பாடுகள் இல்லாமல் இருந்தால் அவர் நல்ல படங்களை எடுத்திருக்கக் கூடும். பின்பு ஓரளவு இத்துறையில் ராஜ் பரத் படங்கள் எடுத்தார். திருமலை மகாலிங்கத்தின் 'சாது மிரண்டால்' டி. ஆர். ராமச்சந்திரன், நாகேஷ், ஓ. ஏ. கே தேவர் ஆகியோரின் அற்புத நடிப்பாலும் ஒரே காட்சியில் வந்தாலும் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் மேதைகளான டி. எஸ். பாலையா, ஏ. கருணாநிதி ஆகியோரின் அசாத்திய ஆற்றலாலும் மிக சுவாரஸ்யமாக அமைந்தது.

சமீபத்திய காலகட்டத்தில் 'யாவரும் நலம்' (2009 – விக்ரம் குமார்) என்கிற அமானுஷ்யப் படம் கவனத்தை ஈர்ப்பதாக இருந்தது. இன்னொரு நல்ல முயற்சியான 'ஈரம்' (2009 – அறிவழகன் வெங்கடாசலம்) இன்னொரு அமானுஷ்யப் படமாக இருந்தும் வழக்கமான காதல், சாதி, மற்றும் உளவியல் வக்கிரம் போன்ற செருகல்களைக் கொண்டதாக இருந்ததால் யாவரும் நலம் எட்டிய உயரத்தை எட்ட முடியவில்லை.

பீட்ஸா (2012 – கார்திக் சுப்பராஜ்) கூட பார்க்கும் போது அமானுஷ்யமான படமாகத் தான் தெரிந்தது. ஆனால் கடைசியில், இல்லை இல்லை என்று ரொம்ப மனிதமாகத் தன் சுயரூபத்தைக் காட்டும். அந்தப் படத்தின் விசேஷமே அந்த ட்விஸ்ட்தான்.

'தெகிடி' (2013 – பி. ரமேஷ்) ஒரு த்ரில்லர். இதன் கதையின் லாஜிக் பெரிதும் சரியில்லை என்று நான் நினைத்திருந்தேன். என் நண்பர் ஒருவர், என்னோடு வங்கியில் பணி புரிந்தவர், அதை விளக்கியதும் பாதி விஷயங்கள் த்யீரடிகலாக சாத்தியம்தான் என்று தெரிந்து கொண்டேன். அந்தப் படத்தில் இருந்த பிரச்னை கதை நடக்கும் சில நாட்கள் என்னும் கால அவகாசம். ஒரு வங்கிக் கணக்கைத் துவக்குவது, அதில் கோடி ரூபாயைக்கான காசோலையைப் போட்டு பணம் பண்ணுவது அவ்வளவு சுலபமான காரியம் இல்லை. மேலும் சாகடிக்கத் துரத்துபவர்களுக்கு வசதியாக தன் காதலியை அவள் இடத்திலேயே விட்டு விட்டு வந்து விடும் நாயகனும் ஓர் ஆச்சர்யம்தான். இந்தக் கதையில் சொல்லப்பட்ட உளவியல் சமாச்சாரம் தர்க்க ரீதியாகவும், நிதர்சனத்திலும் திருப்தி தருவதாக இல்லை. சப்பைக் கட்டு மாதிரி இருந்தது. மேலும் அந்தப் படத்தில் இருந்த நல்ல அம்சம் ஆபாசம் துளியும் இல்லாமல் எடுத்திருந்ததுதான்.

*அடுத்த பேப்பரில் தொடரும்..*

*நன்றி - சொல்வனம் இணையம்*

வாகன சாரதிப் பயிற்சி

ஒரே மாதத்தில் ஒரே தடவையில் சித்தியடையவேண்டுமா?

அறிமுறைப் பரீட்சைக்கான இலவச பயிற்சி வேண்டுமா?

Smart Driving School

077 688 244 67

Croydon | Wallington | Sutton | Morden | Mitcham | Tolworth

# சினிமா




வழக்கமாக சிங்கப்பூருக்கு டூரிஸ்ட் விசாவில் சென்று ஓவர் ஸ்டேயில் தங்கியிருந்து மாட்டும் வரை சம்பாதித்து பிரம்படி வாங்கி ஊருக்கு திரும்புவதை வழக்கமாக கொண்டிருந்தனர் மன்னார்குடி நகரை சுற்றியிருக்கும் கிராமங்களை சேர்ந்தோர். அதை அப்படியே அச்சு அசலாக நாயகனுக்கு பொருத்தியிருக்கிறார் இயக்குனர்.

சிங்கப்பூரில் சம்பாதித்த பணத்தை வைத்து சொந்த ஊரில் தொழில் செய்து பிழைத்துக்கொள்ள வருகிறார் அதர்வா. அங்கே, மில் அதிபர் லாலின் மகளான ஆனந்தியை காதலிக்கிறார். சொந்த தொழில் தொடங்கும் நேரத்தில் தன் பக்கத்து ஊர் நண்பனின் வீட்டிற்கு செல்லும்போது, அந்த ஊரே குடிதண்ணீர் கிடைக்காமல் உப்புத்தண்ணீரில் வாழ்க்கை நடத்தும் அவலத்தைப் பார்க்கிறார்.

ரெண்டு கிராமங்களுக்கு இடையே நீராதாரம் சம்பந்தமாக பல காலமாக பகை இருந்து வருகிறது. சொந்த ஊர்காரர்கள் உப்புத் தண்ணியை நிலத்தடி நீராக கொண்டிருக்கும் பக்கத்து ஊர்க்கார்களுக்கு நல்ல தண்ணியை தர மறுப்பதால் தட்டி கேட்கும் அதர்வாவின் அப்பா போஸ் வெங்கட் இறந்து போகிறார்.

அதர்வா ஊர்க்காரர்கள் நீர் தர மறுப்பதால் உப்புத் தண்ணியையே குடித்து வரும் பக்கத்து ஊர்க்காரர்கள் கிட்னி கல் வந்து நோய் முற்றி இறக்கிறார்கள். அதர்வா எப்படியும் தண்ணீரை பக்கத்து ஊருக்கு பெற்றுத் தர நினைக்கிறார்.

லால் மக்களிடையே வெறுப்புணர்வை வளர்த்து அதன் மூலம் அரசியல் செய்து பிழைத்து வருகிறார். உள்ளூர் மக்கள் அதனாலேயே தண்ணீர் தர மாட்டோம் என எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள்.

இரண்டு ஊருக்கும் பொதுவான குளம் ஒன்றை ஒவ்வொரு வருடமும் ஏலம் எடுக்கும் லால், அதை பக்கத்து ஊர்க்காரர்கள் குடிப்பதற்கு பயன்படாதபடி அசுத்தம் செய்து வீம்பு செய்வதை தெரிந்து கொள்கிறார் அதர்வா. இதனால் அதர்வா தன் பணத்தை வைத்து குளத்தை ஏலத்தில் எடுக்க முயல்கிறார். இதில் லாலுக்கும், அதர்வாவுக்கும் மோதல் ஏற்படுகிறது.

அதர்வா ஆனந்தி காதல் லாலுக்கு தெரிய வர அதர்வாவை கொல்ல நினைக்கிறார். அதர்வா லாலை சமாளித்து ஆனந்தியை கைப்பிடித்தாரா, தண்ணீரை பக்கத்து ஊருக்கு கொடுத்து உதவினாரா என்பதே சண்டி வீரன் படத்தின் கதை.

அதர்வா துவக்க காட்சிகளில் நடிப்பிலும் முகபாவங்களிலும் அன்னியப்பட்டு தெரிந்தாலும் நேரமாக நேரமாக கேரக்டருடன் அச்சு அசலாக பொருந்தி போகிறார். சண்டை காட்சிகளில் ஓவர் பில்ட் அப்பை காட்டாமல் இயல்பாக சண்டை போட்டிருப்பதால் இயல்பான நாயகனாகவே தெரிகிறார்.

ஆனந்தி இது சுமாரான அழகா என்பது விளங்கவே இல்லை. ஒரு இடத்தில் நல்ல லைட்டிங்கில் நன்றாக இருக்கிறார். அதே வேறொரு நேரம் ரொம்பக் கன்றாவியாக தெரிகிறார்.

படத்தில் சொல்லிக் கொள்ளும்படியான நகைச்சுவை நடிகர்கள் யாருமே இல்லை. நாயகன் நாயகி காதலே காமெடியாக சொல்லப்பட்டு இருக்கிறது.

இது கிட்டத்தட்ட கம்பி மேல் நடக்கும் வில்லங்கமான கதை தான். இரு கிராமங்களுக்கு இடையே நடப்பது சாதி சண்டையாக தான் தெரிகிறது. ஆதிக்க சாதிக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் நடப்பது போல் தான் திரைக்கதையமைத்து இருக்கிறார்கள்.

சில இடங்களில் வசனங்களில் அடிகோடிட்டு காட்டவும் செய்கிறார்கள். நான் அந்த ஊர்க்காரன் என்பதால் தெளிவாக தெரிகிறது. பின்னர் எதிர்ப்பு வந்தால் என்ன செய்வது என்ற பயத்தில் டப்பிங்கில் வசனத்தை மாற்றியிருப்பதும் புரிகிறது.

படத்தின் சாராம்சமான நீர் பங்கீடு நல்ல விடயம் தான் ஆனால் கதையில் சொருகப்பட்டு இருப்பது துருத்திக் கொண்டே இருக்கிறது. படத்தின் பிரதான கதையான அதர்வா ஆனந்தி காதல், அதற்கான எதிர்ப்பு என இருந்தால் களவாணி போல் படு இயல்பான மெல்லிய காமெடி போர்த்திய படமாக பெரிதாக எடுபட்டு இருக்கும்.

அதே போல் படு பயங்கரமான வில்லனாக சித்தரிக்கப்பட்டு இருக்கும் லால். க்ளைமாக்ஸில் தண்ணியடித்து விட்டு அழுது புலம்பி திருந்து கல்யாணம் செய்து வைப்பது அந்த வில்லனின் பில்ட்அப்பையே தவிடுபொடியாக்கி இருக்கிறது. இந்த மாதிரி க்ளைமாக்ஸ் வைப்பது என்று முடிவெடுத்தால் லால் பாத்திரத்தை துவக்கம் முதலே காமெடி கலந்து அமைத்திருக்கலாம்.

அருணகிரி இசையில் மணி அமுதன் எழுதிய "அலுங்குற.. குலுங்குற..." பாடல் தாளம் போடவைக்கும். ஆனால் மற்ற பாடல்கள் படத்தில் எதுவும் ஒட்டவில்லை. அதனால் அதை விட்டுவிடுவோம். சபேஷ் முரளியின் பின்னணி இசை படத்திற்கு நன்றாக கை கொடுத்துள்ளது. பி.ஜி. முத்தையா கிராமத்து அழகை விருந்தாக படைத்திருக்கிறார்.

மொத்தத்தில் மாடர்ன் சிட்டி கலாச்சாரத்தை மட்டும் சில வருடங்களாக பார்த்து வந்த நமக்கு மண் மணம் மாறாமல் நல்ல சமூக கருத்துடன் ஒரு படத்தை கொடுத்திருக்கிறார் சற்குணம். அதற்காகவே கண்டிப்பாக பாராட்டலாம். படம் பெரிதாக ஈர்க்கவில்லை, அதே போல் போரடிக்கவும் இல்லை. நேரம் கிடைத்தால் பாருங்கள்.

*இமயவரம்பன்*

## சினித்துளி

### வெற்றிமாறனின் அடுத்த விருதுப்படம்..!



மாறுபட்ட கதைகளைத் தேர்ந்தெடுத்து படமாக்குபவர் வெற்றிமாறன். அவருடைய அடுத்த படம் விசாரணை. வெளியீட்டுக்குத் தயாரான நிலையில் பாரம்பரியமிக்க வெனிஸ் திரைப்பட விழாவில் போட்டிப் பிரிவில் பங்கேற்று உலக சினிமாக்களுடன் போட்டிபோடவிருக்கிறது. முதன் முறையாக தமிழிலிருந்து வெனிஸ் திரைப்பட விழாவில் கலந்துகொள்ளவிருக்கும் படமும் இதுவே. சந்தேகமில்லாமல் இப்படம் விருதுகளைப் பெறும் என படத்தை பார்த்த பலரும் தெரிவித்துள்ளனர்

ஆட்டோ சந்திரகுமார் என்பவர் தான் ஜெயிலில் அனுபவித்த சம்பவங்களை மையப்படுத்தி எழுதிய லாக்-அப் நாவலை மையப்படுத்தியே இப்படத்தை உருவாக்கியுள்ளார் வெற்றிமாறன்.

### 'பாட்ஷா' இப்போ 'புருஸ் லீ'!



பாட்ஷா என்கிற ஆன்டனி என்ற தலைப்பு கிடைக்காததால், அதை புருஸ் லீ என்று மாற்றியுள்ளார் ஜிவி பிரகாஷ். இசையமைப்பாளர் ஜி.வி.பிரகாஷ் நடிப்பில் 'திரிசா இல்லனா நயன்தாரா', 'பென்சில்' ஆகிய படங்கள் முடிவடைந்து ரிலீசுக்கு தயாராக இருக்கிறது. இந்நிலையில், இயக்குனர் பாண்டிராஜின் உதவியாளர் பிரசாந்த் பாண்டியராஜன் இயக்கும் புதிய படத்தில் நடிக்க ஜி.வி.பிரகாஷ் ஒப்பந்தமானார். இந்த படத்திற்கு முதலில் 'பாட்ஷா' என்ற படத்தலைப்பை வைத்தனர்.

ஆனால் அது ரஜினி ரசிகர்களால் பலமாக எதிர்க்கப்பட, 'பாட்ஷா என்கிற ஆண்டனி' என்று வைக்க முடிவு செய்திருந்தனர். ஆனால்,தற்போது இப்படத்தின் தலைப்பை 'புருஸ் லீ' என்று மாற்றி வைத்துள்ளனர்....

### வாலு 14இல் வெளியாகுமாம்..?



பல்வேறு சிக்கல்களால் நின்ற வாலு படத்துக்காக சிம்புவின் அப்பாவான டி.ராஜேந்தரே தனது மகனுக்காக களத்தில் இறங்கி தானே வெளியிட முன் வந்தார். எனினும் பலர் நீதிமன்றப் படியேற, 'சமரசமாக போகலாமே' என்று நீதிபதி அட்வைஸ் செய்ய.. இதையே காரணமாக எடுத்துக் கொண்டு கடன் வாங்கியவர்களிடம் தீவிர பேச்சுவார்த்தை நடத்தி சில, பல லட்சங்களை கொடுத்தும், எதிர்கால தொழில் உத்தரவாதத்தை வழங்கி முடிவுக்கு கொண்டு வந்துள்ளனர்.

### புலிக்கு 3500 திரையரங்குகள்!



'பாகுபலி' படத்தையடுத்து மற்றுமொரு பெரிய தென்னிந்தியத் திரைப்படமான 'புலி' திரைப்படம் செப்டம்பர் 17ம் தேதியன்று உலகம் முழுவதும் வெளியாக உள்ளது. இந்தப் படத்தை தமிழில் நேரடியாக எடுத்துள்ளார்கள். அதே சமயம் தெலுங்கு, ஹிந்தி உட்பட சில மொழிகளில் டப்பிங் செய்து வெளியிட உள்ளார்கள். படத்தில் சிறீதேவி, ஹன்சிகா, ஸ்ருதிஹாசன் ஆகியோர் இருப்பதால் தெலுங்கிலும் நல்ல வரவேற்பைப் பெற வாய்ப்பு உள்ளது.

தமிழ்நாட்டில் சுமார் 1000 திரையரங்குகளிலும், ஹிந்தியில் சுமார் 1000 திரையரங்குகளிலும், தெலுங்கில் சுமார் 1000 திரையரங்குகளிலும், கேரளா, கர்நாடகா ஆகிய மாநிலங்களில் சுமார் 500 திரையரங்குகளிலும் படத்தை வெளியிட திட்டமிட்டுள்ளார்கள் எனத் தெரிகிறது.

Kayaal IT Solution Ltd
CCTV Camera Installation & Maintenance
EST Aug 2012

Friendly services by qualified Engineer.....





- CCTV Installation and Maintainance
- We are Offering cameras 1000 TVL at Different Prices from £25
- AHD - 720P, 1080p ,1.3 Megapixel Camera, CMOS 1000 TVL all available all day
- Wireless HD IP Cameras also available
- DVR all quality - Sunvision make

CCTV in operation

Only £ 500.00 (Inc VAT)
4 Dome camreas, DAY AND NIGHT, 1000tvl, cmos 4 ch dvr, 500 GB Hard Disk and Install, Online Support.

Only £ 650.00
4 Dome Cameras 12 MM Lens, 30 Meter, Day And Night Vision , 720p, 1080p, 1.3 Mega Pixel AHD 1000 TVL AHD 4 CH dvr With 1TB Hard Drive, All Install And Online Setup

Simply and Friendly Easily In Your Pocket Money!!!
If Any One Start Pay with Month 50 Pounds Then Year after You Make Weekly Earn Regular and Continue Until You Member Weekly earn 250 pounds *For More Details Call - JOTHY -07859892657*

Please Contact : KAYAL-07457178826
JOTHY - 07859892657
*Electrical and Electronic Engineer [BEng Hons ], CITY UNIVERSITY,LONDON MCP2.0, MCT, [WINDOWS7], MCT[WINDOWS8]. PAT CERTIFIED [CITY AND GUILDS]*




Paying Method : By PayPal or Cash
83, Roberts Bridge Road, Carshalton, SM5 1AH

E-Mail : info@kayaalcctv.com
Web : WWW.KAYAALCCTV.COM
COMPANY REG NO : 08193915

Most Trusted and Reliable Name in the Trade Since 1985



Door To Door

# GlenCarriers
Laksiri Seva

## Services We Offer;

- இலங்கை மற்றும் உலகின் எப்பாகத்திற்கும் கடல் மற்றும் விமான மார்க்கமாக குறைந்த விலையில் பொதிகள் அனுப்பும் சேவை
- இலங்கையின் எப்பாகத்திற்கும் வீட்டுக்கு வீடு சேவை (Door to Door) *
- தனிப்பட்ட மற்றும் வர்த்தக சேவைகளும் உண்டு
- உங்கள் பொருட்களை நம்பிக்கையுடன் பாதுகாப்பாக உரிய நேரத்தில் அனுப்பி வைக்கவும் மேலும் 36 க்கும் மேற்பட்ட நாடுகளில் சுமார் 30 வருடங்களுக்கு மேலாக நடாத்திச் செல்லப்படும் ஒரே ஒரு நிறுவனம் கிளென் கரியர்ஸ்

- Sea Freight and Air Freight
- Full Container (20ft and 40 ft)
- Pick-up and Delivery Services in UK and EU
- House Removals with FREE Survey

இலங்கையில் பொதிகளைப் பெற்றுக் கொள்ளுமிடங்கள் — Laksri Seva Customs Bonded Warehouses

Collection from £ 10 within London *

Collection from your door point in any part of UK or Europe*

2 x Tea Carton for £ 19.50 *

* Conditions Apply

**Colombo Warehouse**
Laksiri Seva Pvt Ltd.
66, New Nuge Road,
Peliyagoda, Colombo
+94 1129 177 29-31

**Eastern Province Warehouse**
Laksiri Seva Pvt Ltd.
26, Hmyl Lane, Main Street,
Addappallam, Ninthavur.
T: 0672 0510 50-51

அழையுங்கள் : 020 8743 7353

Mon - Sat 9:30 am to 5:00 pm
10:30am to 2:30pm on all other public & bank holidays.
Closed on Sundays, Christmes day and Boxing day

Web : www.glencarriers.com email : info@glencarriers.com || 14 Allied Way, Off Warple Way, Acton, London W3 0RQ

TSSA event partner nachiyar events
CELEBRATING 24 YEARS OF TAMIL SPORTS IN THE UK

# SUMMER SPORTS festival-2015

Powered by Lebara

Raynes Park Sports Ground,
Tauton Avenue, Reynes Park,
SW20 0BH, London.

NACHIYAR EVENTS :
Suresh 079 5184 7840
Haran 079 8882 6507
www.nachiyarevents.com
info@nachiyarevents.com
www.facebook.com/nachiyareventslondon

Fashion Show | Handsome Show
Circus | Nachiyar Bazaar | Auctions
Want to Win Mr.TSSA / Miss.TSSA Awards?



31st August 2015 9am - 7pm (Bank Holiday)




OFFICIAL SPONSORS: Franco, e KARD, TIME TRAVEL, SRI AISHVARYA SAREES
CO - SPONSORS: UNIQUE Wedding & Party Services, NEW WAVE
OFFICIAL CATERERS: Abi Fast Food, RISING SUN
TRADE OUTLETS: Tech Cube, BIZROOTS, Easyshipping, LIFE LINE, RAINBOW, Embon, Ontime Tours
MEDIA PARTNERS: GTV, IBC தமிழ், வணக்கம் London, www.vanakkamlondon.com
SUPPORTERS: Crystal, ABARNA beauty care, GAP FITNESS

iBELL CREATION +44 74 7722 8 444 | ibellcreation@icloud.com

# Southall Travel

## *Redefining Travel*

*Why travel with*
### Southall Travel?

- ✓ Great value flights to Sri Lanka
- ✓ Number One Travel Agent to India, *with over 20 years experience*
- ✓ Open 24 hours a day, seven days a week. *Call us anytime*
- ✓ Price guarantee *will not be beaten on price*
- ✓ Specialists for worldwide flights and holidays with any airline, anywhere, anytime
- ✓ Fast and reliable service
- ✓ Multilingual staff *offering impartial advice*
- ✓ Trusted household brand *for total peace of mind*

ஏன்
### சவுத்ஹோல் டிராவல்
மூலம் பிரயாணம் செய்ய வேண்டும்?

- ✓ சிறிலங்கா செல்லவிருக்கும் பயணிகளே நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியாக சொகுசாகவும், மனநிம்மதியாகவும் பிரயாணம் செய்லாம்.
- ✓ 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள இந்தியாவிற்கான முதன்மைவாய்ந்த பிரயானமுகவர்.
- ✓ வாரத்தில் 7 நாட்களும் 24மணிநேரம் சேவை. எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.
- ✓ விலைகளுக்கு உத்தரவாதம். விலையில் எங்களை ஒருவரும் வெல்ல முடியாது.
- ✓ உலக விமான விடுமுறைப் பயணங்களையும் எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் எந்த விமானத்திலும் மேற்கொள்ள பிரசித்திபெற்ற நிறுவனம்.
- ✓ நம்பிக்கையான துரித சேவை
- ✓ பலமொழிகளிலும் தேர்ச்சிபெற் ஊழியர்கள். பாரபட்சமற்ற சேவை செய்யக் காத்திருக்கிறர்கள்.
- ✓ நிறைந்த நிம்மதியுடன் பயணம் செய்ய நம்பிக்கையான எல்லோருக்கும் தெரிந்த ஓர் நிறுவனம்

*Call Centre open 24 hours* **0844 855 8017**

ABTA 80626

*Think Travel, Think Southall Travel*

www.southalltravel.co.uk

5553 ATOL PROTECTED